கலைஞர் 100 1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 17 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 09 – சனிக்கிழமை 26 ஆகஸ்ட் 2023 – சென்னை 16+12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 17 : Thiruvalluvar Year - 2054 - Aavani 09 - Saturday 26 August 2023 - Chennai 16+12 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (25.8.2023) இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை' விரிவுபடுத்தி, 31,008 பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 17 இலட்சம் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் தொடங்கி வைக்கும் விதமாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊரான திருக்குவளையில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்து, மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி உணவருந்தினார்.

## இந்தியாவிலேயே முதன்முதலாக திட்டம் அறிமுகம்!

# 'இன்று எனது வாழ்விலோர் பொன்னாள்!'

## 17 லட்சம் மாணவ – மாணவியர் பயன்பெறும் – விரிவுபடுத்தப்பட்ட 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை' திருக்குவளையில் துவக்கிவைத்து – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

நாகை, ஆக.26-

**தமிழ்நாடு முழுவதும் 17 லட்சம் மாணவ - மாணவியர் பயன்பெறும் - விரிவு படுத்தப்பட்ட 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை' திருக்குவளையில் துவக்கிவைத்து உரையாற்றிய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் "இந்தியாவிலேயே முதன்முதலாக இத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இன்று எனது வாழ்விலோர் பொன்னாள்" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்அவர்கள்நேற்று(25.8.2023) இந்தியாவிலேயே முதல் முறையாக, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும், 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை' விரிவு படுத்தி, 31,008 பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 17 இலட்சம் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் தொடங்கி வைக்கும் விதமாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊரான திருக்குவளையில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை' தொடங்கி வைத்து, ஆற்றிய உரை வருமாறு:-

'வாழ்விலோர் பொன்னாள்' என்று சொல்கின்ற வகையில், இந்த நாள் சிறப்பாக அமைந்திருக்கிறது.

**இந்தியத் தலைநகர் வரை வெளிச்சம் பாய்ச்சிய சூரியன்!**

அதைவிடச் சிறப்பு என்னவென்றால், இந்த இடம்! இந்த ஊர்! இந்த திருக்குவளை மண்ணில் உதித்த ஒரு சூரியன், தமிழ்நாடு முழுமைக்கும் ஒளி வீசியது. ஏன், இந்தியாவினுடைய தலைநகர் வரை அதனுடைய வெளிச்சம் பரவியது. அந்தச் சூரியனுடைய பேர்தான், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அப்படிப்பட்ட பெருமைக்குரிய நம் தமிழினத் தலைவர் கலைஞர் படித்த தொடக்கப் பள்ளியில்

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்

## காவல்துறையும், மாவட்ட நிர்வாகமும் ஒரே எண்ணத்துடன் ஒருங்கிணைந்து பணியாற்றி

# குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பதாக உங்கள் பணி அமைய வேண்டும்!

## நாகையில் "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ் சட்டம், ஒழுங்கு தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

நாகை,ஆக.26–

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ் காவல்துறை உயர் அதிகாரிகளுடன் சட்டம் ஒழுங்கு தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், காவல்துறையும், மாவட்ட நிர்வாகமும் ஒரே எண்ணத்துடன் ஒருங்கிணைந்து பணியாற்றி குற்றங்கள் நடைபெறாமல் தடுக்கும் பணியாக உங்கள் செயல்பாடு அமைய வேண்டும் என அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (25.8.2023) நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் காவல்துறை உயர் அலுவலர்களுடன் சட்டம் ஒழுங்கு தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

கோட்டையில் அமர்ந்து திட்டங்களை தீட்டினால் போதும், எல்லாம் தானாக நடந்துவிடும் என்று நினைக்காமல், மக்களுக்கு நெருக்கமாக களத்துக்குச் சென்று, கண்காணிக்கவும் செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் "கள ஆய்வில் முதலமைச்சர்" என்ற திட்டத்தை நாங்கள் தொடங்கியிருக்கிறோம்.

**உள்துறை ஆய்வு மிக மிக முக்கியமானது!**

மற்ற துறை ஆய்வுகளைவிட உள்துறை ஆய்வு என்பது மிக மிக முக்கியமானது. உள்துறை சரியாக இருந்தாலே அனைத்து துறைகளையும் சிறப்பாக இருக்கவேண்டும் என்று நினைக்கின்றவன் நான். அமைதியான மாநிலத்தில்தான் அனைத்து வளர்ச்சிகளும் அமையும் என்று உங்களுக்கே தெரியும்.

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் நடந்ததற்குப் பிறகு, ஏராளமான புதிய புதிய தொழிற்சாலைகள், நிறுவனங்கள், கம்பெனிகள் வந்திருக்கிறது. தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அதற்கு மிக முக்கியமான முதல் காரணம், இந்த ஆட்சி மீதான மரியாதையும், நம்பிக்கையும் தான்!

இரண்டாவது முக்கியக் காரணம், மாநிலத்தில் நிலவும் அமைதி! கடந்த 2 ஆண்டுகளில், எந்தவொரு பெரிய சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சினையும் தமிழ்நாட்டில் ஏற்படவில்லை. அந்த அமைதியை நிலைநாட்டக் கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**காவல்துறையும் மாவட்ட நிர்வாகமும் இணைந்து சட்டம் ஒழுங்கை பராமரிக்க வேண்டும்!**

இந்த நிலை தொடர, காவல்துறையும், மாவட்ட நிர்வாகமும் ஒருங்கிணைந்து சட்டம் ஒழுங்கை பராமரிக்கவேண்டும்.

குறிப்பாக,

● பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள்,

● கள்ளசாராயம் மற்றும் போதைப்பொருட்கள் தடுப்பு,

● கொலை மற்றும் கொள்ளை போன்றவற்றை தடுக்கவேண்டும் என்று பலமுறை நான் அறிவுறுத்தியிருக்கின்றேன்.

இதைத் தொடர்ந்து குற்றங்கள் மிக மிகக் குறைந்துகொண்டு வருகிறது. முழுமையாக குறைந்துவிட்டது என்று நான் சொல்ல மாட்டேன். அது உங்களுக்கும் தெரியும். குற்றங்கள் குறைப்பதாக இல்லாமல், குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பதாக உங்கள் பணி அமையவேண்டும்.

**போதைப் பொருள் தீமை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துங்கள்!**

போதை மருந்து மிகப்பெரிய சட்டம் ஒழுங்கு பிரச்னையாக மட்டுமில்லை, எதிர்கால வளர்ச்சிக்கும் அது தடையாக இருக்கிறது. மாணவர் மற்றும் இளைஞர்களுக்கு

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (25.8.2023) நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் காவல்துறை உயர் அலுவலர்களுடன் சட்டம் ஒழுங்கு தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) ஆ. அருண், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி. சாருஸ்ரீ, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி, திருச்சி மண்டல காவல்துறை தலைவர் ஜி. கார்த்திகேயன், தஞ்சாவூர் சரகம் காவல்துறை துணைத் தலைவர் த. ஜெயச்சந்திரன், நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஹர்ஷ் சிங், திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் து.பெ. சுரேஷ் குமார், தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஸ் ராவத், மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி கே. மீனா, காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 26-08-2023

# யார் யோகி? யார் சந்நியாசி?

திடீரென்று உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் முன்னுக்குக் கொண்டு வரப்படுகிறார். மோடி முகத்தை வைத்து இனி வெற்றி பெற முடியாது என்று நினைப்பவர்கள், யோகியைக் காட்ட முயற்சிக்கிறார்களா எனத் தெரியவில்லை.

'குஜராத் மாடல்' எவ்வளவு பொய்யானதோ – அதை விட மிக மோசமானது யோகியின் உ.பி. 'தாடி வைத்தவர் எல்லாம் தாகூர் அல்ல' என்பதைப் போலத் தான் காவி கட்டியவர் எல்லாம் சந்நியாசி அல்ல.

அடுத்த வேளையையும் – அடுத்த வேலையையும் கருதாமையே துறவறம் ஆகும். மனித வாழ்க்கையில் இருந்தும் – பந்த பாசங்களில் இருந்தும் அனைத்து பதவி – பொறுப்புகளில் இருந்தும் – அனைத்து அதிகாரத்திலும் இருந்தும் விடுபட்டு தன்னை வருத்தி துறவு மேற்கொள்பவரே துறவி என்று ஆன்மீகர் மொழியில் சொல்லப்படுகிறது. திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதும் – மனைவியை பாதியில் விட்டுவிட்டுப் போவதும் – காவி வேட்டி உடுத்திக் கொள்வதும் சந்நியாசியின் அடையாளம் என்று சிலர் நினைத்துக் கொள்கிறார்கள்.

பலனில் பற்றுக் கொண்டு எந்தச் செயலையும் செய்யாமல் இருப்பதே துறவு நிலை. அந்த வகையில் பார்த்தால் வோட்டுக் கேட்டு அலைந்த – அதிகாரத்தின் அத்தனை பலனையும் அனுபவிக்கும் யோகி ஆதித்யநாத் எப்படி சந்நியாசி ஆவார்?

'பேய்போல் திரிந்து பிணம்போல் கிடந்திட்ட பிச்சை யெல்லாம் நாய்போல் அருந்தி நரிபோல் உழன்று நன்மங்கையரைத் தாய்போல் கருதித் தமர்போல் அனைவர்க்கும் தாழ்மைசொல்லி சேய்போல் இருப்பர்கண் டீருண்மை ஞானம் தெளிந்தவரே' – என்பது பட்டினத்தார் பாடல் ஆகும்.

இந்த அளவுக்கு எல்லாம் யோகியிடம் எதிர்பார்க்க முடியாது. மிகமிகச் சாதாரண அறநெறிகளுக்கும், விதிமுறைகளுக்கும், சட்டதிட்டங்களுக்கும், நியாய தர்மங்களுக்கும் சம்பந்தமில்லாத ஆட்சிதான் யோகியின் ஆட்சி ஆகும். இந்தியாவில் மிகமிக மோசமான ஆட்சியில் முதலிடம் யாருக்காவது தர வேண்டுமானால் அது உத்தரப்பிரதேசத்தில் யோகி ஆதித்யநாத் ஆட்சிக்கு தான்.

பள்ளிப் பிள்ளைகள் சப்பாத்திக்கு குருமா இல்லாமல் உப்பு வைத்துச் சாப்பிட்ட காட்சியை உ.பி.யில் தான் பார்த்தோம்.

**கொரோனா காலத்தில் மக்களைக் காப்பாற்றக் கூட எந்த உள்கட்டமைப்பு வசதியும் இல்லாமல் இருந்த மாநிலம் உ.பி. ஒவ்வொரு மாநிலமும் தினமும் எத்தனை பேருக்கு பாதிப்பு என்பதை அறிக்கையாகக் கொடுத்து வந்தபோது அது பற்றி அறிக்கை கொடுக்காத மாநிலம் உ.பி.கொரோனா ஊசிக்குப் பதிலாக நாய்க்கடி ஊசி போட்ட மாநிலம் அது. மக்கள் தேவைக்கு ஆக்ஸிஜன் ஏற்பாடு செய்ய முடியாத காரணத்தால் அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் கண்டனத்துக்கு உள்ளானது யோகி ஆட்சி. மின்சார வசதியும் கழிப்பறை வசதியும் இல்லாமல் ஏன் மருத்துவமனைகள் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டது அலகாபாத் நீதிமன்றம்.**

**உத்திர பிரதேசத்தில் ஆக்ஸிஜன் தட்டுப்பாடு காரணமாக பலர் உயிரிழந்த நிலையில் ஆக்ஸிஜன் தட்டுப்பாடு உள்ளது என யாராவது கூறினால் அவர்கள் மீது தேசிய பாதுகாப்பு சட்டம் பாயும் என உ.பி முதல்வர் யோகி மிரட்டினார். உத்திர பிரதேச கொரோனா நிலவரம் மோசமாக உள்ளது என செய்திகள் பரப்பப்பட்டால் அவர்கள் சொத்துகள் பறிமுதல் செய்யப்படும் என யோகி மிரட்டினார். மரணத்தோடு போராடிக் கொண்டிருந்த தன் தாத்தாவுக்காக, ஆக்சிஜன் கேட்டு ட்விட்டரில் பதிவிட்ட இளைஞர் மீது, உத்தரப் பிரதேச காவல்துறை வழக்குப் பதிவு செய்தது.**

பொதுவாகவே பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லாத மாநிலம் அது. பாலியல் பலாத்காரம் அதிகம் நடக்கும் மாநிலங்களில் முதலாவது இடத்தில் உத்தரப்பிரதேசம் இருக்கிறது. அதிலும், சிறுமிகள் பாலியல் பலாத்காரம் நடக்கும் மாநிலத்திலும் உ.பி. முதலாவது இடத்தில் இருக்கிறது. ஒன்றிய அரசின் புள்ளிவிபரமே இதைச் சொல்கிறது.

2020 அக்டோபர் மாதம் உத்திரப்பிரதேச மாநிலத்தில் ஒரு அப்பாவிப் பெண், நான்கு பேரால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டார். இறந்த அந்த பெண்ணில் உடலை அவர்களது குடும்பத்துக்குக் கூட காட்டாமல், தராமல் போலீஸே எரித்து விட்டார்கள். அந்தப் பெண்ணின் தந்தையைக் கடத்தி வைத்து விட்டு இதனை செய்திருக்கிறார்கள். அந்தக் குடும்பத்துக்கு ஆறுதல் சொல்லச் சென்ற ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி ஆகிய இருவரையும் அந்த ஊருக்குள் அனுமதிக்கவில்லை யோகி அரசு. பிரியங்காவை போலீஸார் பிடித்து தள்ளினார்கள். கொலை செய்யப்பட்ட பெண்ணின் குடும்பத்தை யாரும் பார்க்க அனுமதிக்கவில்லை. அந்தப் பெண்ணின் குடும்பத்தை வீட்டுச் சிறையில் வைத்தார்கள். இது தான் யோகி அரசு.

ஹத்ராஸ் பாலியல் வன்கொடுமை குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற கேரள பத்திரிகையாளர் சித்திக் காப்பான் கைது செய்யப்பட்டார். அவரை உ.பி அரசு சிறுநீர் கழிக்கக் கூட விடாமல் கட்டி வைத்துச் சித்ரவதை செய்தது. சித்திக் காப்பனின் மனைவி ரைகாந்த் காப்பான், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ரமணாவுக்கு கடிதம் எழுதி, சித்திக் காப்பானை சித்திரவதையில் இருந்து காப்பாற்றுமாறு கேட்டுக் கொண்டார். பத்திரிகையாளர் கதியே இது என்றால், சாதாரண பொதுமக்களைப் பற்றிச் சொல்ல வேண்டியது இல்லை.

அரசாங்கத்துக்கு எதிராக எழுதும் பத்திரிகையாளர்கள் அரசாங்கத்துக்குப் பதில் சொல்ல வேண்டும் என்ற அவரது சமீபத்திய உத்தரவு, 'அறிவிக்கப்படாத எமர்ஜென்சியைப் போன்றது' என்று சொல்லி இருக்கிறார் பத்திரிகையாளர் அம்பரீஷ் குமார். தவறான செய்தியாக இருந்தால் வழக்கு பதிந்து சிறைக்கு அனுப்பச் சொல்லி இருக்கிறார் இந்த சந்நியாசி. இது சட்டமா? சாபமா?

சட்டம் என்ற பெயரால் சிறுபான்மையினர், தலித்துகள் வேட்டையாடப்படும் மதவாத பாசிச ஆட்சி அது.

**மனித வள மேம்பாட்டில் 35 ஆவது இடம்**

**மேல்நிலைக் கல்வியில் 24 ஆவது இடம்**

**பள்ளிக் கட்டமைப்பில் 27 ஆவது இடம்**

**பிறக்கும் குழந்தைகள் மரணத்தில் 35 ஆவது இடம்**

**குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாட்டில் 20 ஆவது இடம் தனிநபர் சராசரி உற்பத்தியில் 31 ஆவது இடம்**

**பயிற்சி பெற்ற ஆசிரியர்களை வைத்திருப்பதில் 30 ஆவது இடம்**

**அலைபேசி வசதியில் 33 ஆவது இடம்**

**கர்ப்பிணி பெண்கள் உயிரிழப்பில் 16-ஆவது இடம் - இது தான் இன்றைய உத்தரப் பிரதேசம் ஆகும்.**

யோகி யாரோடு போட்டி போடலாம் என்றால் மோடியுடன் போட்டி போடலாம். இருவரும் தான் ஜாடிக்கு ஏற்ற மூடி. மோடியின் சாயம் போனதும், யோகியை வைத்து விற்கப் பார்க்கிறார்கள். யோகியின் சாயமும் வெளுத்துப் போனது தான்!



முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (25.8.2023) நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணியில், அண்மையில் திருமணம் நடைபெற்ற திருவாரூர் மாவட்டம், கொல்லாபுரம் கழகத் தோழர் சென்னை செல்லப்பா ஹாஜாமைதீனின் மகன் முஹம்மது சபிருதீன் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த வட்டாட்சியர் எஸ். தமீமுல் அன்சாரியின் மகள் திருமதி நஜ்மினா ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். உடன் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத் தலைவர் என். கவுதமன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### இலட்சக்கணக்கான குழந்தைகளுக்கு காலைச் சிற்றுண்டி தந்து

# பசிப்பிணி போக்கும் மருத்துவராகத் திகழ்கிறீர்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுதிய கடிதத்தில் – இனமானப் பேராசிரியரின் மகன் அன்புச் செல்வன் பாராட்டு!

**சென்னை, ஆக. 26-**

**விரிவுபடுத்தப்பட்ட, 'முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டத்தை' முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று திருக்குவளையில் தொடங்கி வைத்ததையொட்டி, முதல்வருக்கு எழுதிய கடிதத்தில், இனமானப் பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச்செல்வன் அவர்கள், "இலட்சக்கணக்கான குழந்தைகளுக்கு உணவு வழங்கி பசிப்பிணி போக்கும் மருத்துவராக தாங்கள் (முதல்வர் மு.க.ஸ்டாலின்) திகழ்கிறீர்கள்!" என்று பாராட்டுத் தெரிவித்துள்ளார்.**

அ.அன்புச் செல்வன் அவர்கள், முதல்வர் அவர்களுக்கு எழுதிய அக் கடிதம் வருமாறு:-

அன்புச் சகோதரர், தலைவர் ஸ்டாலின் அவர்களே,

அன்பான வணக்கம்,

பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டத்தை தமிழகமெங்கும் விரிவுபடுத்தத் திட்டமிட்டது சிறப்பான ஒன்று.

அத்திட்டத்தை விரிவுபடுத்த திருக்குவளை சென்றுள்ள



தங்களை, எப்படிப் பாராட்டினாலும் தகும். தாங்களும், தங்களின் மகத்தான இத்திட்டமும் வெற்றி பெற வாழ்த்துகள்.

திருவள்ளுவர்,

**"உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு"**

என்றுரைக்கிறார்.

பசி, வலி தருமென்பதால், அதனை நீக்குபவனை, 'பசிப்பிணி மருத்துவன்' என தமிழ் இலக்கியங்கள் சொல்கின்றன.

காலை உணவு, மனித உடல் நலத்திற்கு மிகவும் முக்கியமானது, என மருத்துவர்கள் அறிவுரைக்கின்றனர்.

நல்ல உடல்நலத்தோடு திகழ சிறார்களுக்கு, அதுவும் வளரும் இளம் பருவத்தினருக்கு ஊட்டச் சத்து நிரம்பிய காலை உணவு மிக முக்கியம் என உணர்ந்த தாங்கள், பசிப்பிணி போக்கும் மருத்துவராக லட்சக்கணக்கான குழந்தைகளுக்கு காலைச் சிற்றுண்டி தரும் சிறந்த திட்டத்தினைத் தந்துள்ளீர்கள்.

வாழ்க பசிப்பிணி போக்கும் தாங்கள்!

மீண்டும் வாழ்த்துக்கள்!

வெல்க தமிழ் நாடு!

வாழ்க, வளர்க தங்களின் தமிழர் தொண்டு!

வணக்கம்,

நட்புடன்,

**அ.அன்புச்செல்வன்**

25.08.2023.

இவ்வாறு அக்கடிதத்தில் அ.அன்புச் செல்வன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி., முன்னிலை! பா.ஜெகதீஷ் தலைமை!

# துறைமுகம் மேற்கு பகுதியில் - மாவட்ட இளைஞர் அணி சார்பில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## தலைமை கழக சட்ட ஆலோசகர் பி.வில்சன் எம்.பி. வழங்குகிறார்!

சென்னை, ஆக.26-

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதியில் கலைஞர்100, 30வது நிகழ்ச்சியாக "பாதை நம்மிடம்! பயண திராவிடம்!" எனும் தலைப்பில் 27.08.2023 ஞாயிற்றுக் கிழமை அன்று மாலை 5.30 மணியளவில், சென்னை, ஜி.எம்.டி.டி.வி. பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவிற்கு சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பா. ஜெகதீஷ் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், இசட்.ஆசாத், பி.ஶ்ரீராமுலு, என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, டி.லோகேஷ், எம். வினாயகம், எம்.இப்ராஹிம் கனி, ஆர்.கலைச்செல்வி, எல்.சம்பத்குமார், பா.பிரதீப்குமார், ஜே.பாலமுருகன், க.வினோத், ஜி. ஜெ.பிரபு, எஸ்.தனசேர், ஆர்.டி.சங்கர் நானா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மே.ஜனார்த்தனம், கே.ஆர். அபரஞ்சி, ம.முத்துகுமார், கே.சரஸ்வதி, ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ. தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன், டி.ராமமூரத்தி, ப.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், சேப்பாக்கம் வே.பிரபாகரன், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே. கவியரசு, அ.நா.பார்த்திபன் வெ.பரிமளம் எம்.சி., ராஜேஷ் ஜெயின் எம்.சி., எல்.நவீன் எம்.சி. ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர்.

இந்நலத்திட்டம் வழங்கும் விழாவில் தலைமை கழக சட்ட ஆலோசகர் பி.வில்சன் எம்.பி., ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தையற்தொகையுடன் கூடிய சீருடை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிக்கின்றார்.

மேலும், இவ்விழாவில் மேயர் பிரியாராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப. தாயகம் கவி, ஆ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், ப.ரங்கநாதன் முன்னாள் எம்.எல்.ஏ., கே.எஸ். ரவிச்சந்திரன் எம்.எல்.ஏ., பி.கே.மூர்த்தி, தமிழன் பிரசன்னா, சங்கர் நாராயணன், எஸ்.மணிமுடி, கே. எஸ்.எம்.நாதன், வே.உமா காந்தி, பரிதிஇளம்சுருதி, கே.ஏகப்பன், புனிதவதி எத்திராசன், இசட்.ஆசாத், சரிதா மகேஷ்குமார், கூ.பி. ஜெயின், சொ.வேலு, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஐ.சி. எப். வ.முரளிதரன், எ.நாகராஜன், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு, வே.வாசு, சொ.வேலு, வி.சுதாகர், ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

54 வது வட்டக் கழக செயலாளர்கள் ஆர்.ரவிச்சந்திரன், பா.கதிரவன், மா.ஜெய்சங்கர் ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

# தமிழ்த் தென்றல் திரு.வி.க. பிறந்த நாள்!



ஆகஸ்டு 26.
தமிழுக்குத் தொண்டு செய்த "தமிழ்த் தென்றல்" திரு.வி.க. அவர்களின் 141 ஆவது பிறந்த நாள் – நின் புகழ் வாழ்க !



”கள ஆய்வில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று (25.8.2023) ஆய்வு நடத்திய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் தொழில் மற்றும் வணிக சங்கப் பிரதிநிதிகள் சந்தித்து, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக பல்வேறு சலுகைகளை அறிவித்து செயல்படுத்தி வருவதற்காகவும், தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக திகழச் செய்திட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதற்காகவும் நன்றி தெரிவித்துக் கொண்டனர். அப்போது முதலமைச்சர் அவர்கள் சங்கப் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். உடன் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி. சாருஸ்ரீ, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



”கள ஆய்வில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று (25.8.2023) ஆய்வு நடத்திய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சந்தித்து, மீனவர் நல மாநாடு நடத்தி, நலத்திட்ட உதவிகளை வழங்கி, மீனவர்களின் நல்வாழ்விற்காக பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். அப்போது முதலமைச்சர் அவர்கள் மீனவர் சங்கப் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். உடன் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கிஸ், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி. சாருஸ்ரீ, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

# காவலர்களின் செயல்பாடுகள்தான் அரசுக்கு நற்பெயரைப் பெற்றுத் தரும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

குட்கா, பான்மசாலா போதைப்பொருளின் தீமைகள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்.

கடந்த 2 ஆண்டுகளாக, ஆகஸ்ட் 11 அன்றைக்கு என் தலைமையில் போதைப் பொருட்கள் எதிர்ப்பு உறுதிமொழி எடுக்கும் நிகழ்ச்சியை நடத்தியதை நீங்கள் செய்திகளில் பார்த்திருப்பீர்கள்.

போதைப்பொருள் விற்பனை செய்யும் நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். இனி கஞ்சா மற்றும் போதைப் பொருள் விற்பனை கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட காவல்துறையினர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் கடுமையாக எச்சரிக்கிறேன்.

● பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை பொறுத்த வரை, பள்ளி மாணவர்களிடையே பாலியல் துன்புறுத்தல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் குற்றவாளிகளுக்கு ஃபோக்சோ சட்டத்தின்கீழ் தண்டனை பெற்றுதர சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்குதல் மற்றும் ஃபோக்சோ வழக்குகளை தீவிரமாக கண்காணித்து தண்டனை பெற்றுத் தரும் வரை தொடர் கண்காணிப்பு போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

**வழக்குகளை கண்காணித்து குற்றப்பத்திரிகைக்கு உறுதி செய்க!**

● எஸ்.பி மற்றும் டி.எஸ்.பி, உங்கள் வரம்புக்குள்ளாக பதியப்படும் அனைத்து வழக்குகளையும் தொடர்ந்து கண்காணித்து, சரியான நேரத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதை நீங்கள் உறுதி செய்யவேண்டும்.

● நீதிமன்ற நிலுவை வழக்குகளை கண்காணித்து, சாட்சிகள் மற்றும் தேவையான தரவுகளை நீதிமன்றத்தில் வழங்கி, தண்டனை பெற்று தரவேண்டும்.

● குற்றப்பத்திரிகை பதியப்பட்டு, நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்படாத வழக்குகளை உடனடியாக நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்லவேண்டும்.

● நீதிமன்றங்களுடன் இணைந்து இந்த பணிகளை துரிதப்படுத்தி, உடனடியாக தண்டனை வாங்கித் தந்தால் மட்டும்தான் குற்றச் செயல்களை தடுக்க முடியும்.

> **தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் நடந்ததற்குப் பிறகு, ஏராளமான புதிய புதிய தொழிற்சாலைகள், நிறுவனங்கள், கம்பெனிகள் வந்திருக்கிறது. தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அதற்கு மிக முக்கியமான முதல் காரணம், இந்த ஆட்சி மீதான மரியாதையும், நம்பிக்கையும் தான்!**

● பொதுமக்கள் காவல் நிலையங்களுக்கு வரும்போது, அவர்களை நீங்கள் நடத்துகின்ற விதத்தை பொறுத்துத்தான் காவல்துறையின் பிம்பம் கட்டமைக்கப்படும். அதை உணர்ந்து பொறுப்புடனும், கனிவுடனும் நடந்துகொள்ள வேண்டும்.

**முதல்வரின் முகவரி திட்டத்தில் பெறப்படும் மனுக்களுக்கு சிறப்பு கவனம்!**

இதற்காகத்தான் ஒவ்வொரு காவல் நிலையத்திலும், வரவேற்பாளர்களை நியமித்திருக்கிறோம். அவர்களுக்கு உரிய பயிற்சி அளிப்பதை எஸ்.பி., டி.எஸ்.பி., ஆகியோர் உறுதி செய்யவேண்டும்.

● முதல்வரின் முகவரி திட்டத்தின்கீழ் பெறப்படும் மனுக்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தி சரியான தீர்வு காணப்படவேண்டும்.

**குறை தீர்க்கும் கூட்டத்தில் எஸ்.பி. கண்டிப்பாக இருக்க வேண்டும்!**

பொதுமக்கள் மிகவும் நம்பிக்கையோடு எனக்கு மனுக்களை அனுப்புகிறார்கள். எனவே, சட்டப்படி மேல்நடவடிக்கை எடுத்து, அந்த விவரங்களை மனுதாரருக்கு தெரிவிக்கவேண்டும். இது பற்றி நானே மனுதாரர்களிடம் பேசித் தெரிந்துகொள்ளப் போகிறேன். காவல் துறையினரால் எவ்வாறு நடத்தப்பட்டார்கள் என்று கேட்டுத் தெரிந்துகொள்ள இருக்கிறேன்.

அதனால், ஒவ்வொரு மனு மீதும், சரியான விசாரணை செய்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தவேண்டும் என்று நான் ஏற்கனவே அறிவுறுத்தி இருந்தேன்.

சில மாவட்டங்களில், காவல் கண்காணிப்பாளர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முழுமையாக கலந்து கொள்ளவில்லை என்று தெரிய வந்திருக்கிறது. இப்படியான புகாருக்கு இடமில்லாத வகையில் நடந்துகொள்ள வேண்டும்.

பொதுமக்கள் நம்பிக்கையுடன் உங்களிடம் குறையை சொல்ல வரும்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கண்டிப்பாக அங்கு இருக்கவேண்டும்.

நமது அரசு காவல்துறையினருக்காக கடந்த 2 ஆண்டுகளில்,

1. வாரத்தில் ஒருநாள் விடுமுறை.
2. பெண் காவலர்களுக்கு 8.00 மணிக்கு பணிக்கு வரும் சலுகை
3. காவலர்களின் குழந்தைகளுக்கு காப்பக வசதி.
4. காவல் நிலைய வசதிகளை மேம்படுத்துதல்
5. காவலர்களுக்கான குடியிருப்புகளை மேம்படுத்துதல் மற்றும் புதிய காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல்

போன்ற பல நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொண்டிருக்கிறது.

காவலர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் மற்றும் வசதிகள் காவல் கண்காணிப்பாளர்கள் கண்காணிக்கவேண்டும். அப்போதுதான் அவர்களால் சிறப்பாக பணி செய்ய முடியும். அடுத்து வரும் சில மாதங்கள் நமக்கு மிகவும் முக்கியமானவை.

> **போதைப்பொருள் விற்பனை செய்யும் நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். இனி கஞ்சா மற்றும் போதைப்பொருள் விற்பனை கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட காவல்துறையினர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் கடுமையாக எச்சரிக்கிறேன்.**

அடுத்த வாரம் வேளாங்கண்ணி கொடியேற்றம் நடக்கப் போகிறது. அங்கு வரும் பக்தர்கள் திருவிழா நிகழ்ச்சிகளில் கலந்துக்கொள்ள ஏதுவாக, அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் கையாண்டு எந்த அசம்பாவிதமும் ஏற்படாமல், கண்காணிக்கவேண்டும்.

அடுத்த மாதம், பிள்ளையார் சதுர்த்தியை முன்னிட்டு, சிலை நிறுவும் இடங்கள், சிலை ஊர்வலங்கள் ஆகியவற்றை ஒழுங்குப்படுத்தி பிரச்சினை ஏற்படாமல் நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்.

**காவலர்களின் செயல்பாடுகள்தான் அரசுக்கு நற்பெயரைப் பெற்றுத் தரும்!**

காவல்துறை மிக முக்கியமான துறை. உங்கள் செயல்பாடுதான் அரசுக்கு நல்ல பெயரை வாங்கித் தரும். அதனால் உயர் அதிகாரியிலிருந்து கடைநிலைக் காவலர் வரை ஒருங்கிணைந்து ஒரே எண்ணத்துடன் பணியாற்ற வேண்டும்.

இது வரை மாநிலத்தின் அமைதியைக் காக்கும் பணியை சிறப்பாக செய்துகொண்டு வருகிறீர்கள். இனியும் அது தொடரட்டும், மேலும் மேம்படட்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில், முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு)

ஆ. அருண், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி. சாருஸ்ரீ, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி, திருச்சி மண்டல காவல்துறை தலைவர் ஜி. கார்த்திகேயன், தஞ்சாவூர் சரகம் காவல்துறை துணைத் தலைவர் த. ஜெயச்சந்திரன், நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஹர்ஷ் சிங், திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் து.பெ. சுரேஷ் குமார், தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஸ் ராவத், மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி கே. மீனா, காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### தமிழ்நாடு அரசின் சார்பில்- தமிழ்த் தென்றல்

# திரு.வி.க. 140-வது பிறந்த நாள்!

## திருவுருவச் சிலைக்கு இன்று அமைச்சர்கள் மாலை அணிவித்து மரியாதை!

*சென்னை, ஆக.27-*

திருவாரூர் விருத்தாசல முதலியார் மகனார் கலியாண சுந்தரனார் என்ற பெயர்தான் திரு.வி.க. என நிலைத்தது. திரு.வி.க. பெரும் புலமை கொண்டிருந்ததோடு பாடம் நடத்திய பள்ளியாசிரியர், பதிப்பாசிரியர், உரையாசிரியர், இதழாசிரியர், சமய அரசியல் உண்மையைப் பரப்பியவர், செந்தமிழ்ப் பேச்சாளர், பொருள் செறிந்த எழுத்தாளர், இளைஞருக்கு வழிகாட்டி, தொழிலாளரின் உற்ற நண்பர், உயர்ந்த நிலையில் இருந்தவர் தொடங்கி ஏழை, எளியவர் வரை எல்லோரோடும் இசைந்து இனிது பழகியவர், எல்லோரும் மதிக்கும் வண்ணம் வாழ்ந்தவர், படிப்பாலும், பண்பாலும், உழைப்பாலும் ஒழுக்கத்தாலும் நாட்டுப் பற்று, மொழிப்பற்றாலும் அரசியல் பொதுத் தொண்டினாலும் புதுமை உணர்வாலும் சிறப்புற்று வாழ்ந்த இவரை இராயப்பேட்டை முனிவர் என்றே அழைத்தனர்.

திரு.வி.க அவர்கள் தற்போதுள்ள சென்னை மாவட்டம், மதுரவாயல் வட்டம், துண்டலம் கிராமத்தில் 26.08.1883 அன்று பிறந்தார். வெசுலி பள்ளியில் ஆசிரியராக இருந்த யாழ்ப்பாணம் நா.கதிரைவேற்பிள்ளை மற்றும் மயிலை தணிகாசல முதலியாரிடம் தமிழ்க்கல்வி கற்றவர். தேசபக்தன், திராவிடன், நவசக்தி போன்ற நாளிதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றிய தன் மூலம் சிறந்த இதழாசிரியராகவும் தமிழ்நாட்டில் தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டதன் மூலம் சிறந்த தொழிற்சங்கவாதியாகவும் “என் கடன் பணி செய்து கிடப்பதே” என்று 50 ஆண்டுகளில் அரசியல், சமுதாயம், சமயம் சார்ந்த 55 க்கு மேற்பட்ட நூல்களையும் எழுதி சிறந்த எழுத்தாளராகவும் தமிழுக்கு தொண்டாற்றியுள்ளார்.

திரு.வி.க. அன்புள்ளத்தில் காந்தியடிகளின் சீடர்; பொருளாதாரத்தில் கார்ல் மார்க்ஸ் இன் பக்தர்; இந்த சிறப்பு இயல்புகளால் தான் அவர் சென்ற காலம் - நிகழ்காலம் - வருங்காலம் ஆகிய மூன்றுக்கும் சார்பாளராக இருந்தார். முரண்பாடு கொண்ட கொள்கையிலும் உடன்பாட்டுத் தன்மையைப் போற்றுகிற பொதுமைப் பண்பாளராகத் திகழ்ந்தார். திரு.வி.க. சமுதாயத்தின் வளர்ச்சித் தத்துவத்தை தெளிவாகப் புரிந்து கொண்டதன் காரணமாக பழமைக்கும் புதுமைக்கும் இடையே அவர் பாலமாக விளங்கினார்.

தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை பல்கலைக்களஞ்சியமாக எழுதியதோடு அரசியல் தலைவர்கள், கலைவாணர்கள், இலக்கியப் புலவர்கள், பல்வேறு சமயங்களின் தலைவர்கள், சமுதாயத் தொண்டர்கள், மகளிர் என்று 125 சான்றோர் பெருமக்களைப் பற்றி தன்னுடைய வரலாற்று நூலில் எழுதியுள்ளார். ஏறத்தாழ திரு.வி.க. வின் வாழ்க்கைக் குறிப்புகளைக் காட்டிலும் தமிழ்நாட்டினுடைய வரலாறு என்றே அதைக் குறிப்பிடலாம்.

திரு.வி.க வின் மணிமொழி என்றும் மறக்கமுடியாததாகும்.

நாம் உண்டது தமிழ்; உயிர்த்தது தமிழ். உற்றது தமிழ் எல்லாம் தமிழ்

தூய தமிழை உயர்த்தி பிடித்த திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்கள் சிறந்த மேடைப் பேச்சாளர். மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, வாழ்க்கைத் துணை, உள்ளொளி, உரை நூல்கள், பெரிய புராணம் குறிப்புரையும் வசனமும், முருகன் அல்லது அழகு, இலங்கைச் செலவு (பயண நூல்) போன்ற பல நூல்களையும், பாடல்களையும் எழுதியுள்ளார். இவரது படைப்பிலக்கியங்களில் இவரால் கையாளப்பட்ட தமிழ்நடையின் காரணமாக இவர் ‘தமிழ்த்தென்றல்’ என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார்.

அடையாறில் உள்ள பாலத்திற்கு திரு.வி.க. பாலம் (1973) என்று பெயர் மாற்றிய பெருமை முத்தமிழறிஞர் கலைஞர் அவரையே சாரும். அவ்வண்ணமே சென்னையில் திரு.வி.க. நகர் என்று அமைந்துள்ளதும், செனாய் நகரில் திரு.வி.க. மேனிலைப் பள்ளி, திரு.வி.க. பூங்காவும் அமையப் பெற்றுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் திரு.வி.க. பெயரில் தமிழறிஞர்களுக்கு விருதினை (1979) வழங்கி வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய சிறப்புகளைப் பெற்ற ‘தமிழ்த்தென்றல்’ திரு.வி. கலியாணசுந்தரனார் அவர்களின் புகழைப் போற்றும் வகையில் பெருநகர சென்னை பெருநகர மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மதுரவாயல் வட்டத்தில் அவர் பிறந்த ஊரான துண்டலம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரின் திருவுருவச் சிலைக்கு அவருடைய பிறந்த நாளான 26.08.2023 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ் வளர்ச்சித் துறையால் மாலை அணிவித்து, அவர்தம் திருவுருவப் படத்திற்கு மலர் வணக்கம் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பெருமக்கள், சென்னை மாநகராட்சி மேயர், துணை மேயர், தமிழறிஞர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டுள்ளது.





தி.மு.கழக வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தா லோசனைக் கூட்டம் நேற்று 25.8.2023 காலை அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் அணியின் செயலாளர் கவிஞர் காசி. முத்துமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது.கூட்டத்தில் கழகத் தலைவர் அறிவித்தபடி தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி ”கலைஞர் இரவு திருவிழாநிகழ்ச்சி தமிழகம் முழுதும் நடத்துவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் மாநில நிர்வாகிகள், திண்டுக்கல் ஜெயன், கோவை முருகவேல், நாமக்கல் மூர்த்தி, உமரிசங்கர், தாமரைபாரதி, பி.டி. பாண்டிசெல்வம், வி.பி.மணி, வி.எஸ்.ராமகிருஷ்ணன், மீஞ்சூர் பாஸ்கர், தர்மசெல்வன், சத்தியமூர்த்தி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை

# தமிழர்களின் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளைக் கொண்டாடுவோம்!

## தி.மு.க. வர்த்தகர் அணி கூட்டத்தில் தீர்மானம்!

*சென்னை, ஆக.26-*

தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் நேற்று (2582023 வெள்ளிக்கிழமை) அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகளான திண்டுக்கல் ஜெயன், கோவை முருகவேல், நாமக்கல் மூர்த்தி, முன்னாள் எம்.எல்.ஏ., உமரிசங்கர், தாமரைபாரதி, பாண்டிசெல்வம், வி.பி.மணி, வி.எஸ்.ராமகிருஷ்ணன், மீஞ்சூர் பாஸ்கர், தர்மசெல்வன், சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்ட முடிவில் விஜயராஜ் நன்றியுரை ஆற்றினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :

தங்கத்தை தன் கால்களால் தள்ளிவிட்டு, தவிடுகளை தன் உதடுகளில் ஒட்ட வைத்துக் கொள்ளும் கோவில் மாடப் புறாக்களை போல் தாய் அமைப்பு உள்ளிட்ட எத்தனையோ அணி இருந்தும், கலைஞரின் இதயம் குளிர்ந்த தமிழர்களின் பாரம்பரிய நிகழ்ச்சிகளை “கலை இரவை” வர்த்தகர் அணியான எங்களுக்கு வழங்கிய காரிருட்டைப் போக்க வந்த கதிரவனாம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

அண்ணலாம் அறக்கடலாம், ஆடவர்க்கு நிகராகப் பெண்ணுரிமை ஓங்க வைத்த பெருமகனாம் கலைஞரின் புகழ் தாங்கும் கலை இரவை கொண்டாட தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட தூத்துக்குடி, மதுரை, திருச்சி, வேலூர் உள்ளிட்ட ஐந்து நகரங்களில் அக்டோபர் முதல் பிப்ரவரிக்குள் நடத்துவது என்றும், அதற்கு வசதியாக ஒவ்வொரு நகரத்திற்கும் 13 மாவட்டங்கள் பிரிப்பது என்றும், அதற்கான மாவட்ட வர்த்தகர் அணி தலைவர்கள் - அமைப்பாளர்கள் அறிவிக்கப்படுவதுடன், அந்தக் குழுவுக்கு தலைமையாக மாநில நிர்வாகிகளை நியமிப்பது என்றும் இக்கூட்டம் முடிவு செய்கிறது.

தமிழர்களின் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளான பறையாட்டம், சிலம்பாட்டம், கோலாட்டம், வில்லுப்பாட்டு மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கைவண்ணத்தில் உருவான நாடகங்களை நடத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டது.

நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில் உள்ளூர் காவல் படைகளுடன் - காவல்துறை ஆதரவையும் கேட்டு, உறுதிப்படுத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டது.

சிந்தும் ஒளிச்சுடராம் - சிந்தையெல்லாம் நிறைந்த அருட்செல்வராம், ஏருழவர் சந்தை எல்லாம் புகழ் எதிரொலிக்கும் தலைவர் கலைஞர் புகழ் தாங்கும் கலை இரவு குறித்து விளம்பரச் சுவரொட்டிகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் செய்வது என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

புத்துணர்வு தமிழர் பெறப் பூபாளம் இசைத்தவராம் சொல்லாததையும் செய்த கலைஞரின் புகழ் தாங்கும் கலை இரவு நிகழ்ச்சிகளுக்கு சிறப்பு விருந்தினராய் கலைத்துறை சார்ந்த சான்றோர்களை அழைத்து பாரம்பரிய கலைஞர்களை கௌரவிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

“கலை இரவு” நிகழ்வை எந்தெந்த தேதிகளில் நடத்துவது என அந்தந்த மாவட்ட தலைநகரங்களில் செய்தியாளர் கூட்டம் நடத்தி, தலைமை அனுமதியுடன் அறிவிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஜி.எஸ்.டி. வரி அபராதத் தொகை குறைத்திடுக!

வணிகர்களை கசக்கி பிழியும் ஒன்றிய அரசின் ஜி.எஸ்.டி. வரி விதிப்பில் கதவு இல்லம் தவறுதலாக அச்சானால்கூட, ஐம்பதாயிரம் அபராதம் என்பதை 500, 1000 என சிறிய அபராதத்தை தந்திட வேண்டுகிறோம். தஞ்சமெனவந்தவர்க்கும் தருநிழலாய் வாய்த்த வள்ளலாம் தங்கத்தளபதி அவர்களின் வழிகாட்டுதலில் தொழில் சம்பந்தப்பட்ட ஆணைகளை தமிழில் வெளியிட வேண்டுகிறோம். சிறு வியாபாரிகளுக்கு ஆங்கிலம் தெரியாத காரணத்தால் தமிழிலும் ஆணைகள் வெளியிட வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் தொழில் நிறுவனத்திற்கு உரிமை வழங்குதல் என்கிற மாநகராட்சி நடவடிக்கையை, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை என எளிமைப்படுத்திட இக்கூட்டம் வேண்டி கேட்டுக் கொள்கிறது.

செங்கரும்பின் எழுத்தழகாய் தேன்மேடைப் பேச்சழகாய் மங்காத காவியமாய் மனங்கவரும் ஓவியமாய் இந்தியர்களின் அறிவாலயமாய் வாழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞரின் திருப்பெயரை எழும்பூர் ரயில் நிலையத்துக்கு சூட்ட வேண்டுமென ஒன்றிய அரசை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

மதிப்பு கூட்டு வரிச் சட்டத்தில் வணிகம் செய்த வணிகர்களின் சில வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. அந்த வழக்குகளை வணிகர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில், சமாதான திட்டத்தை ஏற்பாடு செய்த தமிழ்நாடு அரசையும், தமிழ்நாடு வணிகவரித் துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டுவதோடு, இக்கூட்டம் நன்றி கூறுகிறது. அதேநேரத்தில், இதற்குகூட ஒப்புதல் தராமல் இழுத்தடித்து, கண்ணியக்குறைவான செயலில் ஈடுபடும் ஆளுநர் ஆர்.எஸ்.எஸ்.ரவி அவர்களுக்கு இக்கூட்டம் தனது கண்டத்தை தெரிவித்துக் கொள்கிறது.

காற்றோடு கத்தி சண்டையும், நிழலோடு மல்யுத்தமும் செய்வது போல, இல்லாத அதிகாரத்துக்கு துண்டு விரிப்பது போல, குடியரசுத் தலைவரிடம் சென்ற நீட் ரத்து சட்ட விவகாரத்தில் தலையிட்டு, தமிழர்களின் நலனுக்கு கேடு செய்திடும் தமிழர்களின் விரோத ஆளுநர் ஆர்.எஸ்.எஸ்.ரவியை இக்கூட்டம் கண்டிக்கிறது. கறந்தபால் மடி புகாது, கவர்னரை விட்டுப் போன அதிகாரத்துக்கு கவர்னர் ஆசைப்படக் கூடாது. அதிலும் கெட்ட எண்ணத்தோடு கூட்டத்தில் கதறக்கூடாது.

தமிழர்களின் பிள்ளைகளை மருத்துவராக்கி மகிழ்வதற்காக - நீட்டை ஒழிக்க வேண்டுமென்று தன் உடலை வருத்தி, ஒரு சொட்டு தண்ணீர்கூட அருந்தாது உண்ணாவிரதம் இருந்ததுடன், ஒன்றிய அரசினை எதிர்த்து ஓங்கி குரல் எழுப்பி, கலைஞரின் போராட்ட குணத்தினை நினைவுபடுத்திய இன்றைய இளைஞர்களின் எதிர்காலமாய், நீடுபுகழ்க் கவிஞருக்கும் நிலைத்த புகழ் அறிஞருக்கும் பாடு பொருள் ஆனவராம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி அவர்களை, இக்கூட்டம் வாழ்த்துவதோடு, பாராட்டி மகிழ்கிறது.

இவ்வாறு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்ற ப்பட்டன.

சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில்

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்!

சென்னை, ஆக. 26-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநிலம் முழுவதும் அரசுப் பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்து நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தொடங்கி வைத்தார்கள்.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி, சேப்பாக்கம்திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் தேனாம்பேட்டை மண்டலம், திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில், கோடம்பாக்கம் மண்டலம், மாந்தோப்பு சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, வி.க.நகர் மண்டலம், மடுமாநகர் சென்னை நடுநிலைப் பள்ளியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களும் மாணவர்களுக்கு காலை உணவினை வழங்கி, மாணவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக, மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் 15.09.2022 அன்று தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மாதவரம் மண்டலம், சென்னை தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் அமைச்சர் பெருமக்களால் 16.09.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, முதற்கட்டமாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் திருவொற்றியூர், மாதவரம், தண்டையார்பேட்டை மற்றும் இராயபுரம் ஆகிய மண்டலங்களில் உள்ள 37 சென்னை தொடக்கப்பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 5,941 மாணவ, மாணவியர்கள் பயன்பெற்று வந்தனர்.

இதன் தொடர்ச்சியாக, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் எர்ணாவூர், ஆல் இந்தியா ரேடியோ நகர் (மேற்கு) சென்னை தொடக்கப் பள்ளியில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 62 மாணவ/மாணவியருக்கு காலை உணவு வழங்கிடும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, 01.02.2023 முதல் 38 சென்னை தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு திருவொற்றியூர், மாதவரம், தண்டையார்பேட்டை மற்றும் இராயபுரம் ஆகிய மண்டலங்களில் 6 மைய சமையற்கூடங்கள் மூலமாக காலை உணவு தற்போது வழங்கப்பட்டு வருகிறது

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தமிழ்நாடு மாநிலம் முழுவதும் அனைத்து அரசுப் பள்ளிகளில் விரிவாக்கம் செய்திடும் வகையில், இன்று (25.08.2023) நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, பெரு நகர சென்னை மாநகராட்சியில் அமைச்சர் பெருமக்களால் சென்னை பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னை தொடக்கப் பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசு ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் என மொத்தம் 358 பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 65,030 மாணவ/மாணவியர் கூடுதலாக பயன்பெறுவர். இத்திட்டத்திற்கு 35 மைய சமையற்கூடங்களில் இருந்து காலை உணவு தயாரிக்கப்பட்டு, அதற்கான வாகனங்கள் மூலம் பள்ளிகளுக்கு காலை உணவு கொண்டு செல்லப்படும்.

சென்னை பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு திங்கட்கிழமை காய்கறி சாம்பாருடன் கூடிய ரவா உப்புமா / சேமியா உப்புமா / அரிசி உப்புமா / கோதுமை ரவை உப்புமா; செவ்வாய்க்கிழமை காய்கறி சாம்பாருடன் கூடிய ரவா காய்கறி கிச்சடி / சேமியா காய்கறி கிச்சடி / சோள காய்கறி கிச்சடி / கோதுமை ரவை கிச்சடி; புதன்கிழமைகாய்கறி சாம்பாருடன் கூடிய ரவா பொங்கல் / வெண்பொங்கல்; வியாழக் கிழமை காய்கறி சாம்பாருடன் கூடிய சேமியா உப்புமா / அரிசி உப்புமா / ரவா உப்புமா / கோதுமை ரவை உப்புமா; வெள்ளிக்கிழமைகாய்கறி சாம்பாருடன் கூடிய சேமியா காய்கறி கிச்சடி / சோள காய்கறி கிச்சடி / ரவா காய்கறி கிச்சடி / கோதுமை ரவை கிச்சடி ஆகியவை மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர்கள் எஸ்.மதன்மோகன், திருமதி சரிதா மகேஷ்குமார், எம்.கிருஷ்ணமூர்த்தி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பட்டிக்காடும் பட்டணமும்




**பட்டிக்காடு :** ஏண்ணே; இந்திய ரயில்வே, இந்தி ரயில்வேயாக மாறிக் கொண்டிருக்கிறதாமே ?

**பட்டணம் :** **ஆமாம்; அது குறித்து, தமிழ் நாளேடு ஒன்று, கட்டுரை வெளியிட்டுள்ளது.**

**‘சதாப்தி’, - ‘தேஜஸ் ‘, - ‘வந்தே பாரத்’ - என்ற சமஸ்கிருத சொற்களின் பெயர்களில் ரயில்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அந்த ரயில்களில் பயணம் செய்வோர்க்கு நாளேடுகள் விநியோகம் செய்யும் ஊழியர்கள் முதல், தேநீர் சிற்றுண்டி உணவு பரிமாறும் பரிசாரகர்கள் வரை, அனைவரும் இந்தி மட்டும் தெரிந்தவர்கள்தான். அவர்கள் யாருக்கும் தமிழ் மொழியோ, ஆங்கிலமோ அறவே தெரியாது.**

**இப்படி வேக வேகமாகவும், உறுதியாகவும், ‘ஒரே நாடு, ஒரே மொழி’ என்ற ஒன்றிய பா.ஜ.க.அரசு முன்வைக்கும் மொழிப் பிரிவினைக் கொள்கையின்படி, ‘இந்தி’ அனைத்து முனைகளிலும் பரவி வருகிறது !**



பல்லாவரம் தொகுதியில்

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

பல்லாவரம், ஆக.26-

முதலமைச்சர் அவர்களின் பல்வேறு சிறப்பு திட்டங்களில் முதன்மையான திட்டமான முதலமைச்சரின் காலை உணவு திட்டம் மாநிலம் முழுவதும் இன்று விரிவாக்கம் செய்யப்பட்டது.

திருக்குவளையில் முதலமைச்சர் அவர்கள் திட்டத்தை துவக்கி வைத்து மாணவ- மாணவி செல்வங்களுடன் அமர்ந்து உணவு அருந்தி துவக்கி வைத்தார்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து துவக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளிலும் வாழைமரம் தென்னை ஓலை மா இலை, தோரணங்கள், வண்ண பலூன்கள் கட்டி விழாக் கோலமாக அனைத்து பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் தொடங்கப்பட்டது.

பல்லாவரம் ஜி.எஸ்.டி சாலையில் உள்ள மாநகராட்சி துவக்கப் பள்ளியில் வாழை மரம், மா, இலை, தோரணங்கள், வண்ண பலூன்கள் கட்டி விழாக் கோலத்துடன் முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்த விழாவினை எல்.இ.டி தொலைக்காட்சி மூலமாக பொதுமக்களுக்கு ஒளிபரப்பு செய்யப்பட்டு காலை உணவு திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்து கொண்டு மாணவ மாணவி செல்வங்களுக்கு உணவு பரிமாறி அவர்களுடன் அமர்ந்து அவர்களுக்கு உணவு ஊட்டி உணவு அருந்தி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மண்டலத் தலைவர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை, வே. கருணாநிதி, மாநகராட்சி உதவி ஆணையர் மாரிச் செல்வி, சுகாதாரக் குழு தலைவர் இரா. நரேஷ் கண்ணா, மாநகராட்சி பொறியாளர், உதவி செயற்பொறியாளர், மாமன்ற உறுப்பினர்கள், தலைமை ஆசிரியர், பள்ளி ஆசிரியர்கள், சுகாதார அலுவலர், உதவி பொறியாளர்கள், மேலாண்மை குழு உறுப்பினர்கள், குழந்தைகளின் பெற்றோர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !



சென்னை திருவல்லிக்கேணி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில், விரிவுபடுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்தார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்!



சிலி குடியரசு நாட்டிற்கு மூன்று நாள் அரசு முறை பயணமாக சென்றுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் (23.8.2023) அன்று சிலி குடியரசின் அமைச்சர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் உலக வங்கி பிரதிநிதிகளுடன் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். உடன் சிலி குடியரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற திட்டமிடல் அமைச்சர் கார்லோஸ் மான்டெஸ் சிஸ்டர்னாஸ் (Mr. Carlos Montes Cisternas, Minister for Housing and Urban planning ) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், வாரிய இணை மேலாண்மை இயக்குநர் மீ.தங்கவேல், உலக வங்கியின் மூத்த ஆலோசகர் திருமதி இசபெல் பிரெயின் (Isabel Brain, Senior Consultant, World Bank), உலக வங்கியின் மூத்த நகர்ப்புற நிபுணர் திருமதி யான் எஃப் ஜாங் ( Yan F Zhang, Senior Urban Specialist World Bank) உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றமும் (கலை பண்பாட்டு இயக்ககம்) இராணி மேரி கல்லூரியும் இணைந்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நேற்று முன்தினம் (24.8.2023) இராணிமேரி கல்லூரி அரங்கில் கருத்தரங்கம் நடத்தின. “முத்தமிழ் முகாம்” எனும் இந்நிகழ்வில், “பெரும்பணி ஆற்றிய கலைஞர்” என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் - பேராசிரியர் திருமதி இந்திர ஜெயச்சந்திரன், கல்லூரி முதல்வர் திருமதி பா.உமா மகேஸ்வரி, முனைவர் திருமதி தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி., தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன், கவிஞர் நெல்லை ஜெயந்தா, கவிஞர் கோ.அருள்பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அகிலம் அண்ணாந்து பார்க்கும் அளவிற்கு சாதனையாளர்களாக உயரவேண்டும்!

## முதல்வர் உரை... முதல்பக்கத் தொடர்ச்சி

இப்படி ஒரு சிறப்பான திட்டத்தை விரிவாக்கம் செய்வதில் மிகவும் பெருமைப்படுகிறேன்.

தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப் பேற்று பல திட்டங்களைச் செய்திருந்தாலும், இந்த காலை உணவுத் திட்டம் எனக்கு ஒரு மனநிறைவைத் தருகிறது. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், படிப்புக்காகவும், வேலைக் காகவும் பேருந்தில் செல்லும் நம்முடைய சகோதரிகள், கட்டணமில்லாமல் 'விடியல் பயணத்தை' மேற்கொள்ளும்போதும், உயர்கல்வி பெறும் அரசுப் பள்ளி மாணவிகள் 'புதுமைப் பெண்' திட்டத்தில் ஆயிரம் ரூபாய் பெறும் போதும், அவர்களைவிட எனக்குதான் அதிகமான மகிழ்ச்சி ஏற்படும். ஏனென்றால், பலருடைய மகிழ்ச்சிக்கு நான் காரணமாக இருக்கிறேன் என்ற அந்த உணர்வில் அப்படி பெருமகிழ்ச்சி உண்டாகும்.

**எனது மகிழ்வை மேலும் அதிகரிக்கும் 'மகளிர் உரிமைத் திட்டம்'!**

அடுத்த மாதம் இன்னொரு கூடுதல் மகிழ்ச்சி காத்துக்கொண்டிருக்கிறது. உங்களுக்குத் தெரியும். பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15. அன்றைக்கு, குடும்பத் தலைவிக்கு மாதந்தோறும் 1000 ரூபாய் வழங்கும் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' தொடங்கப் போகிறோம். அது என்னுடைய மகிழ்ச்சியை இன்னும் அதிகமாக்க போகின்றது!

இப்படி மகிழ்ச்சியையும், மனநிறைவையும் தருகின்ற திராவிட மாடல் அரசினுடைய திட்டங்களில் முக்கியமான ஒன்றுதான் இந்த காலை உணவுத் திட்டம்!

கடந்த ஆண்டு பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில், மதுரை ஆதிமூலம் மாநகராட்சித் தொடக்கப்பள்ளியில் காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தேன். மாணவச் செல்வங்களுக்கு காலை உணவு பரிமாறினேன். அவர்களோடு உட்கார்ந்து உணவு சாப்பிட்டேன். இப்போதும் இங்கே தொடங்கிய திருக்குவளைப் பள்ளியில், கலைஞர் படித்த பள்ளியில் தொடங்கியபோது, அவர்களோடு உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டுதான் வந்திருக்கிறேன். காலை உணவை நான் முடித்துவிட்டேன். மேடையில் இருப்பவர்கள் எல்லாம் இன்னும் சாப்பிட வில்லை. ஏனென்றால், மாணவர்களோடு மட்டும் இருந்து நான் சாப்பிட வேண்டும் என்று ஆசைப்பட்டேன். கட்டுப்பாடாக இருக்கும் என்பதற்காகத்தான் அந்த அடிப்படையில் நடத்தினோம். வேறொன்றும் இல்லை. உங்களைப் பட்டினி போடவேண்டும் என்று இல்லை. அந்த ஆசை எனக்கு இல்லை. இங்கு இல்லை, முடிந்தவுடன் வெளியிலே சென்று சாப்பிடுவார்கள்.

**'உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே'!**

மதுரையில் நான் தொடங்கினேன். அன்றைய நாளிலிருந்து,

1 இலட்சத்து 14 ஆயிரம் பிள்ளைகளுக்கு காலை உணவு தரப்பட்டது. அதை மேலும் விரிவுபடுத்தும் நம் எண்ணம்தான் இன்றைக்குச் செயல்வடிவமாகி, 17 இலட்சம் பிள்ளைகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை தொடங்கி இருக்கிறோம்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று மணிமேகலை காப்பியம் சொன்னபடி, உயிர் கொடுக்கிற அரசாக, நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. எங்கள் தாத்தா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தந்தை முத்துவேலர் வாழ்ந்த இந்த திருக்குவளையில், தந்தையாகவும், தாயாகவும் இருந்த கலைஞர் பிறந்த இந்த திருக்குவளை மண்ணில் அவருடைய மகன் கருணாநிதி ஸ்டாலின் இந்தத் திட்டத்தை தொடங்கி வைப்பது என்பது, அதன் மூலமாக, நான் தமிழ்நாட்டி னுடைய முதலமைச்சராக மட்டுமல்ல; கலைஞரின் மகனாகவும் பெருமைப்படுகிறேன். இதைவிட எனக்கு வேறென்ன பெருமை வேண்டும்?

பள்ளிகளும், கல்லூரிகளும் உருவாக்கிய தலைவர் கலைஞர் படித்த பள்ளி இது. அவர் படிக்கின்றபோது, ஒரு அரசியல் கட்சித் தலைவர் ஆவார் என்றோ, முதலமைச்சர் ஆவார் என்றோ நிச்சயமாக நினைத்துப் பார்த்திருக்க மாட்டார். ஆனால், அவருக்குள் இருந்த தமிழ்ப் பற்றும் எழுத்துத் திறனும் சிந்தனை ஆற்றலும், பள்ளியில் படிக்கின்றபோதே, அவரை மெல்ல மெல்ல தலைவராக ஆக்கியது.

**உவமைக் கவிஞர் சுரதாவால் புகழ்ந்துரைக்கப்பட்ட திருக்குவளை!**

அந்தப் பெருமை என்பது இந்த திருக்குவளை பள்ளிக்கும் திருவாரூர் பள்ளிக்கும்தான் உண்டு. "உருக்குலையா மங்கையவள் ஒளிமுகத்தை முத்தமிட கருக்கலிலே கண்விழிக்கும் திருக் குவளை" என்று உவமைக் கவிஞர் சுரதா அவர்களால் போற்றப்பட்ட இந்த அழகிய திருக்குவளை கிராமத்தில் முத்துவேலருக்கும் - அஞ்சுகம் அம்மாவுக்கும், அருந்தவப் புதல்வராகப் பிறந்தவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

'என்னை என் தாயும் தந்தையும் படி படி என்று சொன்னாலும் நான் படித்தது ஈரோட்டுப் பள்ளியும், காஞ்சிக் கல்லூரியும்தான்' என்று தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார்.

**கலைஞருள் அரசியல் கனலைத் தூண்டிய ஊர் இது!**

திருக்குவளையில் தொடக்கப் பள்ளி, அப்போது 5ஆம் வகுப்பு வரை மட்டும் இருந்ததினால், மேல் படிப்புக்கு தலைவர் கலைஞர் அவர்கள் திருவாரூருக்குச் சென்றார். அங்கே சென்று பள்ளி யில் சேருவதற்கு என்னென்ன போராட்டம் நடந்தது என்று உங்களுக்குத் தெரியும். 'நெஞ்சுக்கு நீதி'யில் அவரே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். பல நிகழ்ச்சிகளில் அதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார். போராடி, வாதாடி அதற்குப் பிறகு திருவாரூரில் 6ஆம் வகுப்பு சேருகிறார். திருவாரூர் அவரை அள்ளி அணைத்து, அவருக்கு அரசியல் ஆர்வத்தை ஊட்டி, அவருடைய உள்ளத்தில் இருந்த கனலைத் தூண்டி விட்டது.

'சிறுவர் சீர்திருத்தச் சங்கம்' தொடங்கினார். 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்' அமைத்தார். ஆதிக்க இந்திக்கு எதிராக கொடி பிடித்து போராட்டம் நடத்தினார். 'மாணவ நேசன்' என்ற கையெழுத்து இதழை நடத்தினார்.

இப்படி, 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்று சொல்வதற்கு ஏற்றது போல, பிற்காலத்தில் கலைஞர் என்ன ஆவார் என்பதை உணர்த்திய இடங்கள்தான் திருக்குவளை பள்ளியும் திருவாரூர் பள்ளியும்!

## 'மண்ணின் மைந்தரே! மகத்தான முதல்வரே! வாருங்கள் அய்யா!'

### காலை உணவுத் திட்டம் தொடங்க வந்த முதல்வரை - உணர்ச்சி மேலிட வரவேற்ற மாணவி கனிஷ்கா!



திருக்குவளையில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைக்க வருகை தந்த முதல்வர் அவர்களை, ஒரு மாணவனும், ஒரு மாணவியும் முதல்வருக்கு பூச்செண்டு வழங்கி, வணக்கம் தெரிவித்து வரவேற்றார்கள்.

கனிஷ்கா எனும் மாணவி,
**"மண்ணின் மைந்தரே!"**
**மகத்தான முதல்வரே!**
**அடுக்களையைப் பார்வையிட**
**அன்போடு அழைக்கின்றோம்!**
**வாருங்கள் அய்யா!"**

-என்று உணர்ச்சி மேலிடக் கூறி, முதல்வரை வணங்கி வரவேற்றது, அங்கிருந்த அனைவரின் கருத்தையும் கவர்வதாக இருந்தது.

அந்த மூன்று மாணவச்செல்வங்களையும் அழைத்துக் கொண்டு விழா மேடைக்கு முதல்வர் நடந்து வந்த காட்சி, முதல்வர் அவர்களே தமது உரையில் குறிப்பிட்டதற்கொப்ப, 'வாழ்வில் ஓர் பொன்னாள்!' என்ற கூற்றை மெய்ப்பிப்பதாக இருந்தது எனின் அது மிகையல்ல!

ஒரு சின்ன கிராமத்தில், சாதாரண குடும்பத்தில், சமூக ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த காலத்தில் பிறந்து, இதே பள்ளியில் ஆரம்பப் பாடம் கற்று, திருவாரூரில் வளர்ந்து, தன்னுடைய விடாமுயற்சியால், அயராத உழைப்பால், சளைக்காத போராட்டக் குணத்தால் வெற்றிச் சிகரங்களைத் தொட்டவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவர், 'வரலாற்றில் நமக்கான இடம், சலுகையால் கிடைக்கக் கூடியதாக அல்லாமல், போராடிப் பெறக்கூடியதாக இருக்க வேண்டும்' என்று சொல்வார். ஏன், கடற்கரையில், தான் ஓய்வு கொண்டிருக்கிற இடத்தைக்கூட போராடிப் பெற்றவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

**மாணவர்களுக்கு நம்பிக்கை மிகுந்த வழிகாட்டியாக கலைஞர் திகழ்கிறார்!**

இன்றைய மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் படமாக அல்ல, பாடமாக - நம்பிக்கை மிகுந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார். அதனால்தான் தமிழ்நாட்டு மாணவர் சமுதாயத்தினுடைய பசிப்பிணி போக்கும் திட்டத்தை அவர் படித்த இந்தப் பள்ளியிலிருந்து தமிழ்நாட்டின் அனைத்துப் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்ய நான் வந்திருக்கிறேன்.

ஏழை, எளியோர் வீட்டுப்பிள்ளைகள் ஒடுக்கப்பட்ட குடும்பத்தின் பிள்ளைகள் - பள்ளிக்குப் போவது எந்த காரணத்தாலேயும் தடைபடக் கூடாது என்றுதான் தந்தை பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார். அதற்காகத்தான் சமூகநீதிக் கோட்பாடு உருவாக்கப்பட்டது. வகுப்புவாரி உரிமை என்று, இடஒதுக்கீடு தரப்பட்டது. கல்வி பெற வறுமை - சாதி என்று எதுவும் தடையாக இருக்கக் கூடாது என்று தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் நினைத்தார்கள்.

**நீதிக்கட்சி ஆட்சியே - முதன்முதலில் இந்தத் திட்டத்தைத் தொடங்கியது!**

**அவர்களுடைய வழித்தடத்தில் நடக்கின்ற நான், அவர்களுடைய கனவுகளை நிறைவேற்றுகின்ற இடத்திற்கு வந்து அதையெல்லாம் இப்போது செயல்படுத்து கிறேன். தொடர்ந்து செயல்படுத்துவேன். இதற்கான தொடக்கம், திராவிட இயக்கத்தி னுடைய தாய் அமைப்பான நீதிக்கட்சி யினுடைய தலைவராக இருந்த வெள்ளுடை வேந்தர் தியாகராயர் அவர்கள்தான்.**

**சென்னை மாநகராட்சியினுடைய தலை வராக இருந்தபோது ஆயிரம் விளக்கு மாநகராட்சிப் பள்ளிக் குழந்தைகளுக்கு 1922ஆம் ஆண்டு மதிய உணவை வழங்கி னார். அந்த ஆயிரம் விளக்குதான் முதன் முதலாக நான் நின்று வென்ற தொகுதி!**

**திருக்குவளை சூரியன் ஒளியில்தான் அந்த ஆயிரம் விளக்கு ஒளி வீசியது. இந்தியா விடுதலை அடைகின்ற சில மாதங்களுக்கு முன்னால், நிதி நெருக்கடியை காரணம் காட்டி மதிய உணவுத் திட்டம் நிறுத்தப்பட்டது. கடும் எதிர்ப்பையும் மீறி, திட்டத்தைச்**

**செயல்படுத்திய பெரியாரின் பெருந்தொண்டர்!**

**1955ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது. அப்போது பொதுக் கல்வி இயக்குநராக இருந்தவர், நெ. து.சுந்தரவடிவேலு அவர்கள். அவர்தான் இதற்கான முழு முயற்சியையும் எடுத்தவர். சில அதிகாரிகளுடைய கடுமையான எதிர்ப்பையும் மீறி அதைச் செயல்படுத்திக் காட்டியவர். யார் என்று கேட்டீர்கள் என்றால், பெரியாரின் பெருந்தொண்டராக இருந்த நெ.து.சுந்தரவடிவேலு அவர்கள்.**

**இப்படிப்பட்ட மதிய உணவுத் திட்டத்தை தி.மு.க. அரசு தொடர்ந்து நடத்தியது. இதைச் செழுமைப்படுத்துகின்ற வகையில் கூடுதலாக ஊட்டச்சத்து திட்டத்தை 1971ஆம் ஆண்டு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கையில் எடுத்தார்.**

**குழந்தைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் ஊட்டச்சத்து வழங்கு கின்ற மாபெரும் இயக்கமாக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அதைச் செயல்படுத்தி னார். அந்தக் காலத்தில் 'பேபி ரொட்டி' என்ற ஒன்று உண்டு. அந்த பேபி ரொட்டியை எல்லாக் குழந்தைகளுக்கும் வழங்கியது, கலைஞர் தலைமையில் இருந்த அரசு.**

**1975ஆம் ஆண்டு முழுமையாக மாநில அரசினுடைய நிதியில் 'ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தை' முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாநிலம் முழுவதும் நடத்திக் காட்டினார். அதை மேலும் விரிவுபடுத்தினார், யார்? மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள். அதிகப்படியான மையங்களை உருவாக்கி, சத்துணவுத் திட்டத்திற்கு கூடுதலான நிதியை ஒதுக்கீடு செய்தவர், யார் என்று கேட்டால், முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள். எம். ஜி.ஆருக்குப் பிறகு மீண்டும் 1989ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த முதலமைச்சர் கலைஞர் சத்தான முட்டையை வழங்கினார்.**

**அது படிப்படியாக உயர்த்தப்பட்டு, வாரம் ஐந்து நாட்களும் முட்டை வழங்கி னார் முதலமைச்சர் கலைஞர். முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழம் கொடுத்தார். பின்பு கொண்டைக்கடலை, பச்சைப்பயிறு, வேகவைத்த உருளைக் கிழங்கு ஆகியவற்றையும் வழங்கினார். முக்கியமான தலைவர்களுடைய பிறந்த நாளன்று, அப்போது இனிப்பு பொங்கல் வழங்கவும் உத்தரவிட்டவர்தான் கலைஞர் அவர்கள்.**

**அதற்குப் பின்பு முதலமைச்சராக இருந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள், தன்னுடைய ஆட்சிக்காலத்தில் கலவை சாதம் வழங்க உத்தரவிட்டார்கள்.**

**1921ல் நீதிக்கட்சி ஆட்சித் தொடங்கி, 2021 வரைக்கும் இருந்ததெல்லாம் மதிய உணவுத் திட்டங்கள்தான்.**

இந்த நிலையில்தான், சென்னை அசோக் நகரில் இருக்கக்கூடிய பெண்கள் மேனிலைப் பள்ளிக்கு ஒரு விழாவிற்காக நான் சென்றேன். அங்கு படிக்கின்ற மாணவிகளிடம் பேசிக் கொண்டு இருந்தேன். பேசிக் கொண்டு இருக்கும் போது "காலையில் என்ன சாப்பிட்டீங்க?" என்று கேட்டேன். பெரும்பாலான வர்கள் என்ன சொன்னார்கள் என்றால், நாங்கள், "சாப்பிட வில்லை" என்று சொன்னார்கள். "எங்கள் வீட்டில் சமையல் செய்யவில்லை" என்று ஒரு மாணவி சொன்னார்.

"மத்தியானம் ஸ்கூலில் சென்று சாப்பிடு என்று அம்மா சொல்லிட்டாங்க" என்று இன்னொரு மாணவி சொன்னார். "காலையில் டீ மட்டும் குடித்துவிட்டு வந்திருக்கிறேன்" என்று இன்னொரு மாணவி சொன்னார். இதை யெல்லாம் மனதில் வைத்துதான் இந்த காலை உணவுத் திட்டம் உருவாக்கவேண்டும் என்று நான் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டேன்.

அதிகாரிகள் சொன்னார்கள், நிதிச்சுமை போன்ற காரணங்களை எல்லாம் சொன்னார்கள். இதை விட வேறு எதும் முக்கியமாக இருக்க முடியாது என்று கட்டாயப்படுத்தி நான்தான் இந்தத் திட்டத்தை விரைவாக நடத்தவேண்டும் என்று சொன்னேன். பொதுவாகவே, மனிதர்களுக்கு மூளை ஒழுங்காக முறையாக வேலை செய்ய வேண்டும் என்றால், வயிறு நிறைந்திருக்க வேண்டும்.

**சாப்பிடாத பிள்ளைகள் - கல்வியில் கவனம் செலுத்த முடியாது!**

மூன்று வேளை உணவு தேவை. அதிலேயும் காலையில் நன்றாகச் சாப்பிட வேண்டும் என்று சொல்லுவார்கள். அப்போதுதான் அதிகமாகப் பணியாற்ற முடியும். காலை உணவு, மிக மிக முக்கியம். ஆனால், காலை உணவே சாப்பிடாத பிள்ளைகளால் எப்படி கல்வியில் கவனம் செலுத்த முடியும்? இது ஒருபுறம்.

மற்றொருபுறம், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் ஒரு களஆய்வு நடத்தி னோம். அதில், ரத்தசோகை அதிகமாக நிறைய மாணவர்களுக்கு இருந்தது. ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு 50 கிராம் அளவு காலை உணவு வழங்கினால் அவர்களுக்கு கூடுதலாக சத்துகள் கிடைக்கும் என்று சொன்னார்கள். அதனால் தான், காலை உணவுத் திட்டத்தைச் செயல்படுத்து வதில் ஆர்வத்தோடும், அக்கறையோடும் நாங்கள் இந்தப் பணியில் இறங்கினோம்.

பசியுடன் பள்ளிக்கு வருகின்றவர்களை பட்டினியாக வைத்து, பாடம் சொல்லித் தரக் கூடாது என்று நினைத்தேன். அதனுடைய விளைவுதான், இன்றைக்கு, 31 ஆயிரம் அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற, 17 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு அதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**நிதி ஒதுக்கீடு அல்ல; நிதி முதலீடு!**

நம்முடைய எதிர்கால நம்பிக்கைகளான பள்ளிக் குழந்தைகளுக்கான திட்டத்திற்குரிய தொகையை, நிதி ஒதுக்கீடு என்று சொல்வதை விட, நிதி முதலீடு என்றே நான் சொல்ல விரும்பு கிறேன். ஏனென்றால், மாணவர்களின் அறிவை மேம்படுத்த - உள்ளத்தை மேம்படுத்த அரசு நிதி முதலீடு செய்திருக்கிறது. அந்த முதலீடு நிச்சயமாக நாட்டுக்கு லாபம் தரும் வகையிலான ஆற்றலாக, திறமையாக வெளிப்படும். அதுதான் உண்மை!

**காலை உணவுத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்!**

இந்தியாவிலேயே புதுப்புது திட்டங்களைக் கொண்டு வந்து, முன்னோடி மாநிலமாக இருப்பதில் நம்பர் ஒன் மாநிலம், நம்முடைய தமிழ்நாடுதான். அதில் மிகமிக முக்கியமான இந்த 'காலை உணவுத் திட்டத்தின் முக்கிய நோக்கம் என்ன?

ஒன்று, மாணவர்கள் பசியில்லாமல் பள்ளிக்கூடத்திற்கு வரவேண்டும்.

இரண்டு, ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்படாமல் அந்தக் குழந்தைகள் இருக்க வேண்டும்.

மூன்று, இரத்த சோகை என்ற குறைபாட்டை நீக்கவேண்டும்.

நான்கு, மாணவர்களுடைய வருகைப் பதிவை அதிகரிக்க வேண்டும்.

ஐந்து, வேலைக்குச் செல்கின்ற தாய்மார்களின் பணிச்சுமையைக் குறைக்க வேண்டும்.

இந்த ஐந்து நோக்கங்களை படிப்படியாக நிறைவேற்றவேண்டும் என்பதுதான் நம்முடைய இலட்சியம். முழுமையாக அடைந்தே தீருவோம். அதில் எந்தச் சந்தேகமும் கிடையாது.

**பல்வேறு நன்மைகள் படைக்கப்போகும் சீரிய சிறந்த திட்டம் இது!**

பசிப்பிணி நீங்கிவிட்டால், மனநிறைவோடு பிள்ளைகள் படிப்பார்கள். அவர்கள் மனதில் பாடங்கள் பதியும். பள்ளிக்கு ஆர்வத்துடன் வருவார்கள். சீரான வருகைப் பதிவும் இருக்கும். தமிழ்நாட்டின் கல்வி விகிதமும் அதிகம் ஆகும். தமிழ்நாட்டு இளைஞர்கள் அனைவரும் அறி வாற்றல் பொருந்தியவர்களாக உயர்வார்கள். படிப்புடன் விளையாட்டு, கலைத்திறன் ஆகிய வற்றிலும் சாதனை படைக்கக் கூடியவர்களாக நிச்சயம் திகழ்வார்கள். இப்படி எத்தனையோ நன்மைகளை நம்முடைய மாநிலம் இந்தத் திட்டத்தால் அடையப் போகின்றது. எதிர்கால தமிழ்ச் சமூகம் பயனடையப் போகிறது.

இந்த மாதம் ஒரு செய்தியைப் பார்த்திருப்பீர்கள். ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறை பாட்டால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லி, கடந்த ஓராண்டு காலத்தில் சுமார் 10 இலட்சம் குழந்தை களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டிருக்கிறது. அதில், சுமார் 92 ஆயிரம் குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாடுடன் இருப்பதாகக் கண்டறியப்பட்டு, அந்தக் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த சிறப்பு உணவுப்பொருட்கள் கொடுத்ததால், சுமார் 62 ஆயிரம் குழந்தைகள் தங்களது ஊட்டச்சத்து நிலையில் நல்ல முன்னேற்றத்தை அடைந்திருக்கிறார்கள்.

**ஆதரவற்றோர்க்கு அபயம் தரும் அரசு!**

அதில் சில குழந்தைகள் என்னைப் பார்ப் பதற்காக கோட்டைக்கு அழைத்துக் கொண்டு வந்தார்கள். நேரில் பார்த்தேன். அந்தக் குழந்தை களுடைய வளர்ச்சியில்தான் நம்முடைய அரசாங்கத்தின் வளர்ச்சி அடங்கி இருக்கிறது. இந்த அரசு யாருக்கான அரசு என்று கேட்கிற வர்களுக்கு, நான் சொல்வது என்னவென்றால், "எங்களுக்கு யாருமில்லை" என்று யார் நினைக்கிறார்களோ, "எங்களைக் காப்பாற்ற யார் இருக்கிறார்கள்?" என்று யார் கேட்கிறார்களோ, அவர்கள் எல்லோருக்குமான அரசுதான் இந்த அரசு என்று சொல்வேன்.

அந்தக் காலத்தில அரசர் குலத்தவர் மட்டுமே கற்றுக் கொள்ளலாம் என்று இருந்த, வில் வித்தையை வேடர் குலத்தைச் சேர்ந்த ஏகலை வன் கற்றுக்கொண்டதைப் பார்த்து கட்டை விரலை காணிக்கையாகக் கேட்ட துரோணாச் சாரியார் போன்ற ஆசிரியர்கள்தான் இருந்தார்கள்.

சமூகநீதி நிலைநாட்டப்படுகின்ற இந்தக் காலத்தில் யாராவது கட்டை விரலை காணிக்கை யாகக் கேட்டால், அவர்களுடைய, பட்டை உரியும் என்று எச்சரித்தவர், இந்த மண்ணின் மைந்தர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

**மக்களுக்குத் தடுப்புச் சுவர் போடும் 'துரோக ஆச்சாரியார்கள்'!**

பெரியார் - அண்ணா - கலைஞர் வகுத்த சமூக நீதிப் பாதையில் அனைத்து அறிவையும் அனைத்துச் சமூகத்தவருக்கும் தருகின்ற ஆட்சியை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்தச் சூழலிலும் 'தேசியக் கல்விக் கொள்கை' என்கின்ற பெயரில், 'நீட்' என்ற பெயரில் தடுப்புச் சுவர் போடுகின்ற `துரோக ஆச்சாரியார்களும்' இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஏகலைவன் தன்னுடைய கட்டை விரலை காணிக்கை கொடுத்ததெல்லாம் அந்தக் காலம். அந்தக் காலம் மலை ஏறிவிட்டது. இது கலைஞர் உருவாக்கித் தந்திருக்கக்கூடிய காலம். இது துரோணாச்சாரியார்களின் காலம் கிடையாது. ஏகலைவன்களின் காலம்!

அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கும். 'எல்லார்க்கும் எல்லாம் கிடைக்கும்' என்ற திராவிடவியல் கோட்பாடு கோலோச்சும் காலம்!

**அரசு அதிகாரிகள், ஆசிரியர்க்கு அன்பான வேண்டுகோள்!**

இந்த நேரத்தில், அரசு அதிகாரிகளுக்கும், ஆசிரியர் களுக்கும், சமையல் செய்யக்கூடிய நம்முடைய சகோதர சகோதரிகளுக்கும் உங்கள் முதலமைச்சர் ஒரு அன்பான வேண்டுகோளை வைக்கிறேன்!

அரசானது தாயுள்ளத்தோடு இந்தத் திட்டத்தைத் தொடங்கி இருக்கிறது. நீங்களும் தாயுள்ளத்துடன் இந்தத் திட்டத்தை தொடர்ந்து நடத்தவேண்டும். உங்கள் வீட்டுப் பிள்ளை களுக்கு எப்படி கவனத்தோடும், கனிவோடும் உணவு வழங்குவீர்களோ, அதைவிடக் கூடுதல் கவனத் தோடு, கனிவோடு அனைத்துக் குழந்தைகளுக்கும் உணவு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை நிச்சயம் செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

**மாணவச் செல்வங்களே! படியுங்கள்! படியுங்கள்! படியுங்கள்!**

அன்புள்ள மாணவச் செல்வங்களே! உங்கள் குடும்பத்தில் ஒருவனாக நான் வைக்கின்ற வேண்டுகோள் இது.

உங்களுக்கு காலையும், மதியமும் உணவு வழங்குகிறோம். எனவே, நீங்கள் எதைப்பற்றி யும் கவலைப்படாமல் படிங்க, படிங்க! படிங்க! இது ஒன்றுதான் என்னுடைய வேண்டுகோள். படிப்பு மட்டும்தான் உங்களிடம் இருந்து யாரா லும் பறிக்க முடியாத சொத்து. அத்தகைய சொத்தை உங்களுக்கு நீங்களே சேர்த்துக் கொள்ளுங்கள். உங்களது மற்ற கவலைகள், மற்ற தேவைகளை நிறைவு செய்ய நமது அரசு இருக்கிறது.

இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினாகிய நான் இருக்கிறேன்! நீங்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்துங்கள்! படிப்பு உங்களை உயர்த்தும்!

நிலாவுக்குச் சென்று ஆய்வு செய்கின்ற விண்கலம் அனுப்பி சாதனை படைதிருக்கின்ற தமிழ்நாட்டு அறிவியலாளர்கள் போல, இந்தி யாவுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், உலகம் அண்ணாந்து பார்க்கின்ற வகையிலான சாதனையாளராக நீங்கள் மாறவேண்டும், உயரவேண்டும். அதனை உங்கள் பெற்றோ ரோடு சேர்ந்து நானும் காண வேண்டும்! பெருமைப்பட வேண்டும்! என்று கேட்டு, அதை நீங்கள் நிச்சயம் நிறைவேற்றுவீர்கள், நிறை வேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையோடு உங்களிட மிருந்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



கள ஆய்வில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று (25.8.2023) ஆய்வு நடத்திய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் பல்வேறு விவசாய சங்கப் பிரதிநிதிகள் சந்தித்து, குறுவை தொகுப்பு திட்டம் அறிவித்தமைக்காகவும், மேட்டூர் அணையில் குறித்த நேரத்தில் தண்ணீர் திறந்து விட்டமைக்காகவும், விவசாய பெருமக்களின் நலனிற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருவதற்காகவும் நன்றி தெரிவித்து, கோரிக்கை மனு அளித்தனர். உடன் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி சாருஸ்ரீ, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### அனைத்துத் தரப்பினரையும்

# மகிழ்ச்சிக்குள்ளாக்கும் அர்ச்சகர் - தொடர்பான தீர்ப்பு!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கம்!

சென்னை, ஆக. 26-

அர்ச்சகர் நியமனம் தொடர்பான தீர்ப்பு அனைத்துத் தரப்பினரையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கும் என்று தினகரன் நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு:-

சாதிகள் இல்லையடி பாப்பா... குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்’ என்றார் மகாகவி பாரதி. ஜாதி, மத பேதமின்றி அனைவரையும் சமமென கருத வேண்டும் என்றார் தந்தை பெரியார். அவர் வழி வந்த கலைஞர் முதல்வராக இருந்தபோது, கடந்த 2.10.1970ல் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற புரட்சிகரமான திட்டத்தை சட்டப்பேரவையில் நிறைவேற்றினார். இந்த சட்ட திருத்தத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கில், தமிழக அரசின் சட்டத் திருத்தம் செல்லும். அதே நேரம், ஆகம





விதிகளுக்கு உட்பட்டு அர்ச்சகர் நியமனம் இருக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் 1972ல் தீர்ப்பு வழங்கியது. மேலும், பல வழக்குகளும் தொடரப்பட்டன. இடைக்கால தடை கூட பெறப்பட்டது.

கடந்த 2021, மே 7ல் தி.மு.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதும் அறநிலையத்துறையில் பலவிதமான வரவேற்கத்தக்க மாற்றங்கள் உருவாகின. ஆக்கிரமிப்பில் இருந்த பல நூறு கோடி கோயில் நிலங்கள் மீட்கப்பட்டன. நூற்றுக்கணக்கான கோயில்களில் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு குடமுழுக்கு உள்ளிட்ட நிகழ்வுகள் நடந்து வருகின்றன. அனைத்து கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை, மூன்று வேளை அன்னதானம் உள்ளிட்ட பல்வேறு அதிரடி திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

பெரியாரின் எண்ணத்தில் உதித்ததை, கலைஞர் சட்டமாக கொண்டு வந்ததை, நிறைவேற்றிடும் வகையில் ஆட்சிப் பொறுப்பேற்ற 100வது நாளில் முதல்வர் மு.க.ஸ்டாலின், கடந்த 2021, ஆக. 14ல் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் திட்டத்தை சென்னையில் தொடங்கி வைத்தார். இவ்விழாவில், முதல்வர் மு.க.ஸ்டாலின், அர்ச்சகர் பயிற்சி முடித்த 29 ஓதுவார்கள் உள்பட 58 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கினார். தமிழக அரசின் இந்த திட்டத்துக்கு அனைத்து தரப்பில் இருந்தும் ஆதரவு பெருகியது. அதே நேரம் சென்னை ஐகோர்ட், ஐகோர்ட் மதுரை கிளையில் நியமனங்களை எதிர்த்தும் வழக்குகள் தொடரப்பட்டன.

இச்சூழலில், சேலம், சுகவனேஸ்வரர் கோயில் அர்ச்சகர்கள் நியமன அறிவிப்பில், ஆகம விதிகளை பூர்த்தி செய்யவில்லை என அர்ச்சகர் முத்து சுப்ரமணிய குருக்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். மனுவை விசாரித்த தனி நீதிபதி, உச்சநீதிமன்ற உத்தரவின்படி அர்ச்சகராக நியமிக்க, பரம்பரை உரிமையை மனுதாரர் கோர முடியாது. சுகவனேஸ்வரர் கோயில் ஆகம அடிப்படையிலானது என்பதால், அதன்படியே அர்ச்சகர் நியமனமும் இருக்க வேண்டும். ஆகம விதிப்படி, முறையான பயிற்சி, பூஜை செய்வதற்கான தகுதி பெற்றவர்களாக, அர்ச்சகர்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என உத்தரவிட்டிருந்தார். இதையே சென்னை ஐகோர்ட் இரு நீதிபதி அமர்வும் உறுதி செய்திருந்தது.

இந்த உத்தரவுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு மனு செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாரணையின்போது, தமிழக அரசு வக்கீல் எடுத்து வைத்த வாதங்களை ஏற்ற நீதிபதிகள், ஆகம விதிகளின்படி தேர்ச்சி பெற்றவர்களாக, முறையான பயிற்சி, பூஜை செய்வதற்கான தகுதி பெற்றவர்கள் யாரை வேண்டுமானாலும் எந்த சாதியை சேர்ந்தவராக இருந்தாலும் அர்ச்சகர்களாக நியமிக்கலாம் என உத்தரவிட்டுள்ளனர். இந்த தீர்ப்பானது அனைத்து தரப்பினரையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இனி அனைத்து சாதி அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். இதில் முறையான பயிற்சி பெற்றவர்களை, அர்ச்சகர் காலியிடங்களில் நிரப்ப வேண்டும். அனைவரும் ஒன்றே என்ற சமத்துவம் பல்கி பெருக வேண்டுமென்பதே அனைவரின் விருப்பமாகும்.

இவ்வாறு தினகரன் நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

### நொளம்பூர் வே.ராஜன் தலைமை! காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. பங்கேற்பு

# மதுரவாயல் வடக்கில் கலைஞர் நூற்றாண்டு விழா பாட்டுடை அரங்கம்!

## டி.ஆர்.பாலு எம்.பி.-அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாழ்த்துரை! கவிமாமணி அப்துல்காதர் சிறப்புரை!

மதுரவாயல், ஆக.26-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதிக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, பாட்டுடை அரங்கம் என்றத் தலைப்பில் இன்று (26.8.2023-சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு, நொளம்பூர் வேலம்மாள் ஹாலில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு பகுதிச் செயலாளர்-மண்டலக்குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் தலைமை வகிக்கிறார்.

ஆ.மாலினி, தீ.பாலாஜி, எம்.ஏ.செந்தில் சுரேஷ், எம்.உதயகுமார், எஸ்.ஜி.மாதவன், ப.ஆலன், எம்.கே.பி.அண்ணாதாசன், எம்.எம்.ஜெயரத்தினம், எம்.இ.ஸ்டாலின், எம்.ரூபன், ரமணி மாதவன், ஹேமலதா கணபதி, கே.ராஜி, ச.சங்கர் கணேஷ், அ.பாரதி, செல்வி ரமேஷ், சாந்தி ராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சி.சசிகுமார், எஸ்.ரகுபதி, பி.உமாபதி, பி.தாட்சாயினி பக்தவத்சலம், எஸ்.தினேஷ், கே.ஆறுமுகம், இ.சாரங்கபாணி, பி.சரவணன், நாகரத்தினம், ஜெ.குமார், கே.ஜானகிராமன், பி.டி.ராமச்சந்திரன், பி.தங்கவேலு, எம்.ராஜாமணி, எஸ்.ராஜேந்திரன், ஜெ.ஆனந்தன், ஏ.பிரகாஷ், கே.சபாஸ்டின், எம்.வைரம், பி.ஏழுமலை, கே.கன்னியப்பன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

பாட்டுடை அரங்கத்தை கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன், காரம்பாக்கம் க.கணபதி ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

முத்தமிழின் முழு அழகு என்ற தலைப்பில் நடைபெறும் பாட்டுடை அரங்கிற்கு கவிமாமணி அப்துல்காதர் தலைமை வகிக்கிறார்.

நெல்லை ஜெயந்தா, ஆண்டாள் பிரியதர்சினி, கருணாநிதி, இளைய கம்பன், தஞ்சை இனியன், வழக்கறிஞர் சினேகா ஆகியோர் பங்கேற்று கவி பாடுகின்றனர்.

இதில் எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ , மு.மகேஷ்குமார், க.தனசேகர், பாலவாக்கம் க.சோமு, காசி முத்து மாணிக்கம், வேளச்சேரி பி.மணிமாறன், எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வாசுகி பாண்டியன், வேளச்சேரிஎஸ்.பாஸ்கரன்,அ.மதுரை வீரமணி, வ.செல்வகுமார், வீர கனிமொழிமற்றும்பலர்கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஜி.மூர்த்தி, வி.பிரபாகரன், என்.மணிவண்ணன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

# திரு.வி.க.நகர் தொகுதியில் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக. 26-

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் விரிவாக்கம் செய்யப்படுகிறது.

முதற்கட்டமாக 1,545 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் ஒரு இலட்சத்து 14 ஆயிரம் குழந்தைகள் காலை உணவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, பயனடைந்து வந்தனர்.

இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், நாட்டிற்கே முன்னோடியாய். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள 31,008 அரசு தொடக்கப் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை 15 லட்சத்து 75 ஆயிரம் தொடக்கப் பள்ளி மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதன் முறையாக முதலமைச்சரின் காலை உணவு திட்டம் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்திட தமிழ்நாடு முழுவதிலும் விரிவாக்கம் செய்திடும் வகையில் அனைத்து தொகுதியிலும் அந்தந்த தொகுதியின் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தொடங்கி வைக்க வேண்டும் என்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையையேற்று

திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதி வார்டு எண் 73: குக்ஸ் சாலையில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் நேற்று (25/08/2023) காலை இந்த திட்டத்தினை கழக துணை அமைப்பு செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி தொடங்கி வைத்தார்.

வார்டு மாமன்ற உறுப்பினர் அம்பேத்வளவன் மாநகராட்சி மண்டலம் 6இன் செயற்பொறியாளர், உதவி கல்வி அலுவலர்,உதவி பொறியாளர், பள்ளியின் தலைமையாசிரியர்,

வட்டச்செயலாளர் தமீம்பாய், எம்.பெரேஸ்கான், புல்லட்ரமேஷ், பாலாஜி, கிருஷ்ணா அ. மூவேந்தன், இ.மோகன், தமிழரசி, அப்பு (எ) தேவேந்திரன், ஜாபர்சேக், சசிகலா, பிரதீப்குமார், அப்துல்ரசீத், எத்திராஜ், ஐ.டிவிங். எஸ்.. கௌதம், விஜிஎஸ். கௌதம் இளங்கோவன் ,முன்னாகான், நல்லதம்பி, சங்கர்,ராஜ்குமார், சுரேன், அரவிந்த் ஆகியோர் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பள்ளிப்பட்டு ஒன்றியம் சாணாகுப்பத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ 5 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் உயர் மட்ட மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்றது இந் நிகழ்ச்சியில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் துவக்கி வைத்து மேம்பாலம் அமைக்கப் பணிகளை பார்வையிட்டார்உடன் ஒன்றிய செயலாளர் சி.ஜெ. சீனிவாசன் உள்பட அரசு அதிகாரிகள் மாவட்ட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக தோழர்கள் உள்ளனர்.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வரும் படம்!



இஸ்ரோ சந்திராயன் 3 திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் அவர்களின் வீட்டில் நுழைந்ததும் பார்த்த முதல் படம்...

### தமிழ்நாடு அரசுப் பள்ளிக் குழந்தைகளுக்கு

# தாயுமானவனாகத் திகழ்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## பொதுமக்கள் நெகிழ்ச்சி!

**முதலமைச்சர் காலை உணவுத்திட்டம் விரிவாக்க நிகழ்ச்சி பற்றிய குறிப்பு:**

நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம்’ தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தி 31008 பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 17 லட்சம் அரசுப்பள்ளி மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்படும் நிகழ்ச்சியை நேற்று காலை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

பள்ளி மாணாக்கர்கள் உட்பட சுமார் 400/250 பேர் கலந்துகொண்டனர்.

திருக்குவளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்களோடு தரையில் அமர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உணவு அருந்தியது மாணாக்கர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் படித்த பள்ளியிலிருந்து முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் விரிவாக்கம் செய்யப்பட்டது திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட மக்களிடையே கூடுதல் வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளி மாணாக்கர்களோடு எளிமையாகப் பேசியும், உணவு பரிமாறிய நிகழ்ச்சிகள் அனைத்து தரப்பினர் மத்தியிலும் நெகிழ்ச்சியுடன் கூடிய வரவேற்பை உருவாக்கியுள்ளது.

பள்ளி மாணவர்களோடு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உணவு அருந்திய காட்சியைப் பார்ப்பதற்கு பெற்றோர்கள் மிகுந்த ஆர்வமுடன் இருந்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது “தாய் உள்ளத்தோடு இத்திட்டத்தை தொடங்கியுள்ளோம். எல்லோருடைய மகிழ்ச்சிக்குக் காரணமாக இருக்கிறேன். பள்ளி மாணாக்கர்கள் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். உயிர் கொடுக்கும் அரசாக திராவிட மாடல் அரசு உள்ளது” என்றவாறு உருக்கமாகப் பேசிய கருத்துக்கள், அனைவரிடையேயும் நல்ல வரவேற்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணாக்கர்கள், பெற்றோர்கள் மத்தியில் இத்திட்டம் பெரும் வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.

கிராமப்புறங்களில் உள்ள பெரும்பாலான மக்கள் வேலைக்குச் செல்லக்கூடியவர்கள் என்ற நிலையில், தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் தங்கள் குழந்தைகளுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருப்பதாக நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்ட மக்களிடையே பேசப்படுகிறது.

காலையில் பள்ளிக்குழந்தைகள் சாப்பிடாமல் சென்ற சூழல் தற்போது மாற்றப்பட்டு ‘காலை உணவுத்திட்டம்’ பெரிய பயனை ஏற்படுத்தியுள்ளது இந்நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் மத்தியில் பேசப்பட்டது.

தமிழ்நாட்டில் பிற மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வரவேற்பு சென்னையில் பெரும்பாலும் வீடுகளை இழந்துள்ள குடும்பத்தினர், பிளாட்பாரத்தில் கடைகளை நடத்தும் குடும்பத்தினரது பள்ளி மாணாக்கர்கள் மத்தியில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தால் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருப்பதுடன், அவர்களது பெற்றோர்கள் தெரிவிக்கையில், “இது தமிழ்நாடு அரசின் ஒரு மைல் கல் திட்டம், இத்திட்டம் அரசாங்கத்திற்கு மிகுந்த கூடுதல் வரவேற்பை ஏற்படுத்தும்” எனத் தெரிவிக்கின்றனர்.

மதுரை மாவட்டத்தில் ரிக்சா ஓட்டுநர்கள், சுமைதூக்கும் தொழிலாளர்கள், விவசாயிகள், கூலித்தொழிலாளர்கள் என பலதரப்பட்ட மக்கள் மத்தியில் இத்திட்டத்திற்கு மிகுந்த வரவேற்பை ஏற்படுத்தியிருப்பதாக ரிக்சா ஓட்டுநர்கள் உள்ளிட்ட பொருளாதாரத்தில் பின்தங்கிய பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

கோவையில் இத்திட்டம் தொடங்கப்பட்டபோது வடை, பொங்கல், இட்லி போன்றவை வழங்கப்பட்டது மாணாக்கர்கள் மத்தியில் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெற்றோர்கள் மத்தியில் இத்திட்டம் மிகுந்த வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை, திருப்பூர், கோவை, கன்னியாகுமரி உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களில் உள்ள கிராம மற்றும் நகர்ப்புற பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் மத்தியில் இத்திட்டம் தமிழ்நாடு அரசுக்கு பெரும் வரவேற்பை ஏற்படுத்தி வருவதாகத் தெரிகிறது.

விடியல் பயணம் மற்றும் கல்லூரி மாணவிகளுக்கானபுதுமைப்பெண் திட்டத்தைத் தொடர்ந்து காலை உணவு திட்டம் மூலம் முதலமைச்சர் மூன்றாவது சிக்ஸர் அடித்துள்ளார் என கருத்து தெரிவித்தனர்.

முதலமைச்சர் தனது உரையில் மதிய உணவுத் திட்டத்தில் முன்னாள் முதலமைச்சர்களான எம்.ஜி.ஆர். மற்றும் ஜெயலலிதா ஆகியோரின் பங்களிப்பையும் குறிப்பிட்டது அனைத்து தரப்பினரின் வரவேற்பைப் பெற்றது.

கல்வி கற்பதற்கு கட்டை விரலைக் கேட்கும் சனாதனத்திலிருந்து விலகி காலை மற்றும் மதிய உணவு வழங்கும் சமூகநீதி திராவிட மாடல் ஆட்சி என குறிப்பிட்டது பெரும் வரவேற்பைப் பெற்றது.

‘இது துரோகாச்சாரியார்கள் காலம் அல்ல’ இது ஏகலைவன் காலம் என குறிப்பிட்டது எழுச்சியாக இருந்தது.

‘படிப்பு மட்டுமே பறிக்க முடியாத சொத்து. படிப்பை நீங்கள் பாருங்கள் மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்’ என கூறியது பெரும் நம்பிக்கையை அளித்தது.

‘தமிழ்நாடு அரசுப்பள்ளி குழந்தைகளுக்கு தாயுமானவனாக தமிழ்நாடு முதலமைச்சர் திகழ்கிறார் என்பதில் ஐயமில்லை’ என அனைத்து தரப்பு மக்களும் கருத்து தெரிவித்தனர்.



காமன்வெல்த் பளுதூக்குதல் போட்டிகளில் சீனியர், ஜூனியர் மற்றும் யூத் சாம்பியன்ஷிப்பில், தங்கப்பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த தனுஷ் மற்றும் வெள்ளிப்பதக்கம் வென்ற கிஷோரை நேற்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சந்தித்து வாழ்த்துக்கூறி வெற்றி பெற்ற 2 வீரர்களையும் பாராட்டும் விதமாக தலா ரூ.50,000 மதிப்புள்ள பரிசுப்பொருட்களுக்கான கூப்பன்களை வழங்கினார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் International Track Cycling போட்டியில் பங்கேற்கவுள்ள சைக்கிங் வீராங்கனை கௌரி மிஸ்ராவுக்கு உதவிடும் வகையில், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.10 லட்சத்துக்கான காசோலையை வழங்கினார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சைக்ளிங் வீராங்கனை பூஜா ஸ்வேதா, சர்வதேச போட்டிகளில் பங்கேற்க ஏதுவாக Carbon Frame, Carbon Wheel வாங்குவதற்கு, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில், ரூ.12,30,000க்கான காசோலையை நேற்று வழங்கி வாழ்த்தினார்.



விளையாட்டுத்துறையில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உயர்த்த, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அந்த வகையில், தேசிய படகு போட்டியினை நடத்த Royal Madras Yacht Clubக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ரூ.5 லட்சத்துக்கான காசோலையை நேற்று வழங்கினார்.

### மூன்று அமைச்சர்கள் மீது ‘சுயோமோட்டோ’ வழக்கு - தி.மு.க. அரசின் மீது மட்டும் இந்த நிலைப்பாடு ஏன்?

# மறு விசாரணைக்கு ஆணையிடும் போதே தீர்ப்பு எழுதலாமா?

## திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி கேள்வி!



சென்னை, ஆக. 26-

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஜஸ்டீஸ் என்.ஆனந்த வெங்கடேஷ் அவர்கள் கடந்த 23.8.2023 (இரண்டு நாள்களுக்கு முன்பு) தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி (Suo moto) வழக்குகளாக, அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் அவரது துணைவியார், மற்றொருவர்- முன்பு அவர்களது சொத்துக் குவிப்பு வழக்கினை விசாரித்த கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் முதலிய நான்கு பேர், அதுபோலவே, அதே தேதியில் அமைச்சர் தங்கம் தென்னரசு, அவரது துணைவியார், விசாரணை காவல் துறை அதிகாரி ஆகிய மூவர் - இவர்களை சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து சிறீவில்லிபுத்தூர் நீதிமன்றம் விடுவித்ததை எதிர்த்து ‘கிரிமினல் ரிவிஷன் கேஸ்’ பற்றி தாமே முன்வந்து ,விடுவித்தது செல்லாது என்று அவ்வழக்கை மீண்டும் விசாரிக்கவேண்டும் என்பதை மய்யமாகக் கொண்டு ஓர் ஆணை - தீர்ப்பு எழுதி யுள்ளார்!

தாமே முன் வந்து விசாரிக்கும் நீதிபதி அதற்கு முன் அமைச்சர் க.பொன்முடி அவர்கள் மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் வேலூர் நீதிமன்றம் விடுவித்தது குறித்தும், அது ஏற்கத்தக்கதல்ல என்று (Suo moto) தாமே முன்வந்து விசாரித்த வழக்கிலும் இதே போல் ஓர் ஆணை - தீர்ப்பு வழங்கி, மறு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தத் தீர்ப்பு தொடங்கும் போதே, தனக்குள்ள அதிகாரம் இதற்காக இருக்கிறது என்று முதல் வாக்கியத்திலேயே முன்னுரையுடன் தொடங்கியிருக்கிறார்.

அது நீதிமன்றத்தின் அதிகாரம் - யாரும் அதைப்பற்றி கேள்வி கேட்கவோ, விமர்சிக்கவோ முடியாது. ஒப்புக் கொள்கிறோம்.

அந்த நீதிபதி அவர்கள் மிகுந்த கற்றறிந்த நீதிபதி; அவரது ஆங்கிலப் புலமை வியக்கத் தக்கது; அதில் மாறுபட்ட கருத்துகள் இருக்க முடியாது.

மூன்று டைரக் ஷனில் செயல்பட வேண்டிய ஆணைகள் ஆனால், அந்த தாமே முன் வந்து விசாரிக்கும் வழக்கில், இறுதியாக, ‘மூன்று டைரக்ஷனில்’ செயல்பட வேண்டிய ஆணைகளைத் தந்துள்ளார்.

1. அடிஷனல் பப்ளிக் பிராசிகியூட்டர் இதுபற்றி அரசு சார்பில் நோட்டீஸ் எடுத்துக் கொள்ளவேண்டும்.

2. சிறீவில்லிபுத்தூர் தனி நீதிமன்றம் எம்.பி., எம்.எல்.ஏ.,க்கள் வழக்குகளை விசாரிக்கும் கிரிமினல் ரிவிஷன் குற்றம் சுமத்துவோர் நோட்டீஸ் வழக்காக 20.9.2023இல் எடுத்துக்கொண்டு விசாரிக்கவேண்டும். (கிரிமினல் ரிவிஷன் வழக்காக).

3. இந்த ஆணை தலைமை நீதிபதிக்குத் தகவலுக்காக அனுப்பி வைக்கப்படவேண்டும்.

- இதன்மூலம் மீண்டும் விடுவிக்கப்பட்டவர்கள்மீது வழக்கு மறு விசாரணை தொடங்கவேண்டும் என்பது!

இதன்படி வழக்கு மீண்டும் மறு விசாரணைக்கு உத்தரவு என்பதற்கான ஆணையால், நீதிபதி தொடக்கத்திலிருந்து பயன்படுத்தியுள்ள ஆங்கிலச் சொற்கள் ஒரு நடுநிலைப் பார்வைக்கு முற்றிலும் மாறாக,

கடுமையாக (Harsh) கேலி, கிண்டல், நையாண்டிச் சொற்களை குறிப்பிட்டவர்களைத் தாண்டி, ஆளும் அரசுமீது அதிகார துஷ்பிரயோகம், வழக்குகளை விசாரித்த மேனாள் தலைமை நீதிபதி மற்றும் சக நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள், காவல்துறை அதிகாரிகள் அத்துணை அமைப்புகள் பொறுப்பாளர்கள் மீதும் சேற்றை வாரி இறைப்பதாக இருப்பது, அதுவும் விசாரிக்க உத்தரவிடும் நோட்டீஸ் ஆணையில், விசாரணையையே முடித்து அத்துணை பேரும் தத்தம் கடமைகளிலிருந்து தவறியவர்கள், நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைந்துள்ள அரசு இயந்திரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டே இவர்கள் விடுவிக்கப் பட்டு இருக்கிறார்கள் என்று இறுதித் தீர்ப்பை - இதற்குக் காரணமான அத்துணைப் பேரையும், சென்னை உயர்நீதிமன்றம், எல்லோரின்மீதும் குற்றப் பத்திரிகையை எழுதி வாசிப்பதுபோலவே, அதன் வாசகங்கள் அமைந் துள்ளது நியாயமான அணுகுமுறையா? சட்ட நியாயமா?

கிரிமினல் வழக்குகளில் சந்தேகத்திற்குப் பலன் எப்போது - விசாரணைகளில் (Benefit of doubt) குற்றம் சுமத்தப்பட்டவர்கள் பக்கம் தானே செல்லும் என்பது கிரிமினல் சட்ட பாலபாடம். அதை நன்கு அறிந்த மாண்பமை நீதிபதி அவர்கள், எப்படி மற்றவர்கள் முடிவுக்கு உள்நோக்கம் - உள் ஆதாயம் - அரசுத் துறைகளின் துஷ்பிரயோகம் என்பதை ஆதாரங்களைக் காட்டாமல், வெறும் யூகத்தின்மீது, “புதிய அரசாங்கம் அமையும்வரை இழுத்தார்கள்” என்று கூறுவது முதிர்ச்சி பெற்ற நியாயத்தின் வெளிப்பாடாக அமையுமா?

எடுத்துக்காட்டாக, அமைச்சர் பொன்முடி வழக்கில் பல செய்திகளை எழுதிய இந்த நீதியரசர், விழுப்புரம் நீதிமன்றத்திலிருந்து, வேலூர் நீதிமன்றத்திற்கும் மாற்றப்படுவதற்குரிய காரணங்கள் பற்றி - விழுப்புரம் நீதிமன்ற நீதிபதியிடம் பணம் கொடுத்து வழக்கை முடிக்க முயலுகிறார்; ஆகவே, வேறு நீதிமன்றத்திற்கு மாற்றுங்கள் என்று அ.தி.மு.க. லெட்டர் பேடில் கடிதம் எழுதப்பட்டதைப்பற்றியும், அதனால் அது மாற்றம் அடைந்தது என்றும் பேசப்படும் நிலையில், தனது விரிவான அலசும் தீர்ப்பில், ஏன் அதனைக் குறிப்பிடாமல், வெறும் மாற்றம் ஏதோ அரசின் செல்வாக்கினால் அமைந்தது! விருப்பத்தினால் மாற்றப்பட்டது என்பதுபோல புரிந்து கொள்ளும் வகையில் இருக்க வேண்டும்?

அதுமட்டுமல்ல, மேனாள் தலைமை நீதிபதி இருக்கையில், இவருக்கு இந்த அதிகாரம் - பொறுப்பு (கிரிமினல் துறை) வரவில்லையா? நீதியின் மேன்மை கருதி, அவருக்கே ஏதாவது கடிதமோ அல்லது நீதிபதிகள் கூட்டும் கூட்டத்திலோ “நீதி தேவன் மயக்கங்களை” தடுத்து, நீதித்துறையை தூய்மையாக்க முயன்றுள்ளாரா என்பது மக்கள் மன்றம் அறிய வேண்டியது கடமை.

பல பத்திகள் Cut - Paste - வழமைதான்.

ஒரே நாளில் தரப்பட்ட (23.8.2023) இரண்டு தீர்ப்புகளிலும் ஒரே மாதிரி வாசகங்கள்; பத்தி வாரியாக காணப்படுகின்றன.

பொதுத் தேர்தல் விரைந்து வரவிருக்கும் சூழ் நிலையில், தமிழ்நாடு அரசின்மீது இப்படி ஒரு தார் வர்ணம் பூசிக் காட்டுவதற்கு, அதுவும் ‘நோட்டீஸ்’ அனுப்பும் முன்பே, போதிய விசாரணை நடக்கும் முன்பே தீர்ப்பு எழுதப்படுவது நியாயமா? அரசைக் கேவலப்படுத்துவது ஏற்புடையதா?

புதுச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற சங்கரராமன் கொலை வழக்கில் ஏ1, ஏ2 குற்றம் சுமத்தப்பட்டவர்களான காஞ்சி சங்கராச்சாரியார்கள் ஜெயேந்திரர், விஜயேந்திரர் ஆகியோர் மொத்தம் 189 சாட்சியங்களில் 83 பிறழ் சாட்சியங்கள் காரணமாகவே அக் கொலைக் குற்ற வழக்கிலிருந்து (மாவட்ட நீதிபதியிடம் தொலைபேசிப் பேச்சு புகார் உள்ளது) விடுதலையானார்களே, அந்த குற்ற வழக்குகளை - குற்ற வழக்குகளுக்கு லிமிட்டேஷன் ஒன்றும் கிடையாது என்ற நிலையில், கிரிமினல் வழக்கு அதிகார நீதிபதி அவர்கள் இதுவரை ஏன் சம்பந்தப்பட்ட வழக்கில் தாமே முன்வந்து விசாரிக்க ஆணையிட்டிருக்கவில்லை?

தி.மு.க.மீதும், தி.மு.க. அரசுமீதும் மட்டும் பாய்வது ஏன்?

குறிப்பாக தி.மு.க.மீதும், தமிழ்நாடு அரசின்மீதும் அதன் அமைச்சர்கள்மீதும் மட்டும் ஏன் பாய்கிறது என்ற கேள்வி மக்கள் மன்றத்தில் எழச் செய்யுமே!

பல மேனாள் ஆளுங்கட்சி அமைச்சர்கள் மீதுள்ள வழக்குகள் குறித்து இதே வேகம் வந்திருக்கவில்லையே என்று நோக்கும்போது, இது ஒருதலைப்பட்ச நோக்கம் போன்றே எவருக்கும் எண்ண தோன்றும்!

இந்த மறுவிசாரணை ஆணை மற்ற பல அரசுத் துறைகள்மீது - சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதிபதிகள் முதல், இந்நாள் நீதிபதிகள் வரை குற்றம் சுமத்தி, நீதித் துறை, நிர்வாகத் துறை, ஆட்சி மீது மக்கள் நம்பிக்கையை இழக்கச் செய்யாதா?

அதுவும் முழு மறுவிசாரணைக்கு முன்பே முடிவுக்கு வந்ததுபோல் இப்படி எழுதுவது - நீதிமன்றத்தில் மனு தர்மம் கோலோச்சத் தொடங்கி விட்டதோ என்று தான் எண்ணம் எவருக்கும் ஏற்படுவது தவிர்க்க முடியாததே!

நீதிமன்றங்களுக்குரிய மாண்பைக் காப்பாற்றவும், அவற்றின்மீதுள்ள நம்பிக்கையைக் குறைக்கும் அல்லது குலைக்கும் வகையில் தீர்ப்புகளோ, ஆணைகளோ வந்தால், அது பொதுநலக் கண்ணோட்டப்படி விரும்பத் தக்கதா?

“வெறுப்பு அரசியல் பிரச்சாரம் கூடாது; அது தடுத்துநிறுத்தப்பட வேண்டும். சட்டத்தின் மாண்புநிலை நிறுத்தப்பட வேண்டும்“ என்று உச்சநீதிமன்றம் பல தீர்ப்புகளில் கூறும் நிலையில், “வேலியே பயிரை மேய்வதைப் போல” இப்படி உயர்நீதிமன்ற நீதிபதி அவர்களே இப்படி ஒரு ஆட்சி மீது வெறுப்பு - நீதிபதிகள் மீதே வெறுப்பு ஏற்படுத்தும் பிரச்சாரம் ஏற்பட வழி வகுக்காதா? மறு விசாரணைக்கு முன்பே தண்டனைத் தீர்ப்பு எழுதி விடுவது நீதித்துறைக்கு ஏற்ற மரபா - நீதிமன்ற வரலாற்றிற்கும் பெருமை சேர்ப்ப தாகுமா? என்ற கேள்வியில் இத்தகைய தொடர் மூன்று ‘திரிசூல’ ஆணைகள்மீது எழும்புவது தவிர்க்க முடியாததே!

‘சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவராக’ இருக்கவேண்டும் என்ற வரிகளை நீதிபதிகள் அடிக்கடி எழுதுவார்கள். அதை இப்போது இங்கே பயன்படுத்தி, இந்த விசாரணைக்குமுன் தீர்ப்பு எழுதியுள்ள கொடுமையைக் கண்டு, வேதனையும், அதற்கு உடனடியாக பரிகாரமும் வந்தால் மட்டுமே நீதிமன்றக் கறைகள் துடைக்கப்பட முடியும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பவானிசாகர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

# வி.ஏ.ஆண்டமுத்து மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஆக.26–**

**பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் வி.ஏ. ஆண்டமுத்து அவர்கள் நேற்று இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். செய்தியறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :-

பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினரும் கழகத்தின் மூத்த செயல்வீரருமான வி.ஏ. ஆண்டமுத்து அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

கழகத்தின் மீதும், தலைவர் கலைஞர் மீதும் மிகுந்த பற்று வைத்திருந்த அன்னாரது மறைவு பேரிழப்பாகும்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், கழகத்தினர் மற்றும் பவானிசாகர் தொகுதி மக்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில்

# உதவி செவிலியர் பயிற்சியில் சேர விண்ணப்பிக்கலாம்!

## சென்னை மாநகராட்சி அறிவிப்பு!

சென்னை,ஆக.26-

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் தண்டையார்பேட்டையில் உள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் 2023-24 ஆண்டிற்கான மருத்துவ இணையியல் படிப்பான இரண்டாண்டு உதவி செவிலியர் பயிற்சி (ANM COURSE) தொடங்கப்பட உள்ளது.

இப்பயிற்சியில் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் வாரிசுகளுக்கும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயின்ற மாணவியருக்கும் முன்னுரிமை அளிக்கப்படும். மேலும் அரசு மற்றும் அரசு சார்ந்த பள்ளிகளில் பயின்ற மாணவியரும் விண்ணப்பிக்கலாம். உதவி செவிலியர் பயிற்சிக்கு (ANM COURSE) பன்னிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழ்நாடு அரசு விதிகளின்படி ஒற்றை சாளர முறையில் சமூகம் வாரியாக சுழற்சி முறையில் மாணவியர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் இயக்குநர் (பொ) தொ.நோ.ம.மனை.எண்.187, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்பேட்டை, சென்னை600 081ல் உள்ள தொற்றுநோய் மருத்துவமனை அலுவலகத்தில் 30.08.2023 முதல் 07.09.2023 வரை காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை அனைத்து வேலை நாட்களிலும் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 08.09.2023 மாலை 5.00 மணிக்குள். அதன் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது எனத் தெரிவித்துக் கொள்ளப் படுகிறது.


பெருநகர சென்னை மாநகராட்சி
பேருந்து சாலைகள் துறை
கலைஞர் 100 1924 - 2023

பே.சா.து.ந.க.எண்.பி3 / 4393 / 2023 மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை

கீழ்கண்ட பணிகளுக்கு குறுகிய கால மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது

சிங்கார சென்னை 2.0

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோரயமாக (18% GST சேர்த்து ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| மண்டலம் - 1, 2, 13 & 15 உள்ள 109 எண்ணிக்கையிலான உட்புற தார் சாலை, ILP & பேருந்து சாலைகளில் தார், சிமெண்ட் சாலைகள் மற்றும் நடைபாதைகள் மேம்படுத்தும் பணி (சிப்பம் 1 மற்றும் 2 வரை) (சிங்கார சென்னை 2.0 திட்டம்) 2023-24 | 1 மற்றும் 2 | குறைந்த பட்ச பணியின் மதிப்பு ரூ.931.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.981.00 இலட்சங்கள் | பணியின் மதிப்பு 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 13.09.2023 மாலை 3.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 14.09.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 4758 / ஒப்பந்தப்புள்ளி / 2023 மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)

பெருநகர சென்னை மாநகராட்சி
பேருந்து சாலைகள் துறை
கலைஞர் 100 1924 - 2023

பே.சா.து.ந.க.எண்.பி3 / 4392 / 2023 மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை

கீழ்கண்ட பணிகளுக்கு குறுகிய கால மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது

SFC (2023-24)

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோரயமாக (18% GST சேர்த்து ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| பல்வேறு மண்டலங்களில் உள்ள 551 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளில் தார், சிமெண்ட் கான்கிரீட் மற்றும் இன்டர்லாக் பேவர் ப்ளாக் சாலைகள், சாலை பிரிப்பான், மற்றும் பேருந்து சாலைகள் மற்றும் நடைபாதை பணிகள் மேம்படுத்தும் பணி SFC (2023-24) | 1 முதல் 11 வரை | குறைந்த பட்ச பணியின் மதிப்பு ரூ.752.00 இலட்சங்கள் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.778.00 இலட்சம் | பணியின் மதிப்பு 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 13.09.2023 மாலை 3.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 14.09.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 4757 / ஒப்பந்தப்புள்ளி / 2023 மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)

தமிழ்நாடு அரசு
நீர்வளத்துறை - நடுக்காவிரி வடிநில வட்டம், திருச்சி - 620 020.
மொத்த தொகை ஒப்பந்தமுறை - இனவிலை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரு உறை ஒப்பந்த வழி முறை)
கலைஞர் 100 1924 - 2023

மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 03 / 2023-2024 / வஅ1 / ந.கா.வ.வ / திருச்சி / நாள் 24.08.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் மின்னனு (E-Tender) வழியாக உரிய வகுப்பில் பதிவு பெற்ற தகுதி வாய்ந்த மற்றும் பாசன கட்டுமான பணிகளில் அனுபவம் பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கண்காணிப்புப் பொறியாளர், நீவது, நடுக்காவிரி வடிநில வட்டம், திருச்சி அவர்களால் கீழ்காணும் பணிகளுக்கு வரவேற்கப்படுகின்றது.

| வ. எண். | வேலையின் பெயர் | பணியின் தோராய மதிப்பு (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட ரூபாய் இலட்சத்தில்) | முன்வைப்புத் தொகை (ரூ.) | ஒப்பந்த காலம் (மழைக் காலம் உட்பட) | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் இறுதி நாள் மற்றும் நேரம் (சர்வர் நேரப்படி) | ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் (சர்வர் நேரப்படி) | ஒப்பந்தக்காரரின் உரிய பதிவு வகுப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | ஆற்றுப் பாதுகாப்புக் கோட்டம், திருச்சி | | | | | | |
| 1 | நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், ஒருவந்தூர் கிராமத்தில் காட்டுப்புத்தூர் ஊட்டு வாய்க்காலினைப் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தும் பணி | 999.99 | 5,10,500 | 24 மாதங்கள் | 03.10.2023 3.00 பிற்பகல் வரை | 04.10.2023 3.00 பிற்பகல் முதல் | வகுப்பு - I ல் ரூ.75.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் மாநில அளவில் அல்லது பொதுப்பணித்துறையில் இதற்கு சமமான |
| 2 | திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டம், நகர் கிராமத்தில் மேல் பங்குனி வாய்க்காலின் குறுக்கே இடைநிலை நீரொழுங்கியினை புனரமைக்கும் பணி | 1460.35 | 7,41,000 | 24 மாதங்கள் | 03.10.2023 3.30 பிற்பகல் வரை | 04.10.2023 3.30 பிற்பகல் முதல் | வகுப்பு - I ல் ரூ.75.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் மாநில அளவில் அல்லது பொதுப்பணித்துறையில் இதற்கு சமமான |

ஒப்பந்தப்புள்ளிகளை 04.09.2023 முதல் https://www.tntenders.tn.gov.in என்ற இணையதளத்தில் இலவசமாக பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். முன்வைப்புத் தொகை செலுத்த வேண்டிய விபரம் மற்றும் இதர விவரங்கள் மற்றும் விதி முறைகளை பார்க்கலாம். மேலும் கண்காணிப்புப் பொறியாளர், நீவது, நடுக்காவிரி வடிநில வட்டம், திருச்சி அலுவலகத்திலும் தெரிந்து கொள்ளலாம். அனைத்து திருத்தங்கள் / கால நீட்டிப்பு / மாற்றங்கள் ஏதாவது இருப்பின், மேற்குறிப்பிட்ட இணைய தளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

செ.ம.தொ.இ / 4742/ ஒப்பந்தப்புள்ளி /2023

கண்காணிப்புப் பொறியாளர், நீவது
நடுக்காவிரி வடிநில வட்டம், திருச்சி - 620 020.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்து பள்ளிகளிலும் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கான காலை உணவு திட்டத்தினை நேற்று (25.08.2023) தொடங்கி வைத்ததை தொடர்ந்து, வேலூர் மாவட்டம், காட்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சேவூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி க. ஆர்த்தி, மகளிர் திட்ட இயக்குநர் நாகராஜன், காட்பாடி ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன் துணைத்தலைவர் சரவணன், துணை மேயர் சுனில்குமார், வேலூர் மாநகராட்சி 1வது மண்டல குழு தலைவர் திருமதி புஷ்பலதா வன்னிய ராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள திருக்குவளையில் பள்ளிக் குழந்தைகளுக்கான காலை உணவு திட்டத்தை நேற்று (25.8.2023) துவக்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து திருச்சி மாவட்டம் மணிகண்டம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 195 பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்து பள்ளி மாணவ மாணவிகளுக்கு உணவுகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார்,மாநகர மேயர் அன்பழகன், திருரங்கம் சட்டமன்ற உறுப்பினர் பழனியாண்டி, மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி மணிகண்டம் ஒன்றிய செயலாளர் மாத்தூர் கருப்பையா, ஒன்றிய செயலாளர் கதிர்வேல் மற்றும் உதவி இயக்குனர் ஊராட்சிகள் கங்காதரணி மற்றும் அரசு அலுவலர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள், கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




ஊரக வளரச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், செட்டியபட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை நேற்று (25.08.2023) தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, அவர்கள், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி மு.மகேஸ்வரி முருகேசன், மாணவ, மாணவிகள் உள்ளனர்.



இந்தியாவிலேயே முதல்முறையாக அரசுப் பள்ளியில் படிக்கும் மாணவ-மாணவிகளுக்கு காலை உணவு திட்டத்தை கழகத் தலைவர் தமிழக முதலமைச்சர் அவர்களால் நேற்று (25.8.2023) முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பயின்ற திருக்குவளை தொடக்கப்பள்ளியில் துவங்கி வைத்ததை தொடர்ந்து கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அரசு நடுநிலைப்பள்ளியில் காலை உணவு வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து மாணவச் செல்வங்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார். உடன் மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு, மேயர் பிரியா, பகுதி கழக செயலாளர்கள், ஏ.ஆர்.பி.எம். காமராஜ், எஸ்.மதன்மோகன் மற்றும் அரசு அதிகாரிகள், மாவட்ட நிர்வாகிகள்,மாநில நிர்வாகிகள்,குதி கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட/ பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், கழக முன்னோடிகள் என பலர் கலந்து கொண்டனர்.



பசிப்பிணி என்பதையே அறியக்கூடாது!

# அறிவுப்பசி ஒன்றே மாணவச் செல்வங்களுக்கு வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, ஆக. 26–**

**இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி தொடங்கி வைத்தது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப்பதிவில், "மாணவச் செல்வங்கள் பசிப்பிணி என்பதையே அறியக் கூடாது! அறிவுப் பசி ஒன்றே மாணவச் செல்வங்களுக்கு வேண்டும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வரின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

திருக்குவளையின் இன்றைய காலை, வரலாற்றின் புதிய தொடக்கம்!

நீதிக்கட்சி ஆட்சி தொடங்கி 2021 வரை மதிய உணவுத் திட்டங்களே இருந்தன. நூறாண்டுகள் கடந்து காலை உணவுத் திட்டம் தொடங்கியுள்ளோம். இந்த முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் விரிவாக்கம் 17 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் பசியாற்றவுள்ளது.

எனது அழைப்பை ஏற்று, தங்களது பகுதிகளில் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்த மக்கள் பிரதிநிதிகள் அனைவருக்கும் நன்றி!

பசிப்பிணி என்பதையே மாணவச் செல்வங்கள் அறியக்கூடாது!

அறிவுப்பசி ஒன்றே அவர்களுக்கு வேண்டும்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைக்கிறார்!

# பழஞ்சூர் கே.செல்வம் இல்ல மணவிழா!

## அமைச்சர் துரைமுருகன் - டி.ஆர்.பாலு எம்.பி. - கே.என்.நேரு - அமைச்சர்கள் வாழ்த்து!



பட்டுகோட்டை, ஆக.26-

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை நகரத்தைச் சேர்ந்த என்.செந்தில்குமார் - லெட்சுமி அவர்களின் புதல்வர் டாக்டர் எஸ். விக்னேஷ்வரன், தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம், அஞ்சூர் தலைமை செயற்குழு உறுப்பினர் மாநில வர்த்தகர் அணி துணைத் தலைவர் பழஞ்சூர் கே.செல்வம் - சுமித்திரை, அவர்களின் புதல்வி டாக்டர் எஸ். அனுஷ்யா ஆகியோரது திருமணம் நாளை (27-08-2023- ஞாயிற்றுகிழமை) காலை 10 மணியளவில் பட்டுகோட்டை - அறந்தாங்கி சாலை, கொண்டிக்குளம் எஸ்.ஆர். மகாலில் நடைபெறுகிறது.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை வகிக்கிறார்.

தஞ்சை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் கா. அண்ணாதுரை வரவேற்கிறார்.

இம்மணவிழாவை அமைச்சர் - கழகப் பொதுச் செயலாளர் துரை முருகன், நாடாளுமன்ற உறுப்பினர் - கழகப் பொருளாளர் டி. ஆர்.பாலு, நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே. என்.நேரு. வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், பி.மூர்த்தி, டி.ஆர். பி.ராஜா, செஞ்சி கே.எஸ். மஸ்தான், சிவ.வீ.மெய்யநாதன், ஆர்.எஸ்.பாரதி, அன்பகம் கலை, என்.ஜெயக்குமார், டி.கே.எஸ்.இளங்கோவன், துரை.சந்திரசேகரன், எஸ்.கல்யாணசுந்தரம், எஸ். எஸ்.பழநிமாணிக்கம், பூண்டி. கே.கலைவாணன், ஏ.கே.எஸ்.விஜயன், ப.பாலசுப்பிரமணியன், என்.கௌதமன், நிவேதா முருகன், தியாகராஜன், கே.வைரமணி, ஏ.பி.நந்தகுமார், கோவி.செழியன், செ.ராமலிங்கம், எஸ்.ஆர்.பார்த்திபன், க.அன்பழகன், டி.கே. ஜி.நீலமேகம், நா. அசோக்குமார், டி.கே.கோவிந்தராஜன், எஸ்.கதிரவன், ஏ. சௌந்தராஜன், ஏ.மகாராஜன், ஏ.கிருஷ்ணசாமி, மு. அன்பழகன், சண்.இராமநாதன், மரு.அஞ்சுகம் பூபதி, உஷாபுன்னியமூர்த்தி, வி.சி. சந்திரகுமார், அன்னியூர் ஏ.சிவா, காசி.முத்துமாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

டி.உதயசூரியன் என். ஆர்.ரெங்கராஜன், எம். ராமச்சந்திரன், கே.டி. மகேஷ்கிருஷ்ணசாமி, பி.ஆடலரசன், துரை. இளங்கோ, த.சந்திரசேகரன், சி.பக்கிரிசாமி, ஜெயபாரதி விசுவநாதன், ந. இளையராஜா, சி.இறைவன், து.செல்வம் ஆர்.ராமசாமி, கார்த்திகேயன் வேலுச்சாமி, வி.ஜெயப்பிரகாஷ், துரை.ஜெயக்குமார் ஆகியோர் வாழ்த்துரையாற்று கின்றனர்.

இம்மணவிழாவில் சுப. சேகர், எஸ்.எச்.அஸ்லம், ஆர்.பி.ரமேஷ், பொன்.சத்தியமூர்த்தி, ஞா.மைக்கேலம்மாள், அ.மு.ரூஸ்வெஸ்ட், மு.தனபால், கௌசல்யா கௌதமன், அ.அப்துல் மஜீது, டி.பழனிவேல் எஸ்.சண்முகப்பிரியா, தாஹிரா அப்துல்கரீம், வாஹிஜா முகைதீன், லெ.முருகானந்தம், சாந்தி சேகர், ஜெ.சுந்தரத்தமிழ், பிரியா இளங்கோ, பி.ஆர். என்.செந்தில்குமார், இராம. குணசேகரன், ஆர்.பி.முருகானந்தம், லண்டன். வீ. கோவிந்தராஜ், ஆர். இளங்கோ, க.அன்பழகன், மு.கி.முத்துமாணிக்கம், என்.பி.பார்த்திபன், பா. ராமநாதன், வை.ரவிச்சந்திரன், எஸ்.சத்தியவிஜயன், சோம.கண்ணப்பன், கோ.இளங்கோவன், டி.ஏ.இராஜகோபாலன், என்.எஸ்.சேகர், ஆர்.மாரிமுத்து, சீனி.அண்ணாதுரை சீனி.இளங்கோ, பி.வி.ஆர். அபினேஷ், மு.முகிலன் ஆரோ.அருள், ஏ.ஆர்.பி. அழகிரி அ.வீரமணி, டாக்டர் ஆர்.சந்திரசேகர் ஆர். அரவிந்த் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, முன்னாள், இந்நாள் கழக நிர்வாகிள் சார்பு அணி அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழக நிர்வாகிகள் வாழ்த்துகின்றனர்.

நன்றியுரை: மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆதி.ராஜேஷ்

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில்

# தேசிய அளவில் வெற்றி பெறும் மாற்றுத் திறனாளிகளுக்கு உயரிய ஊக்கத் தொகை!

## தமிழ்நாடு அரசு -அரசாணை வெளியீடு!

சென்னை, ஆக.26

தமிழ்நாடு அரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பாக சர்வதேச மற்றும் தேசிய அளவிலான பல்வேறு விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெறும் விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கிட 2019 ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டது. அந்த அரசாணையில் பின்வரும் போட்டிகளான ஒலிம்பிக் போட்டிகள், உலகக் கோப்பை போட்டிகள், காமன் வெல்த் போட்டிகள், ஆசிய போட்டிகள், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள், அகில இந்திய பல்கலைகழகங்களுக்கிடையேயான போட்டிகள் மற்றும் தேசிய அளவிலான போட்டிகள் இடம் பெற்றிருந்தன. தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் மாற்றுத் திறனாளி வீரர் / வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கும் பிரிவு இடம் பெறவில்லை.

தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் மாற்றுத் திறனாளி வீரர் / வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகைகள் வழங்கப்படாத குறையினை கண்டறிந்து அதனை களையநடவடிக்கை மேற்கொள்ளுமாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் மாற்றுத் திறனாளி வீரர் / வீராங்கனைகள் மூத்தோர் பிரிவில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் வெல்பவருக்கு உயரிய ஊக்கத்தொகைகள் முறையே ரூ.5.00 இலட்சம், ரூ.3.00 இலட்சம் மற்றும் ரூ.2.00 இலட்சம் எனவும் இளையோர் பிரிவில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் வெல்பவருக்கு உயரிய ஊக்கத் தொகைகள் முறையே ரூ.3.00 இலட்சம், ரூ.2.00 இலட்சம் மற்றும் ரூ.1.50 இலட்சம் எனவும் வழங்குவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# தி.மு.க. இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர்-மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண விவரம்

கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூர், திருவாரூர் நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கடலூர் ஆகிய மாவட்டங்களில் அரசு மற்றும் பல்வேறு கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார். அந்தப் பயண விவரம் வருமாறு.

| நேரம் | இடம் | நிகழ்ச்சி |
|---|---|---|
| **25-08-2023 வெள்ளிக்கிழமை** | | |
| மாலை 5 மணி | திலகர் திடல், தஞ்சாவூர் | தஞ்சாவூர் வடக்கு, தெற்கு & மத்திய மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| இரவு 7 மணி | கலைஞர் கோட்டம், திருவாரூர் | திருவாரூர் மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| **26-08-2023 சனிக்கிழமை** | | |
| காலை 9 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம் | மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் மண்டல ஆய்வுக்கூட்டம் |
| மாலை 5.00 மணி | அவுரித் திடல், நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| இரவு 7.00 மணி | ஸ்ரீநிவாசபுரம், மயிலாடுதுறை | மயிலாடுதுறை & காரைக்கால் மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| **27-08-2023 ஞாயிற்றுக்கிழமை** | | |
| காலை 10.15 மணி | எஸ்.ஆர். திருமண மண்டபம், பட்டுக்கோட்டை | பழஞ்சூர் செல்வம் இல்லத் திருமண விழா |
| காலை 11.00 மணி | கே.கே.டி திருமண மண்டபம், பட்டுக்கோட்டை | பரமேஸ்வரன் இல்லத் திருமண விழா |
| காலை 11.50 மணி | மாலியக்காடு, பட்டுக்கோட்டை | மாவட்டத் துணைச் செயலாளர் ரமேஷ் இல்ல புதுமனைப் புகுவிழா |
| நண்பகல் 12.30 மணி | கோமள விலாஸ், பட்டுக்கோட்டை | தஞ்சை தெற்கு மாவட்டக் கழக முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்குதல் |
| மாலை 5.00 மணி | மருத்துவக் கல்லூரிச் சாலை, புதுக்கோட்டை | புதுக்கோட்டை வடக்கு & தெற்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| இரவு 7.00 மணி | கலைஞர் அறிவாலயம், திருச்சி | திருச்சி வடக்கு, தெற்கு & மத்திய மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| **28-08-2023 திங்கள்கிழமை** | | |
| காலை 11.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அரியலூர் | பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் |
| மாலை 4.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பெரம்பலூர் | பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் |
| இரவு 7.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகச் சாலை, பெரம்பலூர் | அரியலூர் & பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| **29-08-2023 செவ்வாய்க்கிழமை** | | |
| காலை 10.30 மணி | கழுதூர், விருத்தாசலம், கடலூர் மாவட்டம் | கடலூர் கிழக்கு & மேற்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| மாலை 4.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் | பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் |

**அன்பகம், சென்னை – 18.**

**நாள் : 25–08–2023.**

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம்!

# மாநில பொதுக்குழுக் கூட்டம்!

## மாநில தலைவர் ரெ.தங்கம் அறிவிப்பு!

சென்னை ஆக.26-

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு கூட்டம், நாளை (27.8.2023 - ஞாயிற்றுகிழமை) மாலை 3 மணியளவில் சென்னை தி.நகர் தீரர் ஜெ.அன்பழகன் நினைவகம்,சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மூன்றாண்டுக்கு ஒருமுறை மாநில நிர்வாகிகள் மறு சிரமைக்கப்பட்டு, புதிய மாநில தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர், துணை பொதுச்செயலாளர்கள், மாநில தகவல் தொடர்பு செயலாளர், மகளிர் அணி செயலாளர், துணை செயலாளர்கள், மாநில பொதுக்குழு, மாநில செயற்குழு உறுப்பினர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான மக்கள் தொடர்பு அலுவலர்கள் (மாற்றுத்திறனாளிகள் அல்லாத நல்ல நிலையில் உள்ளவர்கள்) உள்ளிட்ட பொறுப்புகளுக்கு நியமிக்கப்பட உள்ளனர்.

இதனால், இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் அனைத்து மாவட்ட நிர்வாகிகளும், சங்க உறுப்பினர்களும் தவறாது பங்கேற்று புதிய நிர்வாகிகளை நியமனம் குறித்து ஆலோசனை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தனது அறிக்கையில் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

அமைச்சர் பெருமக்கள் - கழக முன்னணியினர் வாழ்த்து!

# ப.கவுசிகபூபதி இல்ல மணவிழா!

## சேலத்தில் வரவேற்பு நிகழ்ச்சி!

சென்னை, ஆக.26-

சேலம் மாவட்டம், சங்கிரி வட்டம், மோரூர் கிராமம், திருவாண்டிபட்டி நினைவில் வாழும் ப.பழனிமுத்து - ப.இந்திராணி அம்மாள் அவர்களின் மகன் வழி பெயரனும், சேலம் மாவட்டம், கெஜல்நாய்க்கன்பட்டி நினைவில் வாழும் அய்யாசாமி - ராஜம்மாள் அவர்களின் மகள்வழி பெயரனும், தி.மு.க. தலைமை செயற்குழு முன்னாள் உறுப்பினர் ப.கவுசிகபூபதி - அமுதா ஆகியோரின் புதல்வர் ஜி.இளவரசனுக்கும் - சு.நரேந்திரன் - ந.லதா ஆகியோரின் புதல்வி என்.கிருத்திகாவிற்கும் மணவிழா 27.08.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் திருவேற்காடு ஜி.பி. என். பேலஸில் நடைபெறுகிறது.

மேலும் திருமண வரவேற்பு நிகழ்ச்சி 26-8-2023 சனிக்கிழமை மாலை 6.00 மணயளவில் ஜி.பி.என். பேலஸ், திருவேற்காடு, சென்னையிலும்,

1-9-2023 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் ஸ்ரீ ரத்னவேல் ஜெயக்குமார் திருமண மண்டபம், 5 ரோடு, சேலத்திலும் நடைபெறுகிறது.

இம்மணவிழாவை வேளாண்மை பல்கலைக் கழகம், முன்னாள் துணை வேந்தர் ப.முருகேசபூபதி - மு.ஜான்சிராணி மற்றும் தி.மு.க. தலைமை செயற்குழு முன்னாள் உறுப்பினர் ப.கவுசிகபூபதி - அமுதா ஆகியோர் வரவேற்கின்றனர்.

மேலும் சு.நரேந்திரன், லதா நரேந்திரன், ந,பிரவின் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இம்மணவிழாவில் அமைச்சர் பெருமக்கள், கழக முன்னணியினர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

# விரிவுபடுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்:



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.அதன்படி நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி அலுவலகம் எதிரில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் காலை சிற்றுண்டி உணவுத் திட்டத்தை சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் முன்னிலையில் துவக்கி வைத்தார். அதன்பின் மாணவிகளுடன் அமர்ந்து பேரவைத் தலைவர் மு.அப்பாவு காலை சிற்றுண்டி அருந்தினார். நிகழ்வில் இராதாபுரம் ஒன்றியச் செயலாளர் ஜோசப் பெல்சி, மாவட்ட திட்ட இயக்குனர் சுரேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநிலம் முழுவதும் காலை சிற்றுண்டி உணவு திட்டத்தினை விரிவாக்கம் செய்ததை தொடர்ந்து ஈரோடு மாவட்டம் வெள்ளோடு அரசு பள்ளியில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி துவங்கி வைத்தார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, சென்னிமலை ஒன்றிய செயலாளர் செங்கோட்டையன், சென்னிமலை ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் காயத்ரி இளங்கோ உள்ளிட்ட ஆசிரியர்கள், துறை சார்ந்த அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா ஊராட்சி ஒன்றியம் சென்ன சமுத்திரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நேற்று (25.08.2023) 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் 93 குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை தொடங்கி வைத்து குழந்தைகளுக்கு உணவினை பரிமாறினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ச.வளர்மதி, திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருமதி. க.லோகநாயகி, திட்ட இயக்குநர் மகளிர் திட்டம் ரவிச்சந்திரன், ஒன்றியக் குழுத் தலைவர் சே.வெங்கட்ரமணன் மற்றும் பலர் உள்ளனர்.



முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் கிழக்கு ஒன்றியம் பட்டூர் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தொடங்கி வைத்தார். உடன் ஆசிரியர்கள், மங்களூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பட்டூர் வீ.அமிர்தலிங்கம், திட்டகுடி நகரக் கழகச் செயலாளர் வி.பி.பி.பரமகுரு உள்ளனர்.



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அரசு ஆரம்ப சுகாதார நிலைய ஆர்.சி.எச் தூய்மை பணியாளர்களை பல்நோக்கு மருத்துவ பணியாளர்களாக பணி நியமனம் செய்து அவர்களின் ஊதியத்தை ரூ.1,500 லிருந்து ரூ.15,000 மாக உயர்தியதற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (25.08.2023) சென்னை, சைதாப்பேட்டையில் நடைபெற்ற நிகழ்வில், நன்றி பாராட்டும் விதமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் நினைவு பரிசினை வழங்கி பாராட்டு தெரிவித்தார். இந்நிகழ்வில் தோழர் வீரபாண்டியன், தமிழ்நாடு அரசு ஆரம்ப சுகாதார நிலைய ஆர்.சி.எச் தற்காலிக துப்புரவு பணியாளர்கள் நலச் சங்கத்தின் கௌரவத் தலைவர் டாக்டர்.ஜி.ஆர்.இரவீந்திரநாத், பொதுச் செயலாளர் டாக்டர்.ஏ.ஆர். சாந்தி மற்றும் தமிழ்நாடு அரசு ஆரம்ப சுகாதார நிலைய ஆர்.சி.எச் தற்காலிக துப்புரவு பணியாளர்கள் நலச் சங்கங்கத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் முதலமைச்சரின்

# காலைச் சிற்றுண்டி திட்டம் விரிவாக்கம்!

## அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்!

திருவண்ணாமலை, ஆக.26-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (25.08.2023) நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளையில், முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை மாநில முழுவதும் விரிவாக்கம் செய்து, திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், கொளக்குடி ஊராட்சி, அம்மன் நகரில் செயல்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை தொடங்கி வைத்து மாணவ, மாணவிகளுக்கு உணவு பரிமாறி மாணவிக்கு உணவினை ஊட்டிவிட்டு பேசியதாவது:

முதலமைச்சர் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் திராவிட மாடல் என்னும் சிறப்பான ஆட்சி செய்துவருகிறார். மேலும் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் இரண்டாம் கட்டமாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊரான திருக்குவளையில் முதலமைச்சர் அவர்கள் நேற்று தொடங்கி வைத்ததில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். நமது திருவண்ணாமலை மாவட்டத்தில் 860 ஊராட்சிகளில் 18 ஒன்றியங்கள் 4 நகராட்சிகள் 10 பேரூராட்சிகள் உள்ளன. அதேபோல் உணவு சமைப்பது பரிமாறுவது அம்மாக்களின் வேலை அதற்கு தகுந்தார்போல் அம்மன் நகரில் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது மிகவும் பொருத்தமானது. மேலும் காலை உணவு திட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த ஊரான நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளை அவர் படித்த பள்ளிக்கூடத்தில் இந்த திட்டம் இன்று முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டதை நேரலையாக ஒளிப்பரப்பட்டது. இந்நிகழ்ச்சியின் வாயிலாக இத்திட்டத்தை பற்றி தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களுக்கு அறியும் வகையில் பல கருத்துகளை எடுத்துரைத்தார்கள். தமிழ்நாடு சட்டமன்றத்தில் 110 விதி கீழ் 1முதல் 5 வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு காலை உணவு திட்டம் துவங்கப்படும் என (07.05.2022) அன்று அறிவித்தார்கள். அதன் தொடர்ச்சியாக (15.09.2022) அன்று சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் தொடங்கப்பட்டது. அன்று நான் முதல்வருடன் மதுரையில் இருந்தேன். முதல் கட்டமாக 1545 பள்ளிகளில் 1 இலட்சத்து 15 ஆயிரத்தி 92 மாணவ, மாணவிகள் பயனடைந்தனர். இத்திட்டத்தை கூடுதலாக அப்போழுதே தொடங்கியிருக்கிறலாம். ஏன் என்றால் அப்போழுது நம்மிடம் போதுமான நிதியில்லை முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் நம் மாநில கடனாக ரூ.6 இட்சத்து 25 ஆயிரம் கோடி கடனில் விட்டு சென்றார்கள். இதற்கு மட்டும் மாதம் ரூ.48 ஆயிரம் கோடி வட்டி மட்டும் தமிழக அரசு செலுத்தி வருகிறது. இதையெல்லாம் சமாளித்து தற்போது இத்திட்டத்தை அறிவித்து முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ளார். மேலும் இரண்டாம் கட்டமாக 31 ஆயிரத்து 800 பள்ளிகளில் 17 இலட்சம் மாணவ, மாணவிகள் காலை உணவு திட்டத்தில் பயன்பெறுகின்றனர். முன்பு ஆட்சி பொறுப்பில் இருந்தவர்கள் கடன் ஒரு பக்கம், நிதி சுமை ஒருபக்கம் இதனையெல்லாம் சரி செய்து ஆற்றல் மிக்க முதலமைச்சராக சாதனைபுரிந்து வருகிறார். நமது திருவண்ணாமலை மாவட்டத்தில் முதற்கட்டமாக 75 பள்ளிகளில் 4 ஆயிரத்து 522 மாணவ, மாணவியர்கள் இத்திட்டத்தில் பயன்பெற்றுள்ளனர். இரண்டாம் கட்டமாக 18 ஒன்றியங்கள் 10 பேரூராட்சிகள் 2 நகராட்சிகளில் 1552 பள்ளிகளில் 47 பேரூராட்சி பள்ளி 17 நகராட்சியில் பள்ளிகள் என மொத்தம் 87,842 மாணவ, மாணவிகள் இரண்டாம் கட்ட காலை உணவு திட்டத்தில் பயன்பெறுகின்றனர். நமது முதலமைச்சர் அவர்கள் தாய்மார்களின் சுமையை குறைக்கும் விதமாக இந்த காலை உணவு திட்டத்தை அறிவித்தார்கள். விவசாய வேலைக்கு செல்லும் தாய்மார்கள், 100 நாள் வேலைக்கு செல்லும் தாய்மார்கள் என யாரும் இனி கவலை கொள்ள வேண்டாம். தமிழ்நாட்டிலே முதன் முதலாக நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான் 100 நாள் வேலை திட்டத்தை அறிமுகம் செய்தார்கள், தாய் உள்ளம் கொண்ட நமது முதலமைச்சர் அவர்களால் தான் காலை உணவு திட்டம் என்னும் மாபெரும் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது என்பது மிக்க மகிழ்ச்சியாக உள்ளது. மேலும் வாரத்திற்கு ஐந்து முட்டை வழங்கும் திட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் துவக்கப்பட்டது தாயுள்ளம் கொண்ட நமது முதலமைச்சர் கருணை உள்ளதோடு காலை உணவு திட்டம் கொண்டு வந்துள்ளார். காலை உணவு திட்டம் காலை 7:00 மணி முதல் செயல்படும். இத்திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் பொறுப்பு அலுவலர்கள் அலுவலகம் மற்றும் வீட்டிலிருந்தே இத்திட்டத்தின் செயல்படுகளை தினந்தோறும் இருந்த இடத்திலிருந்து கவனிக்க தனி செயலி உருவாக்கப்பட்டுள்ளது. ஏதாவது நிறை குறை இருப்பின் சம்மந்தபட்ட அலுவலர்களிடம் கூறலாம். இது ஒரு நவீன புரட்சி இத்திட்டத்தில் உணவு சுவையாக இருக்க வேண்டும், கடமையாக இருக்ககூடாது, உணவின் தரம் குறையக்கூடாது, இந்த திட்டத்தை யாரிடம் கொடுக்கலாம் என்று முதலமைச்சர் அவர்கள் யோசித்தபோது மகளிர் சுய உதவி குழுக்களிடம் வழங்கலாம். ஏன்னெனில் மகளிர் சுய உதவிக்குழு தருமபுரியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் முதன்முதலில் இத்திட்டம் துவங்கப்பட்டது. அப்போது துணை முதல்வராக இருந்தபோது 4 1/2 மணி நேரம் கால்கடக்க நின்று மகளிர் சுய உதவி குழுக்களுக்கு நலத் திட்டங்கள், விருதுகள் வழங்கி நமது முதல்வர் அவர்கள் ஊக்கப்படுத்தினார். நமது முதல்வர் அவர்கள் உணவு சுவையாக தரமாக இருக்க வேண்டும் என்று யோசித்து மகளிர் சுய உதவிக் குழுக்களிடம் ஒப்படைத்துள்ளார். ஆகையால் சகோதரிகளே முதலமைச்சரின் எண்ணத்தை வெற்றியடைய செய்ய வேண்டும் என்று நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

நேரலையில் நேற்று முதல்வர் கூறிய செய்திகளில்; பல அர்த்தங்கள் உள்ளடங்கியுள்ளது. அதை நான் உங்களுக்கு சுருக்கமாக கூறுகிறேன். ஊர்களில் தெருக்கூத்து நடக்கும் அதிலும்; குறிப்பாக மகாபாரத தெருக்கூத்துக்களுக்கு பெயர்கள் உண்டு அதில் துரோணாச்சாரியார் கதாபாத்திரம் உண்டு அதில் அவர் பூணூல் அணிந்து வரும் கதாபாத்திரம்; ஏகலைவன் என்ற சாதாரண ஏழை மாணவருக்கு பூணூல், கீபாச்சி அணியாத ஏகலைவனுக்கு உனக்கு வில்வித்தை பயிற்சி அளிக்க வேண்டும் என்றால் உனது கட்டை விரலை வெட்டிக் கொடு என்று குருதட்சணையாக கேட்டார். கட்டை விரல் இல்லை என்று சொன்னால் வில்லில் அம்பை ஏற்ற முடியாது அவன் கற்ற வில்வித்தை எல்லாம் வீணாகிவிடும் எனவே இந்த கதையின் சுருக்கம் முதல்வர் கூறியது இன்று துரோணாச்சாரியார் காலம் எடுபடாது ஏகலைவன் காலம் தான் எடுபடும் என்று கூறினார் அதற்கு அர்த்தம் சாதாரண மக்களுக்கு அனைவருக்கும் கல்வியும் உரிமையும் கிடைக்கும் என்று பொருள் அதாவது திராவிட அரசியலில் பெரியார்,அண்ணா தலைவர் கலைஞர் அவர்களை தவிர வேறு எந்த திட்டமும் எடுபடாது ஏன் என்றால் இது திராவிட மண். தமிழ்நாட்டில் உள்ள இராமநாதபுரத்தில் சாதாரண இஸ்லாமிய குடும்பத்தில் பிறந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளியில் தமிழ் வழி கல்வி பயின்ற திரு.அப்துல் கலாம் அவர்கள் இஸ்ரோ விற்கு பெயர் பெற்று தந்தார், குடியரசு தலைவராகவும் இருந்தார் சந்திராயன்1 அதை தயாரித்தார் தமிழர் மயில்சாமி அண்ணாதுரை அவரும் அரசு பள்ளியில் பயின்றவர் சந்திரன்2 உருவாக்கியவர் வனிதா முத்தையன் அவரும் தமிழ்வழி அரசு பள்ளியில் பயின்றவர் தற்போது சந்திராயன் 3 உருவாக்கி வெற்றியடைய செய்தவர் வீர முத்துவேல் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளியில் தமிழ் வழி கல்வி படித்து தற்போது சாதனை படைத்துள்ளர்கள் எனவே சந்திராயன்3 வெற்றி அடைய செய்த அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த அரசானது பெண்கள் பயன்பெறும் வகையில் புதுப்பெண் திட்டம், தமிழ்வழியில் கல்வி பயின்ற மாணவிகளுக்கு மாந்தோறும் ரூ.1000/- வழங்கி வருகிறது. வேலைக்கு செல்லும் மகளிருக்கு கட்டணமில்லா இலவச பேருந்து பயணம் வழங்கி வருகிறது. அதேபோல் மாநிலம், மாவட்டம், மாநகரட்சிகளில் கல்வி தரத்தை உயர்த்த வேண்டுமென பல கல்லூரிகளை வழங்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தான் இப்படி எண்ணற்ற திட்டங்களை நமது திராவிட மாடல் அரசு சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது என பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாநில தடகள சங்க துணை தலைவர் மரு. எ.வ.வே.கம்பன், மாவட்ட வருவாய் அலுவலர் மரு. மு.பிரியதர்ஷினி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செ.ஆ.ரிஷப், தமிழ்நாடு அரசு உடல் உழைப்பு தொழிலாளர் மற்றும் சமூக பாதுகாப்பு வாரியம் இரா.ஸ்ரீதரன், முதன்மை கல்வி அலுவலர் கணேசமூர்த்தி, திட்ட இயக்குநர் மகளிர் திட்டம் சையித்சூலைமான், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) கோபால்கிருஷ்ணன், ஒன்றிய குழு தலைவர் திருமதி.கலைவாணி கலைமணி, ஒன்றிய குழு துணை தலைவர் திரு.ரமணன், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் திருமதி. ஆர்.மந்தாகினி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பிரிதிவிராஜன், திரு.அருணாச்சலம், வட்டாட்சியர் திருமதி.சரளா, கொளக்குடி ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. உஷா சௌந்தர்ராஜன், கொளக்குடி ஊராட்சி மன்ற துணை தலைவர் சின்னதுரை, ஒன்றிய குழு உறுப்பினர் திருமதி.வசந்தா பழனி, உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !




## நடுக்கடலில்,

# இராமேஸ்வரம் மீனவர்கள் மீது- இலங்கை கடற்படை தாக்குதல்!

### படகில் இருந்த மீன்களையும் பறித்துச் சென்று அட்டூழியம்!

இராமேஸ்வரம், ஆக. 26-

நடுக்கடலில் ராமேசுவரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தினர். படகில் ஏறி அதில் இருந்த மீன்களையும் பறித்துச் சென்றுள்ளனர். ராமநாதபுரம் ராமேசுவரம், நடுக்கடலில் ராமேசுவரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தினர். படகில் ஏறி அதில் இருந்த மீன்களையும் பறித்துச் சென்றுள்ளனர்.

நடுக்கடலில் விரட்டியடிப்பு ராமேசுவரத்தில் இருந்து நேற்று முன்தினம் 482 விசைப்படகுகளில் சுமார் 2500க்கும் அதிகமான மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். நடுக்கடலில் அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

தங்கச்சிமடத்தை சேர்ந்த ஜோசப் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் காளிதாஸ், சக்தி, பாலா, அஜய், கரிகாலன், மாரி, முனீஸ்வரன், ஜார்ஜ் ஆகிய 8 மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றிருந்தனர்.

அப்போது 4 ரோந்து கப்பல்களில் வந்த இலங்கை கடற்படையினர், அப்பகுதியில் மீன் பிடித்து கொண்டிருந்த ராமேசுவரத்தை சேர்ந்த படகுகளை மீன்பிடிக்க விடாமல் விரட்டியடித்ததாக கூறப்படுகிறது.

மீனவர்கள் மீது தாக்குதல் மேற்கண்ட 8 மீனவர்கள் இருந்த படகில் ஏறிய இலங்கை கடற்படையினர், அதில் இருந்த மீன்களை பறித்தனர். படகில் இருந்த மீனவர்களையும் தாக்கினர். மீனவர் முனீஸ்வரனை இலங்கை கடற்படையினர் தள்ளியதில் அவர் படகின் மீதுள்ள கம்பியில் மோதி அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. நேற்று காலை கரை திரும்பிய பின்னர், ராமேசுவரம் அரசு ஆஸ்பத்திரியில் முனீஸ்வரன் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். படகில் இருந்த மற்ற மீனவர்களுக் கும் லேசான காயம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. மீனவர்களை தாக்கிய இலங்கை கடற்படையினருக்கு மீனவ அமைப்புகள் கண்டனம் தெரிவித்தன.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே! : அண்ணல் காந்தி அடிகள் பிறந்த குஜராத் மாநிலத்தில், மது விலக்கு சட்டம் நடைமுறையில் இருக்கும் நிலையில், சட்ட விரோத சாராயம் அதிகரித்திருக்கிறதே ?

**பெரியதம்பி :** **ஆமாம்பா! உண்மைதான்; கடந்த இரண்டு ஆண்டு களில் மட்டும், குஜராத் காவல் துறையினரால் பறிமுதல் செய்யப்பட்ட சட்ட விரோத சாராயத்தின் மதிப்பு, 212 கோடி ரூபாய் என்பது அதிர்ச்சி அளிக்கிறது.**

**குஜராத் காவல் துறை கைப்பற்றி, பாது காப்பாக வைத்திருந்த 28,336 பாட்டில் (916 பெட்டிகள் ) சாராயத்தில், 23 பெட்டி சாராயம் திருடு போய்விட்டதாம். இந்த சாராயத் திருட்டில், ஒரு போலீஸ்காரர் உள்ளிட்ட 15 பேர் ஈடுபட்டது தெரிய வந்துள்ளது.**

**பா.ஜ.க. ஆட்சி நடக்கும் குஜராத் மாநிலத்தில் மதுவிலக்கு நடைமுறை இந்த லட்சணத்தில் இருக்கிறது!**

# வர்க்க உணர்வோடு ஒன்றுபட்டுள்ள தொழிலாளர்கள் - விவசாயிகள்!

### தீக்கதிர் நாளேடு தலையங்கம்!

சென்னை, ஆக. 26-

மோடி அரசுக்கு எதிராக வர்க்க உணர்வோடு தொழிலாளர்களும் விவசாயிகளும் ஒன்றுபட்டுள்ளதற்கு பாராட்டு தெரிவித்து தீக்கதிர் நாளேடு 25.08.2023 அன்று தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு:-

பத்தாண்டு கால மோடி ஆட்சியில் தேசத்தின் ஒட்டு மொத்த கடன் 153 லட்சம் கோடி ரூபாயாக, எண்ணிப் பார்க்க முடியாத அளவிற்கு அதிகரித்திருக்கிறது. இதே காலகட்டத்தில் தேசத்தின் ஏழை, எளிய, நடுத்தர வர்க்க மக்களின் சேமிப்புகளைச் சுரண்டி 14.56 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு தனது கூட்டுக் களவாணிகளுக்கு கொடுத்து, அதை வராக் கடன் என்ற பெயரில் முற்றாகத் தள்ளுபடி செய்திருக்கிறது மோடி அரசு.

நாடு முழுவதும் உள்ள பாட்டாளி மக்கள் மீதான சுரண்டலும், கார்ப்பரேட் பெரும் முதலாளிகளின் மூலதனக் குவிப்பும், அதற்கு ஏற்றவாறு நாட்டின் கொள்கைகளை வடிவமைத்தது மட்டுமின்றி, அதை அமலாக்குவதற்கு உச்சகட்ட மத வெறியையும், இன வெறியையும் ஏவிவிட்ட மோடி அரசின் எதேச்சதிகார ஆட்சியும் இணை ந்து, மொத்த மக்கள் தொகையில் உச்சாணிக் கொம்பில் உள்ள வெறும் 1 சதவீதம் நபர்களிடம் நாட்டின் ஒட்டு மொத்த தேசிய வருமானத்தில் 40.5 சதவீதத்தை குவிக்கச் செய்துள்ளன; அவர்களுக்கு அடுத்துள்ள 10 சதவீதம் நபர்களிடம் 72 சதவீத வருமானத்தை குவிக்கச் செய்துள்ளன; மறுபுறத்தில், உழைத்து உழைத்து ஓடாகத் தேய்ந்து வரும் விவசாயிகள், தொழிலாளர்கள், விவசாய கூலித் தொழிலாளர்கள், நடுத்தர வர்க்க மக்கள் உள்ளிட்ட அடிமட்டத்தில் உள்ள 50 சதவீதம் மக்களின் கைகளில் ஒட்டு மொத்த தேசிய வருமானத்தில் வெறும் 3 சதவீதம் மட்டுமே கிடைக்கச் செய்திருக்கின்றன.

கார்ப்பரேட் மூலதனமும் அதன் லாப வெறிக்




காக சேவகம் செய்யும் மத வெறி மோடி அரசும் கூட்டுச் சேர்ந்து நடத்துகிற இந்த கொடிய தாக்குதலுக்கு எதிராக இந்தியத் தொழிலாளி வர்க்கமும் இந்திய விவசாய வர்க்கமும், தேசத்தின் வரலாற்றில் முதன் முறையாக கட்சி வேறு பாடின்றி, சங்க வேறுபாடின்றி, பிரதேச வேறுபா டின்றி, இனம் மொழி மதம் உள்ளிட்ட வேறுபாடுகள் எதுவுமின்றி தொழிலாளர்கள், விவசாயிகள் என்ற வர்க்க உணர்வோடு ஒன்றுபட்டிருக்கிறார்கள். அதன் மகத்தான சங்கமம் தான் ஆகஸ்ட் 24 வியாழனன்று தில்லியில் கூடியுள்ள அகில இந்திய தொழிலாளர் விவசாயிகள் கூட்டு சிறப்பு மாநாடு.

ஏற்கெனவே இடதுசாரி இயக்கங்களின் தொழிலாளர் அமைப்புகள் மற்றும் விவசாய அமைப்புகள் இணைந்து பல பிரம்மாண்டமான கூட்டுப் போராட்டங்களை நடத்தியுள்ளன. ஆனால் இப்போதுதான், இடதுசாரி இயக் கங்கள் மட்டுமின்றி, அனைத்து மத்திய தொழிற் சங்கங்களும், 400க்கும் மேற்பட்ட விவசாய அமைப்புகளை உள்ளடக்கிய ஓராண்டு காலத்திற்கும் மேலாக மோடி அரசையே கதி கலங்கச் செய்த உலகின் மிகப் பெரும் விவசாயிகள் எழுச்சியை நடத்திக் காட்டிய சம்யுக்த கிசான் மோர்ச்சாவும் கைகோர்த்து, கூட்டாக போர் முழக்கம் செய்துள்ளன.

வெல்க, தொழிலாளர் விவசாயிகள் வர்க்க ஒற்றுமை!

இவ்வாறு தீக்கதிர் நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

கடலூர், ஆக.26-

கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர்- அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடலூர் கிழக்கு மாவட்டதி.மு.க. செயலாளர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக செயலாளர் கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (26.8.2023 ,சனிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் காட்டுமன்னார் கோயில் எம்.ஆர்.கே. பொறியியல் கல்லூரி எதிரில் உள்ள கே.மணியன் மஹாலில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் இளைஞர் அணி மண்டல பொறுப்பாளர், மாநில இளைஞரணி துணைச் செயலாளர், அப்துல் மாலிக் அவர்கள் கலந்து கொள்கிறார்கள். இதில் கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள் ,மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ,கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட,



மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டு துறை மற்றும் சிறப்பு செயலாக்க திட்டத்துறை அமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 29 .8 .2023 செவ்வாய்க்கிழமை கடலூர் மாவட்டத்திற்கு வருகை குறித்து.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், ஆக.26-

தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் மாவட்ட செயலாளர் சி.வெ.கணேசன் அறிக்கை வருமாறு:-

29.08.2023, செவ்வாய் கிழமை காலை 10 மணியளவில் நடைபெறவுள்ள கடலூர் மாவட்ட ஒருகிணைந்த இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் திருச்சி தேசிய நெடுஞ்சாலை கழுதூரில் உள்ள வெங்கடேஷ்வரா கல்லூரி வளாகம் பின்புறத்தில் உள்ள கலைஞர் திடலில் நடைபெறவுள்ளது.

அதனை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்ட



செயற்குழு கூட்டம் இன்று 26.08.2023 சனிக்கிழமை மாலை 3 மணி அளவில் நெய்வேலி தொ.மு.ச அலுவலகத்தில் மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் டாக்டர்.கொ. நந்தகோபால கிருஷ்ணன் தலைமையில் நடைபெறுகிறது.

அதனை தொடர்ந்து மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஒன்றிய , நகர, பேரூர் கூட்டமும் மாலை 3.30 மணியளவில் மாண்புமிகு தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் சி வெ கணேசன் அவர்களின் தலைமையில் நடைபெறுகிறது.

அது சமயம் மாவட்ட கழக நிர்வாகிகள் முன்னால் இன்னால் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய கழக ,நகர கழக, பேரூர் கழக செயலாளர்கள் இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் தொ.மு.ச நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## தி.மு.க. விவசாய அணி

# மாவட்ட அமைப்பாளர் -துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

### தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு

தி.மு.க. விவசாய அணி மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம் 5-9-2023, செவ்வாய் கிழமை மாலை 3.00 மணி அளவில், திருச்சி மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் அறிவாலயத்தில்" கழக விவசாய அணித் தலைவர் என். கே.கே.பெரியசாமி அவர்கள் தலைமையில், முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு. கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் மாண்புமிகு எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் சிறப்புரையாற்றிட, தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

பொருள்: மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தபடி, தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி "விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை" தமிழ்நாடு முழுவதும் எழுச்சியுடன் நடத்துவது - குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்: 25-8-2023

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி

## சைதை மேற்குப் பகுதி 140 (அ)

# வட்டக் கழகப் பொருளாளர் என்.ஜெ.விஜயகுமார் மறைவு!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன்- எம்.கிருஷ்ணமூர்த்தி - வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் அஞ்சலி!

சென்னை, ஆக.26

சைதை மேற்குப் பகுதி 140வது (அ) வட்டப் பொருளாளர் என். ஜெ.விஜயகுமார் அவர்கள் உடல்நிலை சரியில்லாமல் இன்று 25.8.2023 வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் இயற்கை எய்தினார்.

தகவல் அறிந்ததும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் அவரது உடலுக்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்தினார். அவருடன் பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் (பொதுக் குழு உறுப்பினர்) ஆகியோர் அஞ்சலி செலுத்தினார்கள்.

மேலும் ந.தமிழரசு, த.சம்பத், ஆர்.ரவி, வி.மனோகரன், தென்றல் தினேஷ், கே.கௌரி, எஸ்.பஷீர், ஜெயராமன், எஸ்.சரவணன், பிரஸ் விஜி, கே. தூசி, ம.சுகுமார், தா. மோகன்குமார் எம்.சி.,

ஆர்.கிருஷ்ணகுமார், மணிகண்டன், வெ.கிஷோர் குமார், ஜி.ஜே.மோசஸ், கு.புகழ்வேந்தன், இ.பி.ஆனந்தன், சத்யா, நாடிமுத்து, எஸ்.பாரதி, ஏ.மாசி,

டி.ஞானவேலு, பேப்பர் கு.பாஸ்கரன், பி. பாலா, ராபர்ட், கே. துளசி, ரிச்சர்ட், எஸ்.எம். ஆர்.மாணிக்கம், ஜிம். பிரபு, தரணி, கே.கண்ணன், செல்வ விநாயகம் உள்ளிட்ட கழகத்தின் ஏராளமானோர் சென் அஞ்சலி செலுத்தினர்.



முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டத்தை தமிழ்நாடு முழுவதுமுள்ள 31,008 அரசு தொடக்கப் பள்ளிகளிலும் விரிவாக்கம் செய்திட அறிவித்ததைத் தொடர்ந்து, எழும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108, சேத்துப்பட்டு, சுப்பராயன் தெருவிலுள்ள சென்னை மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்து, அப்பள்ளி மாணவமாணவிகளுக்கு காலை உணவினை வழங்கினார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காலை உணவு திட்டத்தை துவக்கி வைத்தது தொடர்ந்து பூவிருந்தவல்லி தொகுதிக்கு உட்பட்ட திருமழிசை பேரூராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மாநில ஆதிதிராவிட நலகுழுச் செயலாளரும் பூவிருந்தவல்லி சட்ட உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி பள்ளி மாணவ மாணவிகளுக்கு உணவை பரிமாறி உணவருந்தினார். இதில் பேரூராட்சி தலைவர் உ.வடிவேலு, பேரூர் செயலாளர் தி.வே.முனுசாமி, பேரூராட்சி துணைத் தலைவர் ஜெ.மகாதேவன் தலைமையாசிரியர் பாலா , பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் எஸ்.ஜெயக்குமார், சுகாதாரத்துறை துணை இயக்குனர் எம்.செந்தில்குமார், மாவட்ட ஊராட்சி செயலர் பிரசன்ன வெங்கடேசன், வட்டார வளர்ச்சி அலுவலர் சீ.காந்திமதி நாதன், பேரூராட்சி செயல் அலுவலர் வெங்கடேசன் திமுக நிர்வாகிகள் வழக்கறிஞர் வி.எம்.நாகதாஸ், செல்வம், வேந்தன், அருள், மு.சுரேந்தர், இளங்கோவன், எழிலரசன், ஜான், பேரூராட்சி கவுன்சிலர்கள் விஜயலட்சுமி வேலு, அனிதா சங்கர், ஜீவா சதீஷ், மஞ்சுளா பாஸ்கர், மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசுப் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தினை தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் முதலமைச்சர் காலை உணவு திட்டம் விரிவாக்கத்தினை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி துவக்கி வைத்து மாணவர்களுடன் உணவருந்தினார். மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சி.பழனி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், ஒன்றியச் செயலாளர்கள் ஜி.இரவிச்சந்திரன், அ. சா. ஏ. பிரபு, பிரேமா அல்போன்ஸ், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் இராஜிவ்காந்தி மற்றும் அரசுத்துறை அதிகாரிகள், பள்ளி கல்வித்துறை அதிகாரிகள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (25.08.2023) நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளையில், முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை மாநிலம் முழுவதும் விரிவாக்கம் செய்து, திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், கொளக்குடி ஊராட்சி, அம்மன் நகரில் செயல்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செ.ஆ.ரிஷப், மாவட்ட வருவாய் அலுவலர் மரு. மு.பிரியதர்ஷினி, மாநில தடகள சங்க துணை தலைவர் மரு.எ.வ.வே.கம்பன், திருவண்ணாமலை ஒன்றிய குழு தலைவர் திருமதி.கலைவாணி கலைமணி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் தொடங்கப்பட்டதிலிருந்து சென்னை மற்றும் பிற மாவட்டங்களில்

# 5 லட்சம் குடியிருப்புகள் - தனி வீடுகள் கட்டப்பட்டுள்ளன!

## சிலி குடியரசு நாட்டில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

சான்ட்டியாகோ (சிலி) ஆக. 26-

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் தொடங்கப்பட்டதிலிருந்து 5 இலட்சம் குடியிருப்புகள், தனி வீடுகள் சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ளன என குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சிலி குடியரசு நாட்டில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் 23.8.2023 முதல் 25.8.2023 வரை தென் அமெரிக்காவில் உள்ள சிலி குடியரசு நாட்டிற்கு மூன்று நாட்கள் அரசு முறைப் பயணமாக சென்று உள்ளார்.

முதல் நாளான 23.8.2023 அன்று சிலி குடியரசு நாட்டின் அமைச்சர்கள் , அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உலக வங்கி பிரதிநிதி களுடன் ஆலோசனைக் கூட்டம் சான்ட்டியாகோ மாநகரில் நடைபெற்றது.



சிலி குடியரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற திட்டமிடல் அமைச்சர் கார்லோஸ் மான்டெஸ் சிஸ்டர்னாஸ் (Mr. Carlos Montes Cisternas, Minister for Housing and Urban planning), பேசுகையில்,

“சிலி குடியரசு, இந்தியாவை போலவே வளர்ந்து வரும் நாடு. எங்கள் நாட்டில் கடந்த 50 ஆண்டு காலமாக பின்பற்றப்படும் வீட்டு வசதி கொள்கைகள், குடிசைகளை மேம்படுத்தும் திட்டங்கள், உள்கட்டமைப்பு மேம்பாடுகள், வறுமைக்குறைப்பு நடவடிக்கை கள் போன்றவற்றை சிறப்பான முறையில் கையாண்டு வருகின்றோம். எங்களின் கடந்த காலம் மற்றும் தற்போதைய வீட்டு வசதி கொள்கைகள், உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள், வங்கிகளின் செயல்பாடுகள், பயனாளிகளின் பங்களிப்புகள், கட்டுமான தொழிலில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து இந்த மூன்று நாள் பயணத்தில் விரிவாக எடுத்துரைக்கப்படும்” எனத் தெரிவித்தார்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில். “முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1970 ஆம் ஆண்டு, ‘ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்” என்ற உயர்ந்த நோக்கில் தொடங்கப்பட்டது. இந்த வாரியம் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1.9.2021 அன்று தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரினை, ‘தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாடு வாரியம்’ என்று பெயர் மாற்றம் செய்து ஆணையிட்டார். குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல, குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு முதலிடம்**

பெரிய மாநிலங்களில் நகர்ப்புற மக்கள்தொகையின் பங்கின் அடிப்படையில் தமிழ்நாடு முதலிடத்தி லும், முழுமையான நகர்ப்புற மக்கள்தொகையில் மூன்றாவது இடத்திலும் உள்ளது. நகர்ப்புற மக்கள்தொகை 2023 இல் 60 சதவீதத்தை எட்டும் மற்றும் 2031 இல் 67 சதவீதமாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.இந்தியாவில் தமிழ்நாடு இரண்டாவது பெரிய பொருளாதாரம் மற்றும் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.8% பங்களிக்கிறது. 2019-20 ஆம் ஆண்டின் இறுதியில் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 265 பில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாடு வாரியம் பல்வேறு வீட்டு மாதிரிகளை செயல்படுத்தி வருகிறது. தற்போது, கட்ட ப்பட்டு வரும் குடியிருப்பு கள் 400 சதுர அடிபரப்பளவில் பல்நோக்கு அறை, படுக்கையறை, சமையலறை, குளியல் அறை மற்றும் கழிப்பறை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. வாழ்விடங்களிலேயே உட்கட்டமைப்புகளுடன் அடுக்குமாடி குடியிருப்பு கள் கட்டுதல், அடிப்படை மற்றும் சமூகக் கட்டமைப்பு வசதிகளுடன் மாற்றிடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள், பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானம், பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டுதல் மற்றும் இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்குத் திறனுக்கேற்ற வாடகை வீட்டுவசதி வளாகங்கள் போன்ற வகைகளில் வீடுகள் கட்டப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு ஒரு குடியிருப்புக்கு ரூ.1.5 இலட்சம் மானியமாகவும் தமிழ்நாடு அரசு ரூ. 7.50 இலட்சத்திலிருந்து ரூ.13 இலட்சம் வரை மானியமாக வழங்குகிறது. மீதமுள்ள தொகை பயனாளிகளால் ஏற்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் ரூ.17 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் 1,45,074 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகிறது. பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.12,500 கோடி மதிப்பீட்டில் 4,09,581 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகிறது. இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்குத் திறனுக்கேற்ற வாடகை வீட்டுவசதி திட்டத்தின் கீழ் முன்னோடி யாக 6 திட்டப்பகுதிகளில் 60,000க்கும் மேற்பட்ட படுக்கைகள், தங்கும் இடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் தொடங்கப்பட்டதிலிருந்து 5 இலட்சம் குடி யிருப்புகள்/ தனி வீடுகள் சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் கட்டப்பட்டு ஏழை எளிய குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. சுமார் 1.30 இலட்சம் குடும்பங்களுக்கு மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைச்சர் தா. மோ.அன்பரசன் பேசினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சிலி குடியரசின் வீட்டு வசதி துறை சார்புச் செயலாளர் கில்லர்மோ ரோலாண்டோ (Guillermo Rolando MINVU's undersecretary), வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் மற்றும் வாரிய இணை மேலாண்மை இயக்குநர் மீ.தங்கவேல், சிலி குடியரசின் உலக வங்கியின் பிரதிநிதிதிரு. விர்ஜீனியா பிராண்டன்(Virginia Brandon, Representative in Chile, World Bank ), உலக வங்கியின் மூத்த ஆலோசகர் திருமதி இசபெல் பிரெயின், (Isabel Brain, Senior Consultant, World Bank), உலக வங்கியின் மூத்த நகர்ப்புற நிபுணர்திருமதி யான் எஃப் ஜாங், (Yan F Zhang, Senior Urban Specialist World Bank ) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தே.மு.தி.க. நிறுவனர்

# விஜயகாந்த் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஆக. 26-

தே.மு.தி.க. நிறுவனர் நடிகர் விஜயகாந்தின் பிறந்தநாளை முன்னிட்டு, அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அந்த சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

**தே.மு.தி.க நிறுவனத் தலைவரும், எனது தோழருமான விஜயகாந்த் அவர்களுக்கு உளங்கனிந்த பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**முழு உடல் நலத்துடன் புத்துணர்ச்சியையும் பெற்றுப் பல்லாண்டு நீங்கள் மகிழ்ச்சியோடும் நிறைவோடும் வாழ வேண்டுமென விழைகிறேன்.**



இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## உசிலம்பட்டியில்

# முதலமைச்சரின் காலை உணவு திட்டம்!

## அ.தி.மு.க. எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

மதுரை, ஆக. 26-

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே சீமானுத்து அரசு துவக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை உசிலம்பட்டி அ.தி.மு.க. எம்.எல்.ஏ. அய்யப்பன்,மாணவமாணவிகளுடன் அமர்ந்து உணவருந்தி திட்டத்தை துவக்கி வைத்தார். உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றிய தி.மு.க. சேர்மன் ரஞ்சனி சுதந்திரம், சீமானுத்து ஊராட்சி மன்ற தலைவர் அஜித்பாண்டி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை உதவி திட்ட அலுவலர் பாரதிதாசன் தலைமையிலான அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை உசிலம்பட்டி அருகே சீமானுத்து அரசு தொடக்கப் பள்ளியில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை உசிலம்பட்டி அதிமுக எம்.எல்.ஏ. அய்யப்பன் தொடங்கி வைத்தார்!

## நீலகிரியில்

# ரூ.44 கோடியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!

நீலகிரி, ஆக. 26-

நீலகிரி மாவட்டத்தில், கோத்தகிரி (சிறப்புநிலை) பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பேரூராட்சித் துறை சார்பில், நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்ட பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

முதலாவதாக, சுற்றுலாத்துறை அமைச்சர் ரூ.25 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட திம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் அதிநவீன வகுப்பறையை திறந்து வைத்து, ரூ.8 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள சமையலறையினை பார்வையிட்டு, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நடுஹட்டி ஊராட்சிக்குட்பட்ட கடக்கோடு கிராமத்தை சார்ந்த 35 விவசாயிகளுக்கு பழ நாற்று தொகுப்புகளை வழங்கினார்.

அதனை தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர், கோத்தகிரி (சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2022-2023 அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.42.69 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் குடிநீர் விநியோக முறையை சீரமைத்தல் பணியினையும், 2022-2023 நபார்டு (RIDF XXVII) திட்டத்தின் கீழ் ரூ.96.20 இலட்சம் மதிப்பில் கார்சிலி முதல் குண்டாடா ஜங்சன் சாலை வரை தார் சாலை மேம்படுத்துதல் பணியினையும்,

2022-2023 பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.20 இலட்சம் மதிப்பில் 2வது வார்டு மேல் அணையட்டியில் கட்டப்பட்டுவரும் சமுதாய கூடத்தினையும்,

2022-2023 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.15 இலட்சம் மதிப்பில் தாந்தநாடு ஒசாட்டியில் கட்டப்பட்டு வரும் பல்நோக்கு கட்டட பணியினையும் என மொத்தம் சுமார் ரூ.44 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைவாகவும், தரமாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிகளில் மாணவ, மாணவிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை முன்னுரிமை அளித்து மேற்கொள்ள அறிவுறுத்தியதை தொடர்ந்து, அனைத்து பள்ளிகளும் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன.



குறிப்பாக, பள்ளிக்கல்வித்துறை சார்பில் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கத்தில் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு சீருடை, காலணி, விலையில்லா மடிக்கணினி, புத்தகம், விலையில்லா மிதிவண்டி போன்ற அனைத்தும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பள்ளிகளில் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டு வருகிறது. அந்த வகையில், இன்றைய தினம் திம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.25 இலட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட அதிநவீன வகுப்பறை திறந்து வைத்து மாணவ, மாணவிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், இப்பள்ளிக்கு தேவையான வசதிகள் அனைத்தும் செய்து தர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புற பகுதிகள் மற்றும் ஊரகப்பகுதிகளில் உள்ள அனைத்து அரசு தொடக்க பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவு திட்டமானது முதலமைச்சர் அவர்களால் நேற்று 25.08.2023 தொடங்கி வைக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் விரிவாக்கம் செய்யப்படவுள்ளதை தொடர்ந்து, நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஜெகதளா பேரூராட்சி பெட்டட்டி சுங்கம் அரசு பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் தொடங்கி வைக்கப்படவுள்ளது.

மேலும், நமது மாவட்டம் விவசாய தொழில் சார்ந்த மாவட்டம் ஆகும். எனவே இயற்கை வேளாண்மையை ஊக்குவிப்பதற்காக அரசு பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. அரசின் இதுபோன்ற திட்டங்களை அனைவரும் பயன்படுத்தி கொண்டு, பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தினை உயர்த்தி கொள்ள வேண்டும்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் பூஷணகுமார், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) இப்ராகிம்ஷா, கோத்தகிரி செயல் அலுவலர் சதாசிவம், கோத்தகிரி வட்டாட்சியர் திருமதி. கோமதி, குன்னூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ஜனார்தனன், கோத்தகிரி பேரூராட்சி தலைவர் திருமதி. ஜெயக்குமாரி, துணை தலைவர் உமாநாத் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# மதுரவாயல் வடக்குப் பகுதி: 92வது வட்டக் கழக கூட்டம்!

## எம்.எம்.ஜெயரத்தினம் - கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, ஆக.26-

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி முகப்பேர் 92 வது வட்ட கழகம் சார்பில் வட்ட கழக அவைத் தலைவர் எம்.எஸ். சந்தானம் தலைமையில் வட்ட கழக செயலாளர் எம்.எம். ஜெயரத்தினம் ஏற்பாட்டில் பகுதி கழக துணை செயலாளர் எம்.ஏ. செந்தில்சுரேஷ், மாவட்ட அமைப்பாளர் கே.குமரேசன், மாவட்ட பிரதிநிதி எம்.சி.எழிலரசு ஆகியோர் முன்னிலையில் அவசர ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக தலைவர் தமிழக முதல்வர் தளபதியார் அவர்களின் ஆணையை ஏற்று முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மதுரவாயல் வடக்கு பகுதி சார்பில் பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் தலைமையில் நடைபெறும் நாட்டுடைத் தலைவனை போற்றிடும் “பாட்டுடை அரங்கம்” நிகழ்ச்சியை துவக்கி வைத்து சிறப்புரையாற்ற சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக பொருளாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி ஆகியோர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சியில் நமது 92 வது வட்ட கழக சார்பில் சிறப்பாக கலந்து கொள்வது ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ.ஜி.வேலன் எம்.சி.அழகிரி, எம் .எஸ். பிரபா, ஏ.சுந்திரி, பகுதி அமைப்பாளர்கள் எம். பி.நவராஜ், எம்.என் ராஜ்கமல், முன்னாள் மாவட்ட துணை அமைப்பாளர் எம்.பி.நவகுமார் மற்றும் பகுதி துணை அமைப்பாளர்கள் டி.கலைநேசன், எம்.பி.சீனிவாசன், எம். சி.எஸ்.தமிழ்அழகன், எஸ். ஜமுனா, எஸ்.ஆனந்தன், வட்ட நிர்வாகிகள், எஸ். பாலாஜி, எம்.ஜி.சுரேஷ், இ.லீலாவதி, டி.புகழேந்தி, பி.நாகராஜ், கே.பிரகாஷ், ஜி.நாகராஜ், எம்.சி.விமல் தாஸ், எம்.ஜி.எம்.புகழேந்தி, சி.காமராஜ், எல். கிருஷ்ணமூர்த்தி, எம்.சபரிதாஸ், என்.மல்லியப்பன், வளர்மதி வில்சன், பி.நவசுந்தர், டி.ராஜி, வி.கலைவாணன், எஸ்.சரவணன், டி.ஆல்பர்ட், டி.நிக்ஸன், கே.மேகநாதன், கே.தயாநிதி, பி.எழிலரசு, என். தினேஷ், எம்.வினோத், பிரதாப், விஜயகுமார், மணிகண்டன், மற்றும் இளைஞர் அணி எம்.எஸ். கார்த்திக், எம்.ஜி.விக்னேஷ், எம் எம் ஜெ. ரோஷன்காந்த், வி. சுதர்சன், ரூபன் உள்ளிட்ட கழக செயல் வீரர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி சிறப்பித்தனர்.



மதுரவாயல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மண்டலம் 11, 147 வது வார்டு, ஆலப்பாக்கத்தில் உள்ள அரசு தொடக்கப்பள்ளியில் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்து மாணவ - மாணவிகளுக்கு உணவு பரிமாறினார். நிகழ்ச்சியில் 11 வது மண்டலக்குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், கவுன்சிலர் ரமணிமாதவன், வட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஜி. மாதவன், மாவட்ட பிரதிநிதிகள் க.பிருந்தாவனம், ஜி. பி.ஆனந்தகுமார் மற்றும் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# தொகுதிகளில் விரிவுபடுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்:



தமிழ்நாடு முழுவதும், நேற்று (25.08.2023, வெள்ளிக்கிழமை) காலை 8 மணியளவில், தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான தளபதி, மு.க.ஸ்டாலின் அவர்கள், மாநிலம் முழுவதும் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை, திருக்குவளையில் துவக்கி வைத்தார். இதனையடுத்து கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி, சி.என்பாளையம் ஊராட்சியில், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு காலை உணவு திட்டத்தை துவக்கி வைத்தார். பின்னர் மாணவர்களுக்கு புத்தக பைகளை வழங்கினார். பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டார். மாவட்ட ஆட்சியர் அ.அருண்தம்புராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் ம.ராஜசேகரன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள், மாணவமாணவிகள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள் மாநிலம் முழுவதும் அரசுப் பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்து நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, நேற்று (25.08.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, மடுமாநகர் சென்னை நடுநிலைப் பள்ளியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மாணவர்களுக்கு காலை உணவினை வழங்கி, மாணவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார். இந்நிகழ்ச்சியில் மத்திய வட்டார துணை ஆணையாளர் எஸ். ஷேக் அப்துல் ரஹ்மான், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை மாநிலம் முழுவதும் விரிவாக்கம் செய்திடும் வகையில் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும் துவக்கி வைக்க உள்ள நிலையில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதி போலீஸ் காலனி நவல்பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெறும் முதலமைச்சரின் காலை உணவு திட்ட விழாவில் கலந்து கொண்டு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் சேர்மன் சத்யா கோவிந்தராஜ், ஒன்றிய கழகச் செயலாளர் கங்காதரன், பொதுக்குழு உறுப்பினர் நவல்பட்டு சண்முகம், பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதிக்குட்பட்ட நடுக்குத்தகை ஊராட்சியில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ பள்ளி மாணவ மாணவிகளுக்கு காலை உணவை பரிமாறி உணவருந்தினார். அருகில் மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் ஜெகதீஷ்சந்திரபோஸ், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் டி.தேசிங்கு, மாவட்ட நிர்வாகிகள் நடுக்குத்தகை ஜெ.ரமேஷ், ம.இராஜி, காயத்திரிஸ்ரீதர், ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், ஒன்றிய குழு துணை தலைவர் பரமேஸ்வரிகந்தன், ஒன்றிய கவுன்சிலர் யமுனா ரமேஷ், ஊராட்சி மன்ற தலைவர் என். லட்சுமி, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் நடுக்குத்தகை கே.சுரேஷ்குமார், ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, பொறியாளர் எம். மோகன், வி.தியாகராஜன், உதயா, நேமிலிச்சேரி சுரேஷ்குமார், மற்றும் சந்திரன், ராதாகிருஷ்ணன், ரமேஷ், வி.மோகன், நவமணி ராஜேஷ், சாந்தகுமாரி, யுவராஜ், சூரிய, பிரதீப், ஜி.பி.பரணிதரண், ஆர்.தீபக், பிரவீன்குமார், உள்பட பலர் உள்ளனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், முதலைமைச்சரின் முன்னோடித்திட்டமான இந்தியாவிலேயே முதன்முறையாக முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் கும்முடிப்பூண்டி தொகுதி, கும்முடிப்பூண்டி ஒன்றியத்தில் பல்வேறு துவக்கப்பள்ளிகளில் மாணவ மாணவிகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகர், பா.முத்துசாமி, எஸ். ராமஜெயம், உமா காத்தவராயன், சிட்டிபாபு, ஏசுரத்தினம், நாகராஜ், பார்தசாரதி, சந்திரமோகன், அருள், மனோஜ், எ.என்.குப்பம் மோகன், ஏசு. மணி, மணிகண்டன் வாசு, உதயன், திருஞானம், விசாக சம்பத் மற்றும் பள்ளி மாணவ மாணவியர்கள் அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



முதலமைச்சர் அவர்கள் மாநிலம் முழுவதும் அரசுப் பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்து நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து நேற்று (25.08.2023) கோடம்பாக்கம் மண்டலம், மாந்தோப்பு சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாணவர்களுக்கு காலை உணவினை வழங்கி, மாணவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார். இந்நிகழ்ச்சியில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு. மகேஷ்குமார், இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ். சமீரன், துணை ஆணையர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் எம். ஸ்ரீதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்றத் தொகுதி, பெட்டட்டி அரசு துவக்கப்பள்ளி யில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர், போக்குவரத்து துறை சிறப்பு செயலாளர் தி.ந.வெங்கடேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. கீர்த்தி பிரியதர்ஷினி உள்ளிட்ட மாவட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி உத்திரமேரூர் பேரூராட்சி ஆணை பள்ளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. காலை உணவு திட்டத்தை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட திட்ட இயக்குனர் செல்வகுமார் ஒன்றிய குழு பெருந்தலைவர் திருமதி ஹேமலதா ஞானசேகரன், ஒன்றிய குழு உறுப்பினர் கெ.ஞானசேகரன், பேரூராட்சி மன்ற தலைவர் பொன் சசிகுமார், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் இரா.நாகன், என்.எஸ்.பாரிவள்ளல் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டம்திருத்தணி தொகுதிக்கு உட்பட்டதிருத்தணி ஒன்றியம் சீனிவாசபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை உணவுகளை மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ முன்னிலையில் முன்னாள் ஒன்றிய அமைச்சரும் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன் பள்ளி மாணவ மாணவிகளுக்கு காலை உணவை பரிமாறினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். ஆல்பிஜான் வர்கீஸ், மாவட்ட ஊராட்சி தலைவர் கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, ஒன்றிய கழகச் செயலாளர்ஆர்த்தி ரவி, மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் ராஜவேல் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பள்ளி ஆசிரியர்கள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சரின் காலை உணவு விரிவாக்க திட்ட துவக்க விழா திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் பேரம்பாக்கம் மற்றும் சத்தரை ஊராட்சிகளின் தொடக்க பள்ளிகளில் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன், பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கி திட்டத்தை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட சுகாதார அலுவலர் மரு. ஜவகர்லால், மாவட்ட அவை தலைவர் க. திராவிடபக்தன், மாநில விவசாய அணி துணை செயலாளர் ஆர். டி. இ. ஆதிசேஷன், ஒன்றிய செயலாளர் கொண்டஞ்சேரி மோ.ரமேஷ், ஒன்றிய குழு தலைவர் சுஜாதாசுதாகர், துணைத் தலைவர் சரஸ்வதி ரமேஷ், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சரஸ்வதி சந்திரசேகர், ஒன்றிய கழக நிர்வாகிகள் பா. மாணிக்கம், எம்.ரவி, எம்.கீதாமுனுசாமி, ஏ. தேவஆரோக்கியம், பி. காமராஜ்,அ.ஏகாம்பரம், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர்கள் ஏ. எஸ். மணி, களாம்பாக்கம் அண்ணாதுரை, சீனிவாசன், நீலாவதி ராஜேந்திரன், ஊராட்சி மன்ற தலைவர்கள் ஜெயந்தி சுயம்பிரகாஷ், வசந்திவெங்கடேசன், ஜானகி அகஸ்டின், கண்ணதாசன், மணிகண்டன், சம்பத், சதாசிவம், கண்ணூர் ராஜா, டி. எஸ். தட்சணாமூர்த்தி, க.சரத், உதயா, பிரபாகரன், ஆசிரியர் துரை, துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் தமிழ்நாடு முழுவதும்

# “தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை” நடத்திட “மண்டலப் பொறுப்பாளர்கள்”

## தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., அறிவிப்பு

கடந்த 13.8.2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் “ஐந்து மண்டலத்திலும் தலா ஒரு இடத்தில் அனைவரும் வேறுபாடின்றி நாடும் அறிவுப்பசி மற்றும் வயிற்றிப்பசி ஆகிய இரண்டையும் ஆற்றும் வகையில் கல்வியாளர்களை கொண்டு தலைவர் கலைஞர் அவர்களின் சமய சார்பற்ற சமூகநீதி செயல்பாடுகள் எனும் தலைப்பில் கருத்தரங்கமும் அதனை தொடர்ந்து சமபந்தி விருந்தும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், அனைத்து கழக மாவட்டங்களிலும் “முத்தமிழறிஞரின் சமூகநீதி மற்றும் மதர்சார்பின்மை கோட்பாடுகள்” எனும் தலைப்பில் நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும்” என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றும் வகையில்,

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கழக மாவட்டங்கள் அடங்கிய மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்திற்கும் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் “மண்டலப் பொறுப்பாளர்களாக” நியமிக்கப்பட்டுள்ளனர்.

இம்மண்டலப் பொறுப்பாளர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர்களை நேரில் சந்தித்து, அவர்களின் ஒத்துழைப்போடு, மண்டல வாரியாக கல்வியாளர்கள் கலந்து கொள்ளும் கருத்தரங்கங்களையும், அத்துடன் ஒவ்வொரு மாவட்டங்களிலும் “முத்தமிழறிஞரின் சமூகநீதி மற்றும் மதர்சார்பின்மை கோட்பாடுகள்” எனும் தலைப்பில் நிகழ்ச்சிகளை தி.மு.க. சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு நிர்வாகிகளுடன் இணைந்து நடத்திட வேண்டுமெனவும், இவ்விரு நிகழ்ச்சிகளிலும் ஆதிதிராவிடர் சமுதாய மக்கள் மற்றும் சிறுபான்மையின மக்களான இஸ்லாமியர் மற்றும் கிறிஸ்தவ பெருமக்களையும் பெருந்திரளாக கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### “மண்டலப் பொறுப்பாளர்கள் விவரம்”

| | | |
|---|---|---|
| சென்னை வடக்கு | தா. இளைய அருணா | ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., (செயலாளர்) சி. தசரதன் (துணைச் செயலாளர்) |
| சென்னை வடகிழக்கு | எஸ். சுதர்சனம், எம்.எல்.ஏ. | |
| சென்னை கிழக்கு | பி.கே. சேகர்பாபு | |
| சென்னை மேற்கு | நே.சிற்றரசு | |
| சென்னை தென்மேற்கு | மயிலை த. வேலு, எம்.எல்.ஏ., | |
| சென்னை தெற்கு | மா. சுப்பிரமணியன் | |
| திருவள்ளூர் கிழக்கு | டி.ஜெ.கோவிந்தராஜன், எம்.எல்.ஏ., | |
| திருவள்ளூர் மத்திய | ஆவடி சா.மு. நாசர் | |
| திருவள்ளூர் மேற்கு | எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ., | |
| காஞ்சிபுரம் வடக்கு | தா.மோ. அன்பரசன் | |
| காஞ்சிபுரம் தெற்கு | க.சுந்தர், எம்.எல்.ஏ. | |
| இராணிப்பேட்டை | ஆர்.காந்தி | |
| வேலூர் | ஏ.பி. நந்தகுமார், எம்.எல்.ஏ. | |
| திருவண்ணாமலை வடக்கு | எம்.எஸ். தரணிவேந்தன் | மருதூர் இராமலிங்கம் செ. புஷ்பராஜ் (இணைச் செயலாளர்கள்) |
| திருவண்ணாமலை தெற்கு | எ.வ. வேலு | |
| விழுப்புரம் வடக்கு | கே. மஸ்தான் | |
| விழுப்புரம் தெற்கு | நா.புகழேந்தி, எம்.எல்.ஏ. | |
| கள்ளக்குறிச்சி வடக்கு | தா. உதயசூரியன், எம்.எல்.ஏ., | |
| கள்ளக்குறிச்சி தெற்கு | வசந்தம் கார்த்திகேயன், எம்.எல்.ஏ., | |
| கடலூர் கிழக்கு | எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் | |
| கடலூர் மேற்கு | வெ. கணேசன் | |
| தஞ்சை வடக்கு | சு. கல்யாணசுந்தரம், எம்.பி., | |
| தஞ்சை மத்திய | துரை.சந்திரசேகரன், எம்.எல்.ஏ. | |
| தஞ்சை தெற்கு | கா. அண்ணாதுரை எம்.எல்.ஏ. | |
| மயிலாடுதுறை | நிவேதா எம்.முருகன், எம்.எல்.ஏ., | |
| நாகை | என்.கௌதமன் | |
| திருவாரூர் | பூண்டி கே.கலைவாணன், எம்.எல்.ஏ., | |
| திருச்சி வடக்கு | ந. தியாகராஜன் எம்.எல்.ஏ. | பி. துரைசாமி, (துணைச் செயலாளர்) |
| திருச்சி தெற்கு | அன்பில் மகேஷ் பொய்யாமொழி | |
| திருச்சி மத்திய | க.வைரமணி | |
| பெரம்பலூர் | குன்னம் சி.ராஜேந்திரன் | |
| அரியலூர் | எஸ்.எஸ். சிவசங்கர் | |
| புதுக்கோட்டை வடக்கு | கே.கே.செல்லப்பாண்டியன் | |
| புதுக்கோட்டை தெற்கு | எஸ். ரகுபதி | |
| சேலம் கிழக்கு | எஸ்.ஆர். சிவலிங்கம் | மா.மதிவேந்தன் (துணைத் தலைவர்) மு. பரமானந்தம் (துணைச் செயலாளர்) |
| சேலம் மேற்கு | டி.எம். செல்வகணபதி | |
| சேலம் மத்திய | ஆ. இராஜேந்திரன், எம்.எல்.ஏ. | |
| நாமக்கல் கிழக்கு | கே.ஆர்.என். இராஜேஸ்குமார், எம்.பி., | |
| நாமக்கல் மேற்கு | எஸ்.எம். மதுரா செந்தில் | |
| திருப்பத்தூர் | க. தேவராஜி, எம்.எல்.ஏ., | சா. இராசேந்திரன் (துணைச் செயலாளர்) |
| தருமபுரி கிழக்கு | தடங்கம் சுப்பிரமணியன் | |
| தருமபுரி மேற்கு | பெ. பழனியப்பன் | |
| கிருஷ்ணகிரி கிழக்கு | தே. மதியழகன், எம்.எல்.ஏ. | |
| கிருஷ்ணகிரி மேற்கு | ஒய். பிரகாஷ், எம்.எல்.ஏ. | |
| கோவை வடக்கு | தொ.பெ. ரவி | திப்பம்பட்டி ஆறுச்சாமி (இணைச் செயலாளர்) |
| கோவை தெற்கு | தளபதி முருகேசன் | |
| கோவை மாநகர் | நா.கார்த்திக் | |
| திருப்பூர் வடக்கு | க. செல்வராஜ், எம்.எல்.ஏ., | |
| திருப்பூர் தெற்கு | இல. பத்மநாபன் | |
| ஈரோடு வடக்கு | என். நல்லசிவம் | மு.பொன்தோஸ் (துணைச் செயலாளர்) |
| ஈரோடு தெற்கு | சு. முத்துசாமி | |
| நீலகிரி | பா. மு. முபாரக் | |
| கரூர் | வி.செந்தில் பாலாஜி | |
| மதுரை வடக்கு | பி. மூர்த்தி | வி.பி. இராசன் (இணைச் செயலாளர்) மாரியப்பன் கென்னடி (துணைச் செயலாளர்) |
| மதுரை தெற்கு | மு. மணிமாறன் | |
| மதுரை மாநகர் | கோ. தளபதி, எம்.எல்.ஏ. | |
| திண்டுக்கல் கிழக்கு | இ.பெ. செந்தில்குமார், எம்.எல்.ஏ. | |
| திண்டுக்கல் மேற்கு | அர. சக்கரபாணி, | |
| தேனி வடக்கு | தங்க.தமிழ்ச்செல்வன் | |
| தேனி தெற்கு | கம்பம் நா.இராமகிருஷ்ணன்,எம்.எல்.ஏ. | |
| இராமநாதபுரம் | காதர்பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ., | |
| சிவகங்கை | கே.ஆர். பெரியகருப்பன் | |
| விருதுநகர் வடக்கு | தங்கம் தென்னரசு | |
| விருதுநகர் தெற்கு | கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் | |
| திருநெல்வேலி கிழக்கு | இரா.ஆவுடையப்பன் | |
| திருநெல்வேலி மத்திய | டி.பி.எம்.மைதீன்கான் | |
| தென்காசி வடக்கு | ஈ. ராஜா, எம்.எல்.ஏ., | |
| தென்காசி தெற்கு | ஜெயபாலன் | |
| தூத்துக்குடி வடக்கு | கீதா ஜீவன் | |
| தூத்துக்குடி தெற்கு | அனிதா ராதாகிருஷ்ணன் | |
| கன்னியாகுமரி கிழக்கு | ஆர். மகேஷ் | |
| கன்னியாகுமரி மேற்கு | மனோ தங்கராஜ் | |

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18.
நாள் : 25-08-2023

**ஆ.கிருஷ்ணசாமி** எம்.எல்.ஏ.
செயலாளர்
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு



தென் அமெரிக்காவில் உள்ள சிலி குடியரசு நாட்டில் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உடைய குடும்பங்கள், இடம் பெயர்ந்த தொழிலாளர்கள் போன்ற பல்வேறு பிரிவினரின் குடியிருப்பு தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பார்வையிட்டார். உடன் மார்ச்சிக்யூ முதலீட்டின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் குஜஹ கட்டிடக் கலைஞர்களின் முதன்மை கட்டிடக் கலைஞர் பிரான்சிஸ்கோ இஸ்கியர்டோ, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் மற்றும் வாரிய இணை மேலாண்மை இயக்குநர் மீ.தங்கவேல், உலக வங்கியின் மூத்த ஆலோசகர் இசபெல் பிரெயின், உலக வங்கியின் மூத்த நகர்ப்புற நிபுணர் யான் எஃப் ஜாங் உட்பட பலர் உள்ளனர்.

### மயிலாடுதுறை மாவட்டத்தில் விளையாட்டுப் போட்டியின் போது - மாரடைப்பால்

# உயிரிழந்த மாணவரின் குடும்பத்திற்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 26-

மயிலாடுதுறை மாவட்டத்தில் விளையாட்டுப் போட்டியின் போது மாரடைப்பால் உயிரிழந்த மாணவரின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி, நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வரின் அறிவிப்பு வருமாறு:-

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், தனியார் மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பு பயின்று வந்த மாணவன் ரிஷிபாலன் நேற்று (24.08.2023) மயிலாடுதுறை மாவட்டத்தில், மண்டல அளவில் நடைபெற்ற பள்ளிகளுக்கு இடையிலான 400 மீட்டர் ஓட்டப்பந்தயப் போட்டியில் கலந்து கொண்டு, காட்டுச்சேரி அரசு விளையாட்டு மைதான ஓடுதளத்தில் ஓடிக்கொண்டிருந்த பொழுது மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார் என்ற வேதனையான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமடைந்தேன்.

இந்த துயரமான நேரத்தில், மாணவர் ரிஷிபாலனின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### காலைச் சிற்றுண்டித் திட்டம் விரிவாக்கம் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லை:

# முதன்மையானவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

## திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. புகழுரை!

*திருவள்ளூர்,ஆக.26-*

*திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

தமிழ்நாடு முழுவதும் உள்ள 31.000 பள்ளிகளில் 17 லட்சம் மாணவ மாணவிகள் பயன்பெறும் விதமாக தமிழ்நாடு முழுவதும் விரிவு படுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் தனது திருக்கரங்களால் அற்புதமான காலை உணவு திட்டத்தை தொடங்கிவைத்துள்ளார்

, அதாவது “இதுக்கு முன்னாடி நைட்டு மிச்சமான சாப்பாடு தான் வீட்ல இருக்கும். ஆனா இப்போ?” என பள்ளிக் குழந்தை தனது மழலை வார்த்தையால் பேசுவதை கேட்கும் போது இருக்கும் மகிழ்ச்சியை விவரிக்க வார்த்தை இல்லை. அதுதான் முதலமைச்சரின் சமூக சிந்தனை. அவரது சீரிய செயல்பாடு.

பசிப்பிணி என்பதையே மாணவச் செல்வங்கள் அறியக்கூடாது! அறிவுப்பசி ஒன்றே அவர்களுக்கு வேண்டும்! என்ற உயர்ந்த சிந்தனையோடு செயல்படுவர் முதலமைச்சர். அதன் தொடர்ச்சியாக, இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுப்படுத்தியிருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

இந்த காலை உணவுத் திட்டத்தைப் பற்றி சொல்வதற்கு ஏராளமான அம்சங்கள் உண்டு. ஏனென்றால் இது ஏற்படுத்தியிருக்கிற தாக்கம் அந்தளவிற்கு பெரியது.

அரசுப் பள்ளியில் படிக்கும் குழந்தைகள் பெரும்பாலோனோர் காலை உணவை சரியாக எடுத்துக்கொள்வதில்லை என்ற தகவல் காதில் விழுந்தவுடனேயே முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை செயல்படுத்தியவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். அதுமட்டுமல்ல திருக்குவளையில் பிறந்து தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையை அனைத்து வகையிலும் மேம்படுத்திய முத்தமிழறிஞர் கலைஞர் படித்த தொடக்க பள்ளியில் இந்த சிறப்பான திட்டத்தை விரிவாக்கம் செய்திருக்கிறார். குழந்தைகளின் பசியை போக்கும் உன்னத திட்டம், “முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம்”. அது மக்களுக்காக தன் வாழ்நாளையே அர்ப்பணித்த கலைஞரின் சீரிய சிந்தனையின் தொடர்ச்சி என்பதை நினைவூட்டும் வகையிலேயே கலைஞர் படித்த தொடக்க பள்ளியில் விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

நேற்று தமிழ்நாட்டில் அதிகம் பேசப்படும் ஒன்றாக இத்திட்டம் மாறியிருக்கிறது. முதலமைச்சரின் இந்த அறிவுப் புரட்சியை ஊடகங்கள் தொடர்ச்சியாக பேசி வருகின்றன. சமூக ஊடகங்களில் முதலமைச்சருக்கு நன்றி தெரிவிக்கப்படுவது ட்ரெண்ட் ஆகி வருகின்றன. அதுமட்டுமா, எதிர்க்கட்சிகளும் இந்தத் திட்டத்தை பாராட்டி வருகின்றன.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை இந்தியாவே ஆர்வத்துடன் பார்க்கிறது. இப்படிப்பட்ட மகத்தான திட்டம் உதித்தது முதலமைச்சரின் சிந்தனையில். ஆனால், அதற்குரிய பாராட்டுகளை அவர் மட்டுமே தனியாக பெற்றுக்கொள்ள நினைக்கவில்லை. அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் தங்களுடைய பகுதியில் இருக்கும் பள்ளியில் தொடங்க வேண்டும் என்றார். திமுக பிரதிநிதிகளுக்கு மட்டும் சொல்லவில்லை. காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என கூட்டணி கட்சிகளையும், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் அ.இ.அ.தி.மு.க., பாஜக, பாட்டாளி மக்கள் கட்சியையும் கேட்டுக் கொண்டார். அதன் தொடர்ச்சியாகவே முதலமைச்சரின் அழைப்பை ஏற்று எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஒருவரும் காலை உணவுத்திட்டத்தை தனது தொகுதியில் தொடங்கி வைத்துள்ளார். ஏனென்றால் இது அனைவருக்குமான ஆட்சி. அனைவரையும் உள்ளடக்கிய அரசு.

முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தை செயல்படுத்தி மக்களின் தலைவர் என்பதை மீண்டும் நினைவுபடுத்தியுள்ளார். திருக்குவளையில் முத்தமிழறிஞர் கலைஞர் படித்த பள்ளியில் விரிவாக்கம் செய்து, தமிழனத் தலைவருக்கு நன்றிக் கடைமையாற்றியுள்ளார். இந்தத் திட்டத்தில் அனைத்து மக்கள் பிரதிநிதிகளையும் பங்கெடுக்க வைத்து தலைவர் என்பதை நிருபித்துள்ளார். அது மட்டுமல்ல கூட்டணி கட்சியினரையும், எதிர்க்கட்சியினரையும் இந்த மகத்தான திட்டத்தை முன்னெடுக்க வைத்து அனைவருக்கும் பாராட்டுகளையும், பெருமைகளையும் பகிர்ந்துள்ளார். இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் இத்திட்டத்தை செயல்படுத்தும் எண்ணத்தை ஏற்படுத்தியதன் மூலம் நாட்டிற்கே முதன்மையானவராகியிருக்கிறார் நம்முடைய தலைவரும் முதலமைச்சருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

திருக்குவளையில் நேற்று காலை உதித்துள்ள சூரியனின் சுடர் ஒளி தமிழ்நாடு முழுவதும் வீசியுள்ளது. நாளை இந்தியா முழுமைக்கும் வெளிச்சம் பாய்ச்சும்!. என முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் தமது அறிக்கை வாயிலாக தெரிவித்தனர் .



பல்லாவரம் தொகுதியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை இ.கருணாநிதி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் மண்டலக் குழுத் தலைவர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை, வே.கருணாநிதி மற்றும் அதிகாரிகள், மாமன்ற உறுப்பினர்கள், ஆசிரியப் பெருமக்கள் உள்ளனர்.





காலை உணவுத் திட்டம் தொடங்க வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, வழியெங்கும் திரண்டு நின்று வாஞ்சையோடு வரவேற்ற பொதுமக்கள், மாணவ – மாணவியர்!



காலை உணவு வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்து முதல்வர் அவர்கள், மாணவச் செல்வமொன்றின் கன்னந்தடவி வாழ்த்திய காட்சி!



‘இன்று என் வாழ்விலோர் பொன்னாள்’ என, மாணவ மாணவியரை கரம்பிடித்து அழைத்துக் கொண்டு, ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை’ தொடங்கி வைக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகை தந்த உணர்ச்சிமிகு காட்சி!

## தமிழ்நாட்டில் - அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளில் பயிலும்

# 17 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் காலை உணவுத் திட்ட விரிவாக்கம்!

## திருக்குவளையில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

நாகை, ஆக.26-

**இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி 31,008 பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 17 இலட்சம் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.8.2023) இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி, 31,008 பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 17 இலட்சம் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் தொடங்கி வைக்கும் விதமாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊரான நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

“நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் பள்ளிக்குச் செல்லக்கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுவதால், பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது இல்லை என்ற தகவல் அரசுக்குக் கிடைத்திருக்கிறது. பள்ளிகள் தூரமாக இருப்பது மட்டுமல்ல, சிலருடைய குடும்பச் சூழலும் இதற்கு காரணமாக இருக்கிறது. இதனை மனதில் கொண்டு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை நேரத்தில் சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை நாம் தீட்டி இருக்கிறோம். முதற்கட்டமாக சில மாநகராட்சி, நகராட்சிகளிலும், தொலைதூரக் கிராமங்களிலும் இத்திட்டம் தொடங்கப்படும். ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக்கூடிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும்” என்று ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு பெற்றதையொட்டி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 7.5.2022 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விதி 110ன் கீழ் அறிவிப்பு வெளியிட்டார்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் மாணவர்களுக்கு காலை உணவினை பரிமாறி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.9.2022 அன்று தொடங்கி வைத்து, மாணவர்களுடன் உணவருந்தினார்.

முதற்கட்டமாக, தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில், இத்திட்டத்தினை செயல்படுத்திட ரூ.33.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 417 மாநகராட்சி பள்ளிகளில் 43,681 மாணவர்கள், 163 நகராட்சி பள்ளிகளில் 17,427 மாணவர்கள், 728 வட்டாரம் மற்றும் கிராம ஊராட்சி பள்ளிகளில் 42,826 மாணவர்கள், 237 தொலைதூர, மலைபிரதேச பள்ளிகளில் 10,161 மாணவர்கள், என மொத்தம் 1,545 பள்ளிகளில் தொடங்கப்பட்டு, 1,14,095 மாணவர்கள் முதலமைச்ச ரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெற்று வருகின்றனர். மேலும், 28.02.2023 முதல் இத்திட்டம் மேலும் நீட்டிக்கப்பட்டு முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட செயலியின் படி 1,005 நகர்ப்புற மையங்களில் 1,12,883 குழந்தை களும், 963 கிராமப்புற மையங்களில் 41,225 குழந்தைகளும் பயனடைந்து வருகின்றனர்.

### உணவுத் திட்டத்தின் குறிக்கோள்கள்!

மாணவ, மாணவியர்கள் பசியின்றி பள்ளிக்கு வருதல், ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்படாமலிருத்தல், ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல், பள்ளிகளில் மாணவர்களின் வருகையை அதிகரித்தல், வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் பணிச் சுமையை குறைத்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

### திட்டம் செயல்படுத்தும் முறை

பெருநகர சென்னை மாநகராட்சி, மற்ற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஒருங்கிணைந்த சமையற்கூடங்கள் மூலம் பள்ளி சத்துணவு மையங்களை இணைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கிராம ஊராட்சி மற்றும் மலைப் பகுதி மையங்களில் இத்திட்டம் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி / சுய உதவிக் குழு மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், பெரும்பாலான பொதுமக்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் மிகவும் பாராட்டப்பட்டு, மகிழ்ச்சியோடு வரவேற்கப்பட்டு வருகிறது. இந்த முயற்சியின் பயனாக, பள்ளிகளில் மாணவர்களின் வருகை எண்ணிக்கை முன்பு இருந்ததைவிட அதிகரித்துள்ளது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு, இந்தத் திட்டத்தினை 2023-2024 ஆம் ஆண்டு, படிப்படியாக மாநிலத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கும் விரிவாக்கம் செய்திட அரசு முடிவு செய்துள்ளது என்று முதலமைச்சர் அவர்கள் 13.1.2023 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார்.



அதன் தொடர்ச்சியாக, 2023-24ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், ‘பள்ளிக்கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும், எல்லாக் குழந்தைகளும் பசியின்றி கல்வியறிவு பெற்றிடவும் எந்தத் தியாகத்தையும் செய்திடுவோம்’ என்ற முதலமைச்சர் அவர்களின் உன்னத நோக்கத்தை செயல்படுத்திட, வரும் கல்வி ஆண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள அரசுத் தொடக்கப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை பயிலும் மாணவர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இந்த நல்ல நோக்கத்திற்கு வரும் நிதியாண்டில் 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், ரூ.404.41 கோடி செலவில் 31,008 பள்ளிகளில் பயிலும் 17 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்ச ரின் காலை உணவுத்திட்டத்தை விரிவுப்படுத்தி தொடங்கி வைக்கும் விதமாக திருக்குவளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று உணவு பரிமாறி, அவர்களுடன் கலந்துரையாடி உணவருந்தினார்.

### முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் வழங்கப்படும் உணவு!

திங்கள் கிழமை காய்கறி சாம்பாருடன் கூடிய ரவா உப்புமா / சேமியா உப்புமா / அரிசி உப்புமா / கோதுமை ரவை உப்புமா; செவ்வாய் கிழமை – காய்கறி சாம்பாருடன் கூடிய ரவா காய்கறி கிச்சடி / சேமியா காய்கறி கிச்சடி / சோள காய்கறி கிச்சடி / கோதுமை ரவை கிச்சடி; புதன்கிழமை – காய்கறி சாம்பாருடன் கூடிய ரவா பொங்கல் / வெண் பொங்கல்; வியாழக்கிழமை – காய்கறி சாம்பாருடன் கூடிய சேமியா உப்புமா / அரிசி உப்புமா / ரவா உப்புமா / கோதுமை ரவை உப்புமா; வெள்ளிக்கிழமை – காய்கறி சாம்பாருடன் கூடிய சேமியா காய்கறி கிச்சடி / சோள காய்கறி கிச்சடி / ரவா காய்கறி கிச்சடி / கோதுமை ரவை கிச்சடி ஆகியவை மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

ஒரு மாணவ, மாணவிக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் காலை உணவுக்கான மூலப் பொருட்களின் அளவு 50 கிராம் அரிசி /ரவை/கோதுமை ரவை/சேமியா. மேலும், அந்தந்த இடங்களில் விளையும் சிறுதானியங்கள் / சாம்பாருக்கான பருப்பு 15 கிராம் மற்றும் உள்ளூரில் கிடைக்கக்கூடிய காய்கறிகள், ஒரு வாரத்தில் குறைந்தது 2 நாட்களாவது உள்ளூரில் கிடைக்கக்கூடிய சிறுதானியங் களால் தயாரிக்கப்பட்ட காலை உணவு வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் எம். செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் வி.பி. நாகை மாலி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத் தலைவர் என். கௌதமன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் பி. செந்தில்குமார், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா. பொன்னையா, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி எஸ். திவ்யதர்ஷினி, சமூக நலத்துறை கூடுதல் இயக்குநர் திருமதி எஸ்.பி. கார்த்திகா, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# உடன்பிறப்பே... 20

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்தவகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த 'சமதர்மம்' சுப்பையா அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

## 'சமதர்மம்' சுப்பையா: காரைக்குடியின் கொள்கைத் தங்கம்



ஓவியம் : ரவி பேலட்

**1930,** அது இன்றைய தமிழ்நாடு அல்ல. சாதியம் கொடூரமாக வேரூன்றி இருந்த சென்னை மாகாணம். சமூக நீதிச் சமர் புரிந்து கொண்டிருந்தார் அய்யா தந்தை பெரியார். அவர் கொள்கையில் ஈடுபாடு கொண்ட இளைஞர்கள் பலர் தலைவர் களாக உருவெடுக்கத் தொடங்கினர். அந்த 30-களில் வைதீகக் கோட்டையாக விளங்கிய காரைக்குடியில், **'ஆதி திராவிடர் மாநாடு'** ஒன்றை நடத்த முனைந்தார் ஒரு பெரியார் தொண்டர்.

ஊர் பெரியவர்களும், சாதிக்காரர்களும் ஒன்றுசேர்ந்து "மாநாட்டை நடத்தினால் மாநாட்டுக் கொட்டகையைத் தீ வைத்து கொளுத்துவோம்" என்றார்கள். அதற்கு எதிராக களப்பணி, சட்டப்போராட்டம் நடத்தி, பல எதிர்ப்புகளையும் மீறி, திராவிட இயக்கக் கருத்து களைக் காரைக்குடியில் ஒலிக்கச் செய்தார் அந்த இளைஞர். அவர்தான், கலைஞரின் பெருமைமிகு உடன்பிறப்பு காரைக்குடி இராம.சுப்பையா அவர்கள்.

### காரைக்குடியின் கழகக் குரல்

அன்றைய புதுக்கோட்டை சமஸ்தானத்திலிருந்த அரிமளம் கிராமத்தைச் சேர்ந்த பழநியப்பன் - சிட்டாள் தம்பதியருக்கு 1908-ஆம் ஆண்டு இரண்டாவது மகனாகப் பிறந்தார் சுப்பையா. 10 வயதுவரை அரிமளம் திண்ணைப் பள்ளியில் பயின்றவர், பிறகு தொழில் பழக பர்மா பயணமானார். அங்கு, வரவு-செலவு கணக்குப் பார்க்கும் வேலை அவர் மனதுக்குப் பிடிக்காததால் மீண்டும் தாயகம் திரும்பினார்.

அப்போது காரைக்குடியில் 'தன வைசிய இளைஞர் சங்கம்' என இயக்கம் வைத்து நடத்திய சொ.முருகப்பா அவர்களுடனான நட்பு, சுப்பையா அவர்களை முழுநேர அரசியல் களத்துக்கு அழைத்து வந்தது. காரைக்குடியில் சொ.முருகப்பா ஏற்பாடு செய்த கூட்டத்தில் முதல்முறையாக பெரியாரின் பேச்சைக் கேட்ட இராம.சுப்பையா அன்று முதல் சுயமரியாதை இயக்கத்தின் உறுப்பினராகச் செயல்பட ஆரம்பித்தார். முருகப்பாவுடன் இணைந்து செட்டிநாட்டில் உள்ள பல ஊர்களுக்குப் பயணித்து, பகுத்தறிவுக் கருத்துகளை விதைத்தார். தொடர்ந்து, 1932-ல் இராமநாதபுரம் மாவட்ட சுயமரியாதை மாநாட்டைக் காரைக்குடியில் வெற்றிகரமாக நடத்தி முடித்தார்.

### பெயரிலும் வாழ்விலும் 'சமதர்மம்'

தமிழ்நாட்டின் முன்னணித் தலைவர்கள் பலருக்கும் அறிமுகமாகி இருந்த சுப்பையாவுக்கு, பொதுவுடைமைத் தலைவர் சிங்காரவேலர் அவர்களுடனான நட்பு மற்றொரு அடையாளத்தைக் கொடுத்தது. காரைக்குடியில் சுப்பையா வீட்டுக்கு 'சமதர்ம விலாஸ்' எனப் பெயர் வைக்கச் சொல்லி, அந்தப் பெயர் பொறித்த சலவைக் கல்லையும் அன்பளிப்பாக வழங்கினார் சிங்காரவேலர்.

அதன் காரணமாகவே பின்னாட்களில் 'சமதர்மம்' என்பது அவரின் பெயருக்கு முன்னால் சேர்ந்து, 'சமதர்மம்' சுப்பையா என்று அழைக்கப் பட்டவர், வாழ்நாள் முழுவதும் 'சமதர்மம்' என்ற கொள்கையுடன் வாழ்ந்தார்.

1945-ஆம் ஆண்டில் காரைக்குடியில் 'திராவிடர் கழக மாநாட்டுக்கு' ஏற்பாடுகள் நடைபெற்றன. "பெரியார் வரக்கூடாது, வந்தால் ரத்தக் களறியாகி விடும்" எனப் பெரியாருக்கே தந்தி அனுப்பினர் சிலர். அதைப் பாராட்டுப் பத்திரமாக ஏற்று மாநாட்டுக்கு முன்பே மற்றொரு கூட்டம் நடத்தச் சொல்லி, தன் தலைமகன் அண்ணாவுடன் காரைக்குடி வந்து கர்ஜித்தார் பெரியார். அந்தக் கூட்டத்தை நடத்தியவர் சுப்பையா.

### கழகப் பணி

பேரறிஞர் அண்ணா கழகத்தை உருவாக்கியபோது, பலரின் எதிர்பார்ப்புக்கு மாறாக, கழகத்தில் சேர்ந்த இராம.சுப்பையா, பெரியாரின் கொள்கை மாணவராக இயக்கப் பணியைத் தொடர்ந்தார்.

தி.மு.க. இராமநாதபுரம் மாவட்ட மாநாட்டை 1951-இல் நடத்த முடிவு செய்த போது, 'ஆரியமாயை' வழக்கில் அண்ணா கைதாகி சிறையிலிருந்தார். அவரை அதில் கட்டாயம் பங்கேற்கச் செய்ய சுப்பையா அவர்கள் குமாஸ்தா வேடமிட்டுச் சிறையில் அண்ணாவைப் பார்த்து அழைப்பு விடுத்தார். அண்ணா விடுதலையானவுடன் '*Anna released. Attends Conference*' எனச் சம்பத் அனுப்பிய தந்திக்குப் பிறகு மாநாட்டுப் பணியைத் தொடங்கிக் குறுகிய காலத்தில் சிறப்பானதாக நடத்தி முடித்தார்.

### சிறையில் ஒரு மந்திரிசபை

1953-இல் மும்முனைப் போராட்டதை அறிவித்த அண்ணா, தன் தம்பிகளைப் போராட்டக் களம் அனுப்பி வைத்தார். அதில் கல்லக்குடி இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முதல் அணிக்கு முத்தமிழறிஞர் தலைமை தாங்கிய நிலையில், இரண்டாம் அணிக்கு இராம.சுப்பையா தலைமை தாங்கினார். சுட்டெரிக்கும் வெயிலில் கலைஞரும் அவரும் தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்துப் போராடியதற்குச் சிறை தண்டனையைப் பரிசளித்தனர்.

அதனை விரும்பி ஏற்றுச் சிறை சென்றார். சிறைச்சாலையையும் அரசியல் பாசறையாகக் கலைஞர் மாற்றினார். முதலமைச்சராவதற்கு 16 ஆண்டுகளுக்கு முன்பே, சிறைச்சாலையில் பணிகளைச் சிறப்பாக்கிட ஒரு மந்திரி சபை அமைத்து முதலமைச்சராகச் செயல்பட்டார் கலைஞர். அதில், சக சிறைவாசிகள் மீது இராம. சுப்பையா காட்டும் அன்பைப் பார்த்து அவருக்கு உணவுத் துறை அமைச்சர் பொறுப்பை வழங்கினார். அந்தக் கடுமையான காலகட்டத்தையும் கலைஞரின் துணைகொண்டு கடந்தனர் உடன்பிறப்புகள்.

அப்போது, சுப்பையா அவர்களின் மனைவி விசாலாட்சி அவர்கள் அவரைப் பார்க்கச் சிறைக்கு வந்தார். தங்களின் ஒரு வயதே நிரம்பிய குழந்தையைச் சிறைக் கம்பிகளுக்கு இடையே தூக்கிக் காண்பித்தார். ஒரு தந்தையாகத் தன் குழந்தையை ஆரத் தழுவி முத்தமிட நினைத்த சுப்பையா அவர்களுக்கு அனுமதி வழங்க மறுத்தனர் சிறைக் காவலர்கள்.

> **"தமிழினத்தின் தானைத் தலைவராக இருக்கிற கலைஞரின் தலைமையில் தான், இன்றைக்கும் என்றைக்கும் ஒரு தொண்டனாக இருக்க ஆசைப்படுகிறேன்!"**

அன்று சிறைச்சாலையின் கம்பிகளுக்கு இடையே தன் தந்தையின் முழுமையான முகத்தைப் பார்க்கத் துடித்த அந்தக் குழந்தை, இன்று இயக்கக் கருத்துகளை எல்லைகள் கடத்து எல்லாத் தளங்களிலும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் குழந்தைதான் பேராசிரியர் சுப.வீரபாண்டியன்.

### கோடீஸ்வரரை எதிர்த்த கொள்கையாளர்

1957-ஆம் ஆண்டு, கழகம் முதல் தேர்தலைச் சந்தித்தது. காரைக்குடியில் செட்டிநாட்டு ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களை எதிர்த்து, இராம. சுப்பையா அவர்களைப் போட்டியிடச் சொன்னார் அண்ணா. "காரைக்குடியில் ஒரு கோடீஸ்வரரை எதிர்த்து, நாம் ஒரு கோவணாண்டியை நிறுத்துகிறோம். அவர்கள் நினைத்தால், லட்சக்கணக்கில் பணம் கொடுத்து, ஆளையே தூக்கிக் கொண்டு போய்விடுவார்கள். ஆனால், நம் இராம. சுப்பையாவைக் கொள்கைகளை விட்டு யாரும் அசைக்க முடியாது'' என வேட்பாளர் பட்டியலை அறிவிக்கும் போது அண்ணா உரையாற்றினார். அந்தத் தேர்தல் முடிவு தோல்வியாகத்தான் அமைந்தது. ஆனால், அண்ணா சொன்னது போல கொள்கை தோற்றுவிடவில்லை. கழகப் பணியைத் தொடர்ந்தார்.

அண்ணா மறைவுக்குப் பின்னர், வயதில் தனக்கு தம்பியான கலைஞரைத் தலைவராக ஏற்றுச் செயல்பட்டார். அவரின் கொள்கை உறுதிக்கு சிறப்புச் செய்திட, 1972 -ஆம் ஆண்டு அவரைச் சட்டமன்ற மேலவை உறுப்பினராக்கி அழகுபார்த்தார் கலைஞர். 1978 வரை அந்த மக்கள் பணியைச் சிறப்புற மேற்கொண்டார். மீண்டும் 1978-இல் சட்டமன்ற மேலவைத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளித்தார் கலைஞர், தோல்வி உறுதி எனத் தெரிந்தும் 1957 தேர்தலில் அண்ணா சொற்படி செயல்பட்ட சுப்பையா அவர்கள், 1978-இல் கலைஞர் சொற்படி செயல்பட்டார்.

### கடைசியும் முதலும் கலைஞர்

"தமிழினத்தின் தானைத் தலைவராக இருக்கிற கலைஞரின் தலைமையில் தான், இன்றைக்கும் என்றைக்கும் ஒரு தொண்டனாக இருக்க ஆசைப்படுகிறேன்" என 'நானும் என் திராவிட இயக்க நினைவுகளும்' எனும் சுயசரிதையில் பதிவு செய்தார் பெரியவர் இராம.சுப்பையா. அதன்படியே வாழ்ந்தார். அந்தக் கொள்கைத் தங்கத்தின் மறைவு 1997-ஆம் ஆண்டு மே 21-ஆம் தேதி நிகழ்ந்தது. தான் இறந்த பிறகு தனக்கு அணிவிக்கப்படும் முதல் மாலை தலைவர் கலைஞர் வைப்பதாக இருக்க வேண்டும். அதுவும் அவர் முதலமைச்சராக வந்து அந்த மாலையை அணிவிக்க வேண்டும் என்ற அவரின் கடைசி ஆசையை அவ்வாறே நிறைவேற்றினார் கலைஞர்.

அவர் போன்ற கொள்கைச் சுடர்களுக்கு என்றும் அழிவில்லை!

...துடிக்கும்

## ஊடக முடக்கமும் - எதிர்ப்பும்!

**ஒ**ன்றிய பா.ஜ.க. அரசின் ஊதுகுழலாக 'கோடி மீடியாக்கள்' 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றன. அதேநேரத்தில் உண்மைகளைப் பேசும் ஊடகக்குரல்களை நசுக்குவதையும் ஒன்றிய அரசு மிகத் தீவிரமாகச் செய்து வருகிறது. இந்த நிலையில் நாட்டின் பல பகுதிகளில் ஊடகங்களின் குரல்வளை நசுக்கப்படுவதற்கு எதிராக, பத்திரிகையாளர் அமைப்புகள் ஒன்று திரண்டுள்ளன.

இந்திய பத்திரிகையாளர் சங்கம், இந்திய பெண் பத்திரிகை யாளர்கள் சங்கம், டெல்லி பத்திரிகையாளர்கள் சங்கம் உள்ளிட்ட அமைப்புகள் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக, கண்டனத்தைத் தெரிவித்துள்ளன. காஷ்மீர், மணிப்பூரில் போராட்டங்களைச் செய்தியாக்கும் ஊடகர்களைக் கைது செய்வது, இணையதளங்களை முடக்குவது ஆகியவை ஒன்றிய, மாநில அரசுகளின் வழக்கமாக மாறியுள்ளன.

செய்தியாளர்களின் சமூக வலைத்தளங்கள், யு டியூப் சேனல்களை முடக்குவது தொடர்கதையாகி வருகிறது. பல ஊடகர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இணையதள முடக்கத்தில் உலக அளவில் முன்னணி நாடாக இந்தியா உள்ளது. இந்தச் சூழலில் ஊடக அமைப்புகளின் எதிர்ப்புக் குரல் வலுக்கத் தொடங்கி உள்ளது. ஜனநாயக சக்திகள் ஒன்று சேரட்டும்.

## ஃப்ளாஷ்பேக்



### சுறுசுறுப்பு வியப்பு!



அம்பிகாபதி

**1976**-ஆம் ஆண்டு, கழக ஆட்சி கலைக்கப்பட்டிருந்த நேரம். தமிழ்நாடு முழுவதும் கழக முன்னணியினர் கைது செய்யப்பட்டாலும், கழகத்தினர் குடும்பம் குடும்பமாக சென்னை வந்து கலைஞரைச் சந்தித்தவண்ணம் இருந்தனர். ஜூன் 3 அன்று, திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஒன்றியத்திலிருந்து ஒரு பேருந்தில் குடும்பம் சகிதமாக 40 பேர் வந்து சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் தலைவரைச் சந்தித்தோம். எல்லாரையும் அமர வைத்துப் பேசிவிட்டு புகைப்படமும் எடுக்கச் சொன்னார். அப்போது, மன்னை நாராயணசாமி அவர்களும் உடனிருந்தார்கள். தலைவர் கலைஞரிடம் அப்போதிருந்த சுறுசுறுப்பு எங்களை எல்லாம் வியப்பில் ஆழ்த்தியது.

**-எஸ்.ஏ.அம்பிகாபதி, அவைத்தலைவர், திருச்சி வடக்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### சுயாட்சித் தீர்மானம்!

**1974-ஆம் ஆண்டு, தமிழ்நாடு சட்ட மன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார் கலைஞர். எதிர்க்கட்சியாக இருந்த அ.தி.மு.க. உறுப்பி னர்கள் மாநில சுயாட்சி என்பது அண்ணா ஏற்றுக்கொள்ளாத ஒன்று என வாதிட்டனர். அதற்குப் பதில் அளித்த கலைஞர், 1965- ஆம் ஆண்டு வெளிவந்த அண்ணாவின் பேட்டி, 1968 -ஆம் ஆண்டில், அண்ணா முதலமைச்சராக இருந்தபோது, ம.பொ.சி அவர்கள் நடத்திய மாநில சுயாட்சி மாநாட்டில் ஆற்றிய பேருரை ஆகியவற்றை எடுத்துக் கூறினார். ஆனாலும், மாநில சுயாட்சித் தீர்மானத்தை அ.தி.மு.க. வினர் ஏற்றுக்கொள்ளவில்லை.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 221




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131